விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
தபால்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 05 ஞாயிற்றுக்கிழமை (21.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 214

# மானிப்பாயில் இளைஞன் சுட்டுப் படுகொலை



## வாள்வெட்டு கும்பல் மீது சுடப்பட்டதாக பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
மானிப்பாயில் இளைஞன் ஒருவர் நேற்று இரவு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். வாள்களுடன் சென்ற கும்பல் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (15ஆம் பக்கம் பார்க்க)



## நுணாவிலில் கத்திக்குத்து
### முதியவர் படுகாயம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நுணாவில் மேற்குப்பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி 16

## கல்முனை தொடர்பில் தெளிவற்ற தன்மையை தீர்க்க வேண்டும்
### இரா.சம்பந்தன்

(கொழும்பு)
கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை முழு நிர்வாக அதிகாரத்துடன் தரமுயர்த்தும் விடயத்தில் நிரந்தர தீர்வைக் 15

## திருக்கேதீச்சர வளைவை அமைத்தே தீருவோம்

# இந்து அமைப்புகள் ஒன்றாகக் கூடி

# ஏகமனதாகத் தீர்மானம்



(யாழ்ப்பாணம்)
மன்னாரில் கத்தோலிக்க மதகுருமாரின் ஏற்பாட்டில் தள்ளி விழ்த்தப்பட்ட மன்னார் திருக்கேதீச்சர ஆலய வளைவை மீளவும் அமைத்தே திருவது என அனைத்து இந்து அமைப்புகளும் நேற்றையதினம் ஒன்றாகக் கூடி தீர்மானம் நிறைவேற்றின. (15ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் வாதிகள் எம்மை ஏமாற்றி விட்டனர்
*- மன்னார் இந்து குருமார் ஒன்றியத் தலைவர்*

(யாழ்ப்பாணம்)
திருக்கேதீச்சர ஆலய வளைவு உடைக்கப்பட்டபோது தமிழ் அரசியல் வாதிகள் தமது வாக்குகளைப் பாதுகாப்பதற்காக கண்டும் காணாமல் இருந்து கொண்டனர் என மன்னார் இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ மகாதர்மகுமாரக் குருக்கள் தெரிவித்தார்.

நேற்றையதினம் நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் இடம் பெற்ற திருக்கேதீச்சர ஆலய வளைவு தொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் திருக்கேதீச்சர ஆலய 15

## வங்கியில் வேலை பெற்றுத்தருவதாக மூன்றரை இலட்சம் ரூபாய் பண மோசடி
### நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)
வங்கியில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக சகோதரர்களிடம் மூன்றரை இலட்சம் ரூபாய் பணத்தினை பெற்று மோசடி செய்த நபர் ஒருவருக்கு எதிராக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

வல்வெட்டி, கம்பர்மலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரிடமும் அவரது சகோதரியிடமும் மூன்றரை இலட்சம் ரூபாயினை வங்கியில் வைப்பிலிடுமாறு 16

## தமிழ் - முஸ்லிம் உறவின் அவசியத்தை ஏப்ரல் - 21 தாக்குதல் உணர்த்தியுள்ளது
### மக்கள் சந்திப்பில் நீதியரசர் விக்னேஸ்வரன்

(மட்டக்களப்பு)
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் முஸ்லிம் மக்களின் தன்னிலையை அவர்களுக்கு உணர்த்தியுள்ளதுடன் தமிழ்-முஸ்லிம் மக்களது உறவின் அவசியத்தையும் உணர்த்தியுள்ளதாக மண்முனை பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி. விக்னேஸ்வரன் கூறியுள்ளார். மட்டக்களப்பு மாவட்டம் 15

# 90வது இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



திருமதி

## கந்தையா சின்னம்மா

**தம்மளை, அளவெட்டி மேற்கு.**

21.07.2019 இன்று பிறந்தநாளைக் கொண்டாடும் திருமதி **கந்தையா சின்னம்மா** அவர்கள் தம்மளை துர்க்கை அம்பாளின் அனுக்கிரகத்துடன் தொடர்ந்தும் தேக ஆரோக்கியத்துடனும் நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

மனதார வாழ்த்தும்:– **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்**

**தம்மளை,**
**அளவெட்டி மேற்கு.**

**0750414028, 0778225731**


## தொழிலாளர் தேவை

கோண்டாவில் மேற்கு கோண்டாவிலில் உள்ள **K.R.S** உணவு உற்பத்தி நிலையத்துக்கு பெண் தொழிலாளர் தேவை.

(9640)

தொடர்புகளுக்கு

**021 492 1886**


## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொருத்தமானவர் நிறுத்தப்படுவார்

### மகிந்த ராஜபக்ஷ உறுதி

நாட்டின் சித்தாந்தத்திற்கு அமைய பொருத்தமான நபரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற வைபவத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டின் எதிர்காலம் தொடர்பாக சிந்தித்து அது பற்றி நான் தீர்மானம் எடுப்பேன். எவ்வாறாயினும் ஒகஸ்ட் 10ஆம் திகதி வரை நான் தகுதியான வேட்பாளரை தேடுவேன் எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம-3)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## அச்சக பணியாளர்கள் தேவை

கணனி இயக்குநர்கள் (பெண்கள்)
முகாமையாளர் / கணக்காளர் (பெண்கள்)
(கணனி அறிவுடையோர் மட்டும்)
வரவேற்பாளர்கள் (பெண்கள்)
புத்தகம் கட்டுபவர்கள் (இருபாலாரும்)
அலுவலக உதவியாளர்கள் (ஆண்கள்)
■ அனுபவமுள்ளவர்கள் மட்டும்

யாழ்ப்பாணம். தொடர்புகளுக்கு :
(9638) 021 222 4143, 077 616 1125



## மணமகள் தேவை

79, சுவாதி, 5 சூரியன் செவ்வாய் வெளி நாட்டில் இருந்து தற்போது இலங்கையில் சொந்த தொழில் மணமகனிற்கு மணமகள் தேவை. சீதனம் முதன்மை இல்லை

**0778185978, 0750111122**


# 31ம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **தாமோதரம்பிள்ளை அசலாம்பிகை**

இன்று (21.07.2019) மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**29, 6ம் ஒழுங்கை,**
**பலாலி வீதி, கந்தர்மடம்.**

**வ.சுதர்சன் (கண்ணன் - மருமகன்)**
**077 774 1389**

உ
சக்தி துணை



# பண்ணாக மண்ணின் மைந்தன், மணி விழா நாயகன், எங்கள் உள்ளங்கவர்ந்த தோழன்

## திருவாளர் அப்பாத்துரை கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

**(முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர், காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவனம்)**

**21 07.2019 அன்று தனது அகவை 60 பூர்த்தி விழா**

**அன்னார் எமது கிராமத்துக்கும் வெளி இடங்களிலும் உள்ள பொது அமைப்புக்கள் பலவற்றில் அளப்பரிய தொண்டாற்றியவர். அவர் ஆற்றிய பணிகள் சில வருமாறு:**

- பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தில் 1980இல் இருந்து தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற முக்கிய பதவிகளுடன் துறைசார் பதவிகளிலும் இருந்து அளப்பரிய சேவையாற்றி வருகின்றமை அத்துடன் மன்றத்தின் செயலாளராக இருந்து பத்தாவது ஆண்டு நிறைவு விழாவையும் தலைவராக இருந்து மன்றத்தின் வெள்ளி விழாவையும் நடத்தி வைத்தமை மெச்சுதற்குரியது.
- பண்ணாகம் ஸ்ரீமுருகன் சனசமூக சேவா வாலிபர் சங்கத்தின் உபதலைவர், நிர்வாக சபை உறுப்பினர் போன்ற பதவிகள் வகித்து திறம்படச் செயற்படுத்தி வந்தார்.
- யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சங்கானைப் பிராந்திய சபையின் தலைவராகவும் தற்போது உப தலைவராகவும் இருந்து வருகிறார்.
- பண்ணாகம் ஸ்ரீமுருகன் அன்னதான சபையில் நீண்டகால செயலாளராகவிருந்து அளப்பரிய சேவையாற்றியமை.
- பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உப - தலைவர், பொருளாளர், நிர்வாக சபை உறுப்பினர் போன்ற பதவிகளிலிருந்து கிராமத்துக்கு சேவையாற்றியமை
- பண்ணாகம் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தில் அங்கம் வகித்து அதனை திறம்பட வழிநடத்தினார்.
- பண்ணாகம் மக்கள் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தில் முக்கிய பதவிகளுடன் தலைவராக இருந்து அதனை உயர்தர கூட்டுறவுச் சங்கமாக உயர்த்தி வைத்துள்ளார்.
- சங்கானை ப.நோ.கூ.சங்க, பண்ணாகம் கிளை 5இன் செயலாளராக உள்ளார்.
- மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் பெரும் பதவியான பொருளாளராக 2004இல் இருந்து இற்றைவரை தனது கூட்டுறவுக்கான சேவையை ஆற்றி வருகிறார்.
- பண்ணாகம் ஸ்ரீமுருகன் இந்து சமய விருத்திச் சங்கத்தின் நிர்வாகத்தில் பல தரப்பட்ட பதவிகளை வகித்து இந்து மதத்திற்கு அரிய தொண்டாற்றினார்.
- பண்ணாகம் இளம் விவசாயிகள் கழகத்தின் தலைவர், செயலாளர் பதவிகளை வகித்து 1984ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் முதற்தர கழகமாக விளங்கச் செய்தமை.
- லங்கா சீமெந்து நிறுவன கைத்தொழில் பொதுத் தொழிலாளர் தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் வகித்து தொழிலாளர் நலனுக்காக அரும்பாடுபட்டவர்.

இப்பூவுலகில் நீடுகாலம் நோய் நொடியின்றி வாழ வாழ்த்துகின்றோம்
**பண்ணாகம்** எல்லாப் பேறும் பெற்று வாழ பண்ணாகம் பதியுறையும் விசவத்தனை வேலவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
**இணைபிரியா நண்பர் குழாம்**

# விஜயன் வரமுன்பே இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள்;
# பௌத்த பிக்குகள் வரலாற்றைப் புரிந்து செயற்பட வேண்டும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

**விஜய மன்னன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரமுன்பே இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள் காணப்பட்டதாக சிங்கள வரலாற்றாசிரியர்களாலேயே குறிப்பிடப்பட்டுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நல்லூர் கைலாசப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற தென்கயிலை ஆதீன குருமுதல்வர் மீது சுடுநீரால் ஊற்றப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவிக்கும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இராவணன் என்கின்ற சிவபக்தன் தனது தாயாரின் இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்காக கன்னியா வெந்நீரூற்றை ஏற்படுத்தியதாக வரலாற்றுப் பதிவுகள் குறிப்பிடுகின்றன.

தமிழர்கள் சிவபக்தர்கள், இராவணனும் சிவபக்தன். ஆகவே தமிழர் பாரம்பரியம் இராமாயணம் ஊடாக ஏறக்குறைய பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பதிவாகக் காணப்படுகின்றது. இதனை இலங்கையில் கி.பி. 6,7 ஆம் நூற்றாண்டுகளில் பௌத்த மதத்தைப் பின்பற்றிய பௌத்த துறவிகள் புரிந்து செயற்பட வேண்டும்.

விஜயன் இலங்கைக்கு வருகை தர முன்பே இலங்கையில் காணப்பட்ட ஐந்து ஈஸ்வரங்களாக திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் ஆகியன காணப்பட்டதாகச் சிங்கள வரலாற்றாசிரியர்களே குறிப்பிட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாது விஜயன் இலங்கைக்கு வரமுன்பு இயக்கர், நாகர் என்னும் சிவனை வழிபாடு செய்கின்ற பழங்குடி மக்கள் இலங்கையில் வாழ்ந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் ஆதியும் அந் தமும் இல்லாத இந்து மதம் பின்பற்றப்பட்ட இடங்களில் இன்று இராணுவம் பௌத்த விகாரைகளை அமைத்து வருகின்றது. இதற்காக அரசாங்கம் 2 ஆயிரத்து 900 மில்லியன் ரூபாய்களையும் வாரி வழங்கியுள்ளது.

சிங்களவர்களோ பௌத்த மதமோ பின்பற்றப்படாத தமிழர் தாயகப் பகுதிகளில் விகாரை அமைப்பதனையும் அதனைத் தடுத்து நிறுத்தப் போராடிய தென்க யிலை ஆதீனக் குருமுதல்வர் தாக்!! கப்பட்டதனையும் வன்மையாகக் கண்டிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-10)

## தென் கயிலை ஆதீனக் குருமுதல்வர் விவகாரம்

# அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் பதவிகளை இராஜினாமா செய்யுங்கள்

## தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அங்கஜன் எம்.பி. கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

திருகோணமலை தென் கயிலை ஆதீனக் குருமுதல்வர் மீது சுடுநீர் ஊற்றப்பட்டமைக்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தமிழ் எம்.பிக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். நல்லூர் கைலாசப்பிள்ளையார் ஆலய முன்றலில் இடம்பெற்ற தென் கயிலை ஆதீனக் குருமுதலவர் மீது சுடுநீர் ஊற்றப்பட்டமையைக் கண்டித்து இடம்பெற்ற அறவழிக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையின் தமிழர் பாகங்களில் இடம்பெற்றுவரும் இந்து மதத்திற்கு எதிரான செயற்பாடுகளால் எமது இனத்தையும் மதத்தையும் இழிவுபடுத்தும் செயற்பாடுகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

ஓர் இன அடையாளங்களை அழிப்பதும் அதனை மாற்ற நினைப்பதும் பல்லின சமூகங்கள் வாழும் இலங்கைக்கு நாட்டின் ஆரோக்கியத்தை கேள்விக்குறியாக்கும் செயற்பாடாகும்.

இலங்கையில் எந்தவொரு அரசாங்கமும் ஆட்சிக்கு வரும் போது இந்து மதம் சார்ந்த வரலாறுகள் அழிக்கப்படுவது காலம் காலமாக நடந்தேறி வரும் உண்மைச் சம்பவங்களாகும்.

எனவேதான் குறித்த சம்பவங்கள் ஓர் இருவர் தீர்க்கக்கூடிய பிரச்சினையாக இருக்க முடியாது.

அனைத்துத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஓரணியில் திரண்டு குரல் கொடுக்க வேண்டும்.

அதற்கும் இவ் அரசாங்கம் செவிமடுக்காவிட்டால் மக்களால் வழங்கப்பட்ட பதவிகளை மக்களுக்காக திறக்க வேண்டும். நானும் தயாராக இருக்கிறேன் என அங்கஜன் எம்.பி.மேலும் தெரிவித்தார். (ஜ-10)



## அரசியல் சுய தேவைகளுக்காக அரசியலமைப்புக்கு முரணாக செயற்படக்கூடாது

## முஜிபுர் ரஹ்மான் கூறுகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் முதலில் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். அரசியல் சுய தேவைகளுக்காக அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்டு செயற்படுவது முரணானதாகும் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம்சாட்டினார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் எத்தனை வருடங்கள் என்ற சந்தேகம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு மீண்டும் ஏற்பட்டுள்ளது. ஆறு வருடகாலமாக ஜனாதிபதியின் பதவிக் காலம் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக ஐந்து வருடமாக குறைக்கப்பட்டமையினை சுதந்திரக் கட்சியினர் நன்கு அறிவார்கள். அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் எவ்விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது அறியாமல் எவரும் ஆதரவு வழங்கவில்லை.

எந்நிலையிலும் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்து வருடத்திற்கு மேல் நீடித்துக் கொள்ள முடியாது. பதவியில் மேலதிகமாக இன்னும் குறுகிய காலம் இருக்கலாம் என்ற நோக்கத்திலே பதவிக் காலம் தொடர்பில் தொடர்டுகின்றது. அரசியல் தேவைகளுக்காக அரசியலமைப்பினை தேவைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ள முடியாது என மேலும் தெரிவித்தார். (ஐ)

# சிம்பாப்வே அணிக்கு சோதனை

## தடை விதித்தது ஐ.சி.சி., அதிர்ச்சியில் கிரிக்கெட் உலகு




கிரிக்கெட் சபையில் அரசியல் தலையீடு காரணமாக, சிம்பாப்வே அணிக்கு ஐ.சி.சி., தடை விதித்தது. ஐ.சி.சி., வழங்கும் நிதி நிறுத்தி வைக்கப்பட்டது.

கடந்த 1999 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா, தென்னாபிரிக்காவை வீழ்த்தியது சிம்பாப்வே அணி. இதன் பின் அணி நிர்வாகத்தில் அரசியல் தலையீடு அதிகரித்தது. 2004க்குப் பின் முன்னணி வீரர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

சமீத்திய கிரிக்கெட் நிர்வாகிகள் தேர்தலில் முறைகேடு நடந்ததாக சிம்பாப்வே அரசின் விளையாட்டு மற்றும் பொழுது போக்கு கமிஷன் (எஸ்.ஆர்.சி.,) எதிர்ப்பு தெரிவித்தது. இருப்பினும் முகுலானி மீண்டும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதையடுத்து கடந்த ஜூன் 22ம் தேதி சிம்பாப்வே கிரிக்கெட் சபை கலைக்கப்பட்டது. கிரிக்கெட் சபையை நிர்வகிக்க இடைக்கால கமிட்டியை அரசு அமைத்தது. இதுகுறித்து விவாதித்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,), விதிகளை மீறி செயற்பட்ட சிம்பாப்வே அணியை தடை செய்வது என ஒரு மனதாக முடிவு செய்தது. இது உடனடியாக அமலுக்கு வருகிறது.


சிம்பாப்வேயின் விளையாட்டுதுறை ஆணைத்தின் தலைவர் ஜெரால்ட் மோட்சேவா

**காரணம் என்ன**

சிம்பாப்வே அரசு பொருளாதார சிக்கலில் உள்ளது. பணவீக்க விகிதம் அதிகமாக உள்ளதால் விலைவாசி உயர்வு கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவு அதிகரித்துள்ளது. அரசு கஜானா காலியாகி விட்டது. மறுபக்கம் சிம்பாப்வே கிரிக்கெட் வளர்ச்சிக்கு ஐ.சி.சி., சார்பில் தாராள நிதியுதவி செய்யப்படுகிறது. கிரிக்கெட் சபையை வளைப்பதன் மூலம், இந்த பணத்தை அரசு தனது செலவுகளுக்கு பயன்படுத்திக் கொள்வதாக கூறப்படுகிறது.

◆ இதனால் ஐ.சி.சி., வழங்கும் நிதி உடனடியாக நிறுத்தி வைக்கப்படும்.

◆ ஐ.சி.சி., நடத்தும் எவ்வித தொடரிலும் சிம்பாப்வே அணி பங்கேற்க முடியாது. அடுத்து வரும் ஆண்கள் (அக்.,) மற்றும் பெண்களுக்கான 'ரி20' (ஓக.,) உலகக் கிண்ண தகுதிச்சுற்றில் பங்கேற்பது சந்தேகம்தான்.

ஐ.சி.சி., சேர்மன் சஷாங்க் மனோகர் கூறுகையில், "கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம்.

சிம்பாப்வேயில் நடந்த சம்பவங்கள் விதிகளை மீறிய செயல். இதை நாங்கள் அனுமதிக்க முடியாது. கடந்த ஜூன் மாதம் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் தொடர வேண்டும். அடுத்த மூன்று மாதத்திற்குள் இது நடந்தால், தடையை விலக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்," என்றார்.

**முதன் முறை**

ஐ.சி.சி., டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணி (சிம்பாப்வே) தடை செய்யப் படுவது இதுவே முதன் முறை. இதற்கு முன் 2015ல் இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு ஏற்பட்ட போது ஐ.சி.சி., எச்சரித்தது. மற்றபடி உறுப்பு அணிகளான நேபாளம், அமெரிக்கா இதற்கு முன் தடை செய்யப்பட்டன.

**வேலை போனது**

சிம்பாப்வே அணி முன்னாள் அணித் தலைவர் பிரண்டன் ரெய்லர் கூறுகையில், "ஐ.சி.சி., முடிவினால் நூற்றுக்கணக்கான நேர்மையான மக்கள், வீரர்கள், பணியாளர்கள் வேலை இழந்துள்ளனர். எங்களது இதயமே நொறுங்கி விட்டது," என்றார்.



**திடீர் ஓய்வு**

ஐ.சி.சி., தடை காரணமாக கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு அறிவித்தார் சிம்பாப்வே அணியின் சகலதுறை வீரர் சொலமன் மையர் (வயது-29). இதுகுறித்து அவர் கூறுகையில், "தேசிய அணிக்காக பங்கேற்பது பெரிய கௌரவம். தற்போது அணியை தடை செய்த நிலையில் அனைத்துவித சிம்பாப்வே கிரிக்கெட்டில் இருந்தும் விடை பெறுகிறேன். இதை சக வீரர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இது துரதிர்ஷ்டவசமானது," என்றார்.



**இதயம் நொறுங்கியது**

இந்திய அணி வீரர் அஷ்வின் கூறுகை யில், "சிம்பாப்வே அணிக்கு தடை என்ற செய்தியால் வீரர்கள், ரசிகர்கள் இதயம் நொறுங்கி இருக்கும். தாங்க முடியாத இந்த துயரத்தை தான் சிக்கந்தர் ராஜா வெளிப்படுத்தினார். சிம்பாப்வேக்கு மீண்டும் கிரிக்கெட் திரும்ப வேண் டும் என பிரார்த்திக்கிறேன்," என்றார்.

# இந்திய அணி இன்று தேர்வு

## புதுமுகங்களுக்கு இடம் கிடைக்குமா?

மே.தீவுகள் தொடருக்கான இந்திய அணி தேர்வு இன்று நடக்கிறது. அணித் தலைவர் ஹோலி தேர்வுக் குழு கூட்டத்தில் பங்கேற் கிறார்.

மே.தீவுகள் செல்ல உள்ள இந்திய அணி தலா மூன்று 'ரி20', மூன்று ஒரு நாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதலில் 'ரி20' தொடர் நடக்கிறது. முதல் இரு போட்டிகள் (ஓக. 3, 4) அமெரிக்காவின் புளோரிடாவில் நடக்கவுள்ளது. இதற்கான இந்திய அணி வீரர்கள் தேர்வு இன்று நடக்கிறது.

தேர்வுக்குழு தலைவர் பிரசாத் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் அணித் தலைவர் ஹோலி பங்கேற் கிறார்.

**ஓய்வு யாருக்கு**

அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ள 'ரி20' உலகக்கிண்ணத் தொடருக்கு அணியை தயார் செய்யும் வகையில் தோனிக்குப் பதில் இளம் வீரர் ரிஷாப் பண்ட் இடம் பெறுவார்.

ஹோலி, வேகப்பந்து வீச்சாளர் பும்ரா, புவனேஷ்வர் குமார், மொஹமட் ஷமி, 'சகலதுறை வீரர்' பாண்ட்யா உள்ளிட்ட 'சீனியர்' வீரர்களுக்கு, 'ரி20', ஒருநாள் தொடர்களில் 'ரெஸ்ட்' தரப்படும் எனத் தெரிகிறது.

ஒருவேளை ஹோலி ஓய்வு எடுத்தால், அணித் தலைவராக ரோகித் சர்மா நியமிக்கப்படலாம். காயத்தில் இருந்து மீளாத ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஷிகர் தவான், பிரித்வி ஷா இருவரும் பெங்களூரு தேசிய அகடமியில் உள்ளதால் தேர்வு செய்யப்பட வாய்ப்பில்லை. மயங்க் அகர்வால், லோகேஷ் ராகுல் ஜோடி ஆரம்பம் கொடுக்கலாம்.

**புதுமுக வாய்ப்பு**

ஓக. 22ல் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடருக்கு ஹோலி, பும்ரா அடங்கிய முழு மையான இந்திய அணி செல்லும் என நம்பப்படு கிறது. இதனால், தற்போது மே.தீவுகளில், இந்திய 'ஏ' அணிக் காக விளையாடி வரும் நவ்தீப் சைனி, கலில் அகமட், குர்னால் பாண்ட்யா, மணிஷ் பாண்டே, ஸ்ரேயாஸ் ஐயர், சுப்மன் கில் உள்ளிட்டோர்

# அல்ஜீரியா சம்பியன்



வெற்றிக் கிண்ணத்துடன் அல்ஜீரிய வீரர்கள்

ஆபிரிக்க நாடுகளுக்கு இடையிலான கால்பந்து தொடரில் அல்ஜீரியா அணி சம்பியன் பட்டம் வென்றது. இறுதிப் போட்டியில் செனகல் அணியை தோற்கடித்தது.

எகிப்தில், ஆபிரிக்க நாடுகளுக்கு இடையிலான கால்பந்து கிண்ணம் நடந்தது. தலைநகர் கெய்ரோவில் நடந்த இறுதிப் போட்டியில் செனகல், அல்ஜீரியா அணிகள் மோதின.

போட்டியின் ஆரம்பத்திலேயே அல்ஜீரியா அசத்தியது. இரண்டாவது நிமிடத்தில் பாக்தாத் பவுன்ட்ஜா கோல் அடித்தார். முதல் பாதியில் எதிரணி பதிலடி தராததால், அல்ஜீரியா 1-0 என முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியிலும் செனகல் வீரர்களின் போராட்டத்திற்கு பலன் கிடைக்கவில்லை. முடிவில், அல்ஜீரியா அணி 1-0 என்ற கணக் கில் வெற்றி பெற்றது.

இதன்மூலம், இரண்டாவது முறையாக (1990, 2019) கிண்ணம் வென்றது. செனகல் அணி 2002க் குப்பின், மீண்டும் இறுதிப் போட்டியில் சம்பியன் பட்டத்தை தவறவிட்டது.



# உடல் நிலை மோசம்

# உண்ணாவிரதமிருக்கும் கைதி தொடர்பில் அமைச்சர் மனோவை தலையிடுமாறு கோரிக்கை



(கொழும்பு)

மகசீன் சிறைச்சாலையில் உள்ள கைதி யொருவர் கடந்த 16 ஆம் திகதி முதல் நீரின்றி உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்.

இவரது உடல் நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் படுகினறது.

முன்னாள் திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவரான 62 வயதுடைய கனக சபை தேவதாசன் என்பவரே இவ்வாறு நீர் கூட அருந்தாது உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்.

கோட்டை புகையிரத நிலையம் குண்டு வெடிப்பில் கடந்த 2007 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இவருக்கு எதிராக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஒரு வழக்கில் ஆயுள் தண்டனையும், மற்றொரு வழக்கில் 20 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

குறித்த இரு வழக்குகளிலும் இவரே தனக்காக வாதாடியிருந்தார்.

தனது வழக்கில் சாட்சியங்களையும், ஆதாரங்களையும் முன்வைப்பதற்காக தனக்கு பிணை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பில் அவர் தனது கோரிக்கைகளை எழுத்து மூலம் அதிகாரிகளுக்கு அறிவித்தும் அதற்கான பதில்கள் இதுவரை கிடைக்காத நிலையில் தான் நீதி அமைச்சுக்கு அனுப்பிய கடிதங்கள் சிறை அதிகாரிகளால் அனுப்பி வைக்கப்பட் டதா? என்பது தொடர்பிலும் தனக்கு சந்தேகம் உள்ளதாகவும் தெரிவித்து உண்ணாவிரதம் இருக்கும் கைதியின் உடல் நிலை மிகவும் மோசடைந்துள்ளது.

இதுவரை அவரை வைத்தியர் மட்டுமே சென்று பார்வையிட்டுள்ளார். அதிகாரிகளோ , அரசியல்வாதிகளோ சென்று பார்வையிடவில்லை.

எனவே அவர் சார்பில் மகசீன் சிறையில் உள்ள ஏனைய அரசியல் கைதிகள் அமைச்சர் மனோ கணேசனிடம் தங்களது விடயத்தில் தலையிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் சபீண்டிகரண அழைப்பும்

அமரர். வீரகத்தியர் சின்னத்தம்பி வீரசிங்கம்



எமது குடும்பத் தலைவர் அமரர் வீரகத்தியர் சின்னத்தம்பி வீரசிங்கம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன விருந்தும் 23.07.2019 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

அந்திரன்,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

(C-7052)

இங்ஙனம்
குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர் திருமதி
பொன்னம்பலம் நாகமுத்து



பொன்னுடன் கலந்த
முத்தே
பொங்கி எழும்
தாரகையாய்
கண்கள்
இமைப்பதற்குள்
கலைந்ததுவோ
உன் ஒளி அலைகள்

துயர் அகலும் நண்பர் குழாம்
வினோபா பாலர் இல்லம்,
வினோபா நகர் , கச்சாய்.

(9649)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## இராசி பலன்

**மீனம்:** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, வியாபாரத்தில் சிறு மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.

**மேடம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு, தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கும்பம்:** உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** உதவுவதாக சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**மகரம்:** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, களஸ்திர நன்மையுண்டு.

**தனுசு:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**துலாம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** உடல் நலன் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

### கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு. புத. சுக் |
| சந் | இராசி பலன் — கிரகநிலை, சந்திராஷ்டமம் பூரம் இரவு 2.53 மணிக்கு மீனம்-சந் | | சூரி. செவ் |
| | | | |
| சனி. கேது | குரு | | |

21.07.2019

ஆடி 05, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு

சதுர்த்தி முற்பகல் 10.25 மணிவரை

சதயம் காலை 6.59 மணிவரை

சுபநேரம் 9.01-10.31 மணிவரை

இராகுகாலம் 4.31-6.01மணிவரை

வளவன்



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ண காம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்றது.

# நெல்லியடி பஸ் நிலையத்துக்கான மின் கொடுப்பனவு வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட நெல்லியடி பேருந்து தரிப்பு நிலையத்துக்கான மாதாந்த மின் கட்டணம் இலங்கை போக்குவரத்துச் சபை பருத்தித்துறை நிர்வாகத்தால் செலுத்தப்படுகின்றது என இலங்கை போக்குவரத்து சபை பருத்துறை சாலையின் பிரதம கணக்காளர் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபையின் காணியில் அமைக்கப்பட்ட குறித்த பேருந்து தரிப்பிடத்திலுள்ள மின் விளக்குகள் ஒளிர்வதில்லை எனப் பொதுமக்கள் கடந்த வாரம் வலம்புரிப் பத்திரிகையிடம் குற்றச்சாட்டை முன்வைத்தனர். இது தொடர்பில் கரவெட்டி பிரதேச சபையின் செயலாளரைத் தொடர்பு கொண்ட போது குறித்த கட்டடத்தின் மின் விநி யோகம் இலங்கை மின்சார சபையால் நிறுத்தப்பட்டுள்ளதாவும் ஏன் எனக் கேட்டபோது குறித்த பேருந்து நிலையத்தின் மின் விநியோகத்திற்கான பணத்தை பருத்தித்துறை இ.போ.ச. செலுத்தாத நிலையில் தடைப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் பருத்தித்துறை இ.போ.ச. நிர்வாகத்திடமும் பருத்தித்துறை மின்சார சபையிடமும் வினவிய போது. குறித்த கட்டடத்திற்கான மின் விநியோகம் சில மாதங்களுக்கு முன்பு நிறுத்தப்பட்டதென்றும் ஆனால் தற்போது வழமைபோல் வழங்கப்படுகின்றது என்றும் தெரிவித்தார்கள். (5-10)

# 'அநேகி' உரைக்கவி தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

அம்பிகை பஞ்சலிங்கத்தின் "அநேகி" உரைக்கவித் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.15 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.பல்கலைக் கழக சமூகவியல் துறைத் தலைவர் இ.இராஜேஸ்கண்ணன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஓய்வு நிலை ஆங்கில விரிவுரையாளர் கவிஞர் சோ.பத்மநாதன், சாகித்திய வீணாலயா கோபிகிருஷ்ணா விதுஷா தம்பதியினர், ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் கோகிலா மகேந்திரன், யாழ். மாநகரசபை ஆணையாளர் கவிஞர் த.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததானம் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் ஞான வீர சனசமூக நிலையத்தில் இடம்பெறும் குருதிக் கொடையாளர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணைநகர் ஸ்ரீமத் லாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான (ஸ்ரீவண்ணை வைத்தீஸ்வரன் கோவில்) தேவி திவ்விய மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும்.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5)

# வடமாகாண பனை எழுச்சி வாரம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை எழுச்சி வாரம் நாளை 22 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் காலை 9.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் கண்காட்சி, விற்பனைக் கூடங்கள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (5)




# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி பழவத்தை சமரபாகு சல்லியாவத்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டப் பெருவிழா நாளை மறுதினம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.32 மணிமுதல் நண்பகல் 12.02 மணிவரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார். (5)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் 45 ஆவது விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் மத்திய விளையாட்டு மைதானத்தில் முன்பள்ளித் தலைவர் கா.சிவசோதி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஸ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய பிரதி அதிபர் திருமதி. தே.மைதிலி, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ.கோபாலேந்திரன், கௌரவ விருந்தினர்களாக யா. அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை ஆசிரியர்திருமதி. கு.காமினி (பழைய மாணவி), யாழ்.வளலாய் அ.மி.த.க. பாடசாலை ஆசிரியர் திருமதி. பொ.கோமதி (பழைய மாணவி) ஆகியோர் கலந்து கொள்வர். (5)



யாழ்.கோப்பாய் ஊறணி குடியிருப்பு வீதி கடந்த திங்கட் கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த் தனால் திறந்து வைக்கப்பட்டது. இதில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் தர்சன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் இ.செல்வராஜா, சி.அகீபன், நகரசபை முன்னாள் உறுப்பினர் கிசோர் ஆகியோர் கலந்துகொண்டனர். (படம்:-கிசோர், கொடிகாமம் செய்தியாளர்)

# க.பொ.த.உ/த மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 2019 க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் முதலாம் தடவை தோற்றும் மாணவர்களுக்கான அனமதி அட்டைகள் நாளை 22 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணியளவில் வழங்கப்படும். மாணவர்கள் அடையாள அட்டையுடன் வருகை தருமாறு அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன் அறிவித்துள்ளார். (5)

• • • • • • • • • • • • • • • • • • • •

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் 2019 க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் முதலாம் தடவை தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை மறுதினம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் வழங்கப்படும். மாணவர்கள் பாடசாலைச் சீருடை அணிந்து பெற்றோருடன் தேசிய அடையாள அட்டையையும் கொண்டு வர வேண்டும் எனவும் இரண்டாம் தடவை தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. கிடைக்கப்பெற்றதும் அறிவிக்கப்படும் எனவும் அதிபர் ஞானசம்பந்தன் அறிவித்துள்ளார். (5)


# வீட்டுத்திட்ட அனுமதிகளை தாமதிக்காமல் வழங்குங்கள்

## நகரசபை உறுப்பினர்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமையவுள்ள வீட்டுத்திட்ட வீடுகளுக்கான உரிய அனுமதிகளை நகரசபையினர் இழுத்தடிப்புச் செய்யாமல் உடனடியாகவழங்கவேண்டும்எனசாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இக் கோரிக்கையை முன்வைத்தனர். மேலும் அவர்கள் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்

வீட்டுத் திட்ட வீடுகளுக்கான அனுமதிகளை உரிய நேரத்தில் வழங்காமல் இழுத்தடிப்புச் செய்யும் போது வீட்டுத்திட்டம் கிடைக்காமல் போகும் நிலை காணப்படுகிறது. அனுமதிகளை உடனடியாக வழங்கி வறிய மக்களுக்கு வீட்டுத் திட்டம் கிடைக்க உதவ வேண்டும். அத்துடன் நகரசபையில் பணிபுரியும் தொழிலாளிகளுக்கு வீட்டுத் திட்ட உதவிக் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நகரசபையினர் முயற்சிக்க வேண்டும். எனமேலும்அவர்கள்தெரிவித்தனர். சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மகிழங்கேணிக் கிராம மக்கள் மூன்று வருடங்களாக வீட்டுத் திட்டத்திற்காக தவம் இருந்த நிலையில் தற்போது 51 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமம் மகிழங்கேணியில் அமையவுள்ளது.குறித்த மக்களுக்கான காணிகளை நகரசபையினர் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஊடாக கடந்த 2016ஆம்ஆண்டுவழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது. (5-30)



யா/உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையின் தரம்-3 தொடக்கம் தரம்-05 வரையான மாணவர்களின் ஆங்கிலக் கண்காட்சி நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

# இளைஞர்,யுவதிகளுக்கு இராணுவப் பயிற்சியை வழங்கும் யோசனையை நான் ஆதரிக்கின்றேன்

## சரத் வீரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையின் பின்னர் பல்கலைக்கழகம் தெரிவாகும் இளைஞர், யுவதிகளுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கும் யோசனையை நான் ஆதரிக்கிறேன் என ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையின் பின்னர் பல்கலைக்கழகம் தெரிவாகும் இளைஞர், யுவதிகளுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கும் யோசனையை நான் ஆதரிக்கிறேன். இராணுவப் பயிற்சி என்றவுடன் ஆயுத மேந்திப் போராடுவது என்ற தவறான புரிதல் காணப்படுகின்றது.

ஆனால் ஒழுக்கத்தைப் போதிப்பதே அதன் அடிப்படையாகும். எனவே முறையான பாடத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, அதற்கமைவாக பயிற்சி வழங்கப்படுவது சிறப்பானதாகும்.

அனைவரிடத்திலும் ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டுமாயின், க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பின்னர் பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சியை வழங்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் கடந்த வாரம் தெரிவித்தார். இதுகுறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ஐ)


## கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி வைரவிழா மலர் - 2019

வைரவிழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள வைரவிழாவுக்கான ஆக்கங்கள் கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள், பெரியோர்களிடமிருந்து கோரப்படுகின்றன. ஆக்கங்கள் A4 தாளில் (கையெழுத்தில்) 5 பக்கங்களுக்கு உட்பட்டவையாக இருத்தல் நன்று. கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்கு 06.08.2019ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம். தாமதமாக கிடைக்கப் பெறும் ஆக்கங்களை மலரில் இணைத்துக் கொள்வதில் சிரமங்கள் ஏற்படலாம். ஆக்கத்துடன் ஆக்கியோரின் பெயர், தொலைபேசி இலக்கம் முதலிய விபரங்களுடன் பாஸ்போட் அளவு கலர் புகைப்படமும் இணைத்து அனுப்புவது கட்டாயமானதாகும்.

அதிபர்
வைரவிழா ஏற்பாட்டாளர் குழு,
கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி,
தருமபுரம், பரந்தன்.
தொடர்புக்கு: 077 428 9563, 021 206 0400

(C-7053)



## உங்களின் நலன் கருதி
நொதேன் சென்றல் ஆய்வுகூடத்தின்




இலவச நடமாடும் மாதிரி சேகரிப்பு சேவைகள்

இப்பொழுது ஆரம்பம்!

உங்கள் வைத்தியரால் கூறப்படுகின்ற ஆய்வுகூடப் பரிசோதனைகளை எந்தவித சிரமமுன்றி செய்து கொள்வதற்கு அழையுங்கள்

077 343 9988

| | | |
|---|---|---|
| பயிற்றப்பட்ட ஆய்வு கூடப் பணியாளர்கள் உங்களது வசதிகளுக் கேற்றவாறு உங்கள் வீட்டிற்கே வருகை தந்து மாதிரிகளை சேமிப்பார்கள். | உங்களது பரிசோதனை அறிக்கைகளை கால தாமதமின்றி பெற்றுக் கொள்ள முடியும். | மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு உங்களுடைய பரிசோதனையை 10% விலைக்கழிவுடன் செய்து கொள்ளலாம். |

### நொதேண் சென்றல் ஆய்வுகூடம்
### Northern Central Laboratory




யாழ்.நகரில் 24 மணிநேர சேவைகளைக் கொண்ட ஒரே ஒரு ஆய்வுகூடம்

உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பத்துடன் சிறப்புத் தேர்ச்சி பெற்ற குழுவினரால் விசேட வைத்தியர்களின் மேற்பார்வையின் கீழ்...

(C-7051)

நொதேண் சென்றல் வைத்தியசாலை,
இல.342, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2263


# தலவாக்கலையில் வெள்ளம் 9 குடும்பங்கள் பாதிப்பு



(தலவாக்கலை)

மலையகத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக தலவாக்கலை பேர்ஹாம் தோட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் 09 குடும்பங்ளை சேர்ந்த 44 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தலவாக்கலை பேர்ஹாம் தோட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தினால் 9 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும் உயிராபத்துகள் எதுவும் ஏற்படவில்லையென்றும் சில பொருட்கள் மட்டும் சேதமாகியுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இதன்காரணமாக இக்குடியிருப்பில் வசித்து வந்த 44 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதுடன், தோட்ட சிறுவர் நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட 44 பேரில் 9 ஆண்களும் 12 பெண்களும் 23 சிறுவர்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 84 அமைச்சரவைப் பத்திரங்களுக்கு அனுமதி

(கொழும்பு)

அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலக அலுவலகத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் 84 அமைச்சரவை பத்திரங்களுக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது என இராஜாங்க அமைச்சர் லகி ஜயவர்தன தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த அமைச்சரவைக் கூட்டம் அன்றைய தினம் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




காரைநகர் வியாவில்
திருவருள்மிகு பூரணா புஷ்கலா
சமேத ஹரிஹர புத்திர
ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்
திவ்விய மகோற்சவம்-2019

22.07.2019 திங்கட்கிழமை :- கொடியேற்றம்
மு.ப. 10 மணி வசந்த மண்டப பூசை

29.07.2019 திங்கட்கிழமை : வேட்டைத்திருவிழா
(பி.ப. 5 மணி)

30.07.2019 செவ்வாய்க்கிழமை : இரதோற்சவம்
மு.ப. 8.00 மணி வசந்த மண்டப பூசை

31.07.2019 புதன்கிழமை: ஆடி அமாவாசை விரதம்
தீர்த்தோற்சவம்
மு.ப. 8.00 மணி வசந்த மண்டப பூசை

22.07.2019 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். திருவிழாக்களில் அடியார்கள் கலந்து கொண்டு ஹரிஹர புத்திர ஐயப்ப சுவாமியைத் தரிசித்து திருவருள் பெற்றுய்வீர்களாக.

வியாவில், காரைநகர். ஆலய அறங்காவலர்.

விளம்பர அனுசரணை:
கஜமுகன் ஹார்ட்வெயர்
147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-7047)

# "அரசைக்காப்பாற்ற நினைப்பவர்களே அரசியல் கைதிகளைக்காப்பாற்று"

## கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மட்டக்களப்பில் போராட்டம்

(ஏறாவூர்)

அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி. மட்டக்களப்பில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நேற்று சனிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முற்போக்குத் தமிழர் கூட்டணியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

'போராளிகள் பயங்கரவாதிகள் அல்லர்'. 'பயங்கரவாதி என்ற போர்வைக்குள் இன்றும் ஏன் சிறைக்குள் எம்மவர்' மாத்திரம்', 'அரசைக் காப்பாற்ற நினைப்பவர்களே அரசியல் கைதியை காப் பாற்று' உள்ளிட்ட பல்வேறு வாச கங்கள் எழுதப்பட்ட பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியுள்ளனர்.

மேலும் தற்போதைய அரசாங்கம் தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆதரவிலேயே தங்கியுள்ளதென்றும் எனினும் தமிழர்கள் விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லையென்றும் போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (ஐ)




## ஹெரோயினுடன் மூவர் கைது

நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் நேற்று ஹெரோயின் போதைப் பொருளுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாரம்மல, ஹொரொம்பாவ பிரதேசத்தில் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 806 கிராமும் 660 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதவிர இரத்மலானை பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பில் 02 கிராமும் 410 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 34 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை பேலியகொட. நுகேபார பிரதேசத்தில் 03 கிராமும் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 28 வயதுடைய பேலியகொட பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## கஜபாகு போர்க்கப்பலுக்கு அமெரிக்கா வாழ்த்து

(கொழும்பு)

இலங்கை கடற்படையில் அண்மையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பலான எஸ்.எல்.என்.எஸ். கஜபாகுவுக்கு அமெரிக்கா வாழ்த்து தெரிவித்துள்ளது.

அமெரிக்க கடலோரக் காவல் படையில் இருந்து நீக்கப்பட்ட போர்க்கப்பல் ஒன்றை இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா கொடையாக வழங்கியிருந்தது.

இந்தக் கப்பல் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு, எஸ்.எல்.என்.எஸ். கஜபாகு என்று பெயரிடப்பட்டு, தற்போது ஆழ்கடல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

எஸ்.எல்.என்.எஸ். கஜபாகு ஆழ்கடல் கண்காணிப்பில் முதலாவது போதைப்பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கையை சில நாட்களுக்கு முன்னர் மேற்கொண்டது.




இலங்கையின் தென்பகுதி கடலில் 69 கிலோ ஹெரோயின் போதைப்பொருளை கடத்தி வந்த படகு ஒன்றை இந்தப் போர்க் கப்பல் கைப்பற்றியது.

இதுகுறித்து இலங்கை கடற்படை கீச்சகத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ள நிலையில், அதற்கு அமெரிக்கா வாழ்த்து தெரிவித்துள்ளது.

"எஸ்.எல்.என்.எஸ். கஜபாகு மாலுமிகள் வெற்றிகரமாக போதைப் பொருள் கைப்பற்றும் நடவடிக்கையை மேற்கொண்டதற்கு வாழ்த்துகள்.

அமெரிக்காவின் பரிசான இந்தக் கப்பல், இலங்கையின் இறைமையையும் பாதுகாப்பையும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு புதிய திறன்களை வழங்குகிறது" என்று அமெரிக்க தூதரகம் பதிலுக்கு கீச்சகப் பதிவு ஒன்றையும் இட்டுள்ளது. (ஐ)

## 127 இந்து ஆலயப் புனரமைப்பிற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு நாளை

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசனின் வழிகாட்டலில், இந்து ஆலயங்கள், இந்து சமய அறநெறிப் பாடசாலைகள் என்பவற்றை வலுப்படுத்தும் "தெய்வீகச் சேவை" திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு, மட்டக்களப்பு, கல்லடியில் அமைந்துள்ள துளசி மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை மு.ப 9.30 மணிக்கு இடம்பெறும்.

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில், மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டத்திலுள்ள 127 ஆலயங்களுக்குப் புனரமைப்பிற்கான நிதியுதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் அவசியம் - சம்பிக்க

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான வேலைத் திட்டமொன்று, நாட்டுக்குத் தேவைப்படுவதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலுக்கு சாதாரண தரம், உயர்தரம் சித்தியடையாதவர்களை முன்னிறுத்த எதிர்பார்த்திருந்தால், அது நாட்டிலுள்ள படித்த சமூகத்துக்கு செய்யும் மிகப்பெரிய அவமானம் என்றும் தெரிவித்தார்.

எதிர்கால வேலைத் திட்டங்களுடன் கூடிய வேட்பாளருக்கே அன்றி ஒவ்வொரு குழுவினர் பெயரிடும் நபர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேவையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## வயோதிபரின் சடலம் மீட்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டான் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் மாலை வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் சர்வோதய வீதியில் உள்ள வீடொன்றில் இருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த பத்து வருடங்களாக தனிமையில் இருந்து வந்த வயோதிபரான கணேசமூர்த்தி சாமித்தம்பி (வயது-74) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## தும்புத் தொழிற்சாலையில் தீ

(மாதம்பே)

மாதம்பே, சுதுவெல்ல பிரதேசத்தில் இயங்கிவந்த தும்புத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் தொழிற்சாலைக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 11 மணியளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலைக்கு அருகில் இருந்து அங்கு சேவையாற்றும் குடும்பம் ஒன்று விபத்தைக் கண்டு உரிமையாளர் மற்றும் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்பதுடன், தீயினால் தொழிற்சாலையில் இருந்த இயந்திரங்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன.

தீயினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன், மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## அம்பாந்தோட்டையில் முதலிட பிரான்ஸ் முதலீட்டாளர்கள் ஆர்வம்

### மகிந்தவிடம் பிரான்ஸ் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டைத் துறைமுகத்திலும், தோட்டத் தொழில் துறையிலும் முதலீடுகளைச் செய்வதற்கு பிரெஞ்சு முதலீட்டாளர்கள் அக்கறை கொண்டுள்ளதாக, இலங்கைக்கான பிரெஞ்சு தூதுவர் எரிக் லவேர்டு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரபூர்வ வதிவிடத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.



அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கை ரீதியாக உறுதியான நிலையை ஏற்படுத்தி, வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்க உகந்த சூழலை உருவாக்கினால், இலங்கை பல முதலீட்டு வாய்ப்புகள் இருப்பதாகவும், பூகோள போக்குவரத்தின் இதயமாக - மூலோபாயம் முக்கியத்துவம் பெற்ற இடத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் அமைந்துள்ளது.

எனவே எந்தவொரு முதலீட்டாளருக்கும் இது சிறந்த வாய்ப்பாக இருக்கும்" என்றும் மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார். (ஐ)

# முப்படையினரும் நாட்டின் ஜனநாயக விழுமியங்களை பேணிப் பாதுகாக்கின்றனர்

## வோஷிங்டனில் அரவிந்தகுமார் பெருமிதம்



(வோஷிங்டன்)

நாட்டை பொறுத்தவரை பல்வேறு அரசியல் ரீதியான சிக்கல்களைச் சந்தித்த காலகட்டத்திலும் கூட, எமது முப்படையினரும் பொலிஸாரும் எந்தவொரு காலகட்டத்திலும் இராணுவ சதிப்புரட்சியையோ, அல்லது ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளையோ மேற்கொள்ளவில்லை என பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தலைநகரான வோஷிங்டனில் கடந்த 3 தினங்களாக இடம்பெற்ற ஜனநாயக தேசிய நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த நாடாளுமன்ற தலைமைத்துவப் பண்புகள் தொடர்பான கருத்துக்களத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டில் முப்படையினரும் பொலிஸாரும் ஜனநாயக விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதில் அக்கறை காட்டும் தரப்பினராவுள்ளனர்.

அத்துடன், உலகளாவிய ரீதியில் இளைஞர்,யுவதிகள் அரசியலில் அக்கறை காட்டுவதில்லை எனவும் தெரிவித்துள்ள அவர், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இலங்கையில் இடம்பெற்ற ஜனநாயக ரீதியிலான சதி குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# ஆட்டோ மீது மரம் விழுந்ததில் தாய், மகள் உட்பட மூவர் பலி



(சூரியவெவ)

சூரியவெவ, 11 ஆவது மைல் கல் பகுதியில் மரம் ஒன்று ஆட்டோ மீது முறிந்து விழுந்ததில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பகுதியூடாக பயணித்துக்கொண்டிருந்த ஆட்டோ மீது எதிர்பாராத விதத்தில் மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் 31 வயது தாயும் அவரது இரு மகள்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் பெரும்பாலான பகுதிகளில் இவ்வாறான உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கூட்டமைப்பின் தரகு அரசியல் போக்கே தமிழ் மக்களின் அபிலாஷைகளை தடுக்கிறது

## டக்ளஸ் எம்.பி. குற்றச்சாட்டு



இலகுவாக ஓர் இரவில் தீர்க்கப்படக் கூடிய பிரச்சினைகளுக்குக் கூட தீர்வு கண்டு கொடுக்காது தமது சுய தேவைகளுக்காக தரகு அரசியல் செய்துகொண்டிருக்கும் தமிழ் அரசியல் தரப்பினரால் தமிழ் மக்களுக்கான தேவைப்பாடுகள் மட்டுமல்லாது அவர்களது அரசியல் உரிமைகளும் தடுக்கப்பட்டு வருகின்றன என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு தொகுதி தீவக வலயக் கல்வி அதிகாரிகளுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரது தரகு அரசியல் போக்கு இன்று தமிழ் மக்களை நடு வீதியில் விட்டுள்ளதை தவிர வேறெதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை. இந்த நிலைமையால் சாதாரண ஒரு பொதுமகன் தனது அடிப்படைத் தேவைகளை பெற்றுக் கொள்வதற்குக் கூட இன்று வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நிலை காணப்படுகின்றது.

அதுமட்டுமல்லாது அரச உத்தியோகத்தர்களும் அரசியல் ரீதியாகவோ அன்றி தனிநபர் விருப்பு வெறுப்புகளுக்காகவோ பழிவாங்கப்படும் அவல நிலையும் உருவாகியுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு இலகுவாக ஓர் இரவில் தீர்வு கண்டிருக்க முடியும். ஆனாலும் இன்று தமிழ் தரப்பினரது தரகு அரசியல் போக்கால் நிலைமை அவ்வாறானதாகக் காணப்படவில்லை. இவ்வாறான பிரச்சினைகளை நாம் ஆட்சி அதிகாரங்களில் இருந்த போது மிகச் சாதாரணமான முறையில் ஒரு சில மணித்தியாலங்களில் தீர்வுகளைக் கண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் பெற்றுக் கொடுத்திருந்திருக்கின்றோம்.

தமிழ் மக்களின் ஆணையை அபகரித்து அதிகார தரப்பினருடன் கரம் கோர்த்து ஆட்சி செய்ய முண்டுகொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மக்களின் தேவைகளைப் பெற்றுக்கொடுக்க துளியளவேனும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இதை இன்று தமிழ் மக்களும் உணர்ந்துள்ளனர்.

அந்த வகையில் எமது மக்கள் தமது எதிர்காலத்தை வெற்றி கொள்ள இனிவருங்காலத்தில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியானதாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதை தமிழ் மக்கள் எமக்கு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அவ்வாறானதொருநிலைமையை மக்கள் தருவார்களேயானால் அடுத்த சில ஆண்டுகளில் மக்களின் அபிவிருத்தியுடன் அரசியல் உள்ளிட்ட அனைத்து அபிலாஷைகளையும் பெற்றுக் கொடுத்து நிலையான வாழ்வியல் சூழலை உருவாக்கிக் கொடுக்க எம்மால் முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

# "பௌத்த கட்டளையின்படி செயற்படும்" தேரர்களே என்னை மன்னித்து விடுங்கள்

## மன்னிப்புக் கோரினார் ரஞ்சன்



(கொழும்பு)

இந்த நாட்டின் தேரர்கள் தொடர்பில் நான் வெளியிட்ட தகவல்கள், பௌத்தத்தை சரியாகப் பின்பற்றும் மகா சங்கத்தினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியிருந்தால் அதற்காக சம்பந்தப்பட்டவர்களிடம் மாத்திரம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

அஸ்கிரிய பீடம் விடுத்த அழைப்பின் பேரில் ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் கண்டி அஸ்கிரிய மகா விகாரைக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போதே அவர் தேரர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனக்கு அஸ்கிரிய மகா நாயக்கர் உபதேசங்களையும் ஆலோசனைகளையும் வழங்கினர். அவற்றை நான் ஏற்றுக் கொள்கின்றேன். இதுபோன்ற பிரச்சினைகளை முன்வைக்க வேண்டிய, கையாள வேண்டிய வழிமுறைகள் குறித்து விளங்கப்படுத்தினர். அதனையும் நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

நான் ஆரம்பம் முதல் எனது அறிவிப்பில், பௌத்த கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கும் மகா சங்கத்தினரைத் தவிர ஏனைய சிறு குழுவொன்றே இதற்குச் சம்பந்தப்பட்டுள்ளது.

இவர்கள் பற்றியே நான் குறிப்பிட்டேன். இதன் பிறகு இவர்கள் பற்றியும் நான் சர்ச்சைப்படுத்திக் கொள்ள மாட்டேன் எனக் கூறினேன் எனவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்தார். (ஐ)



கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகையை நேற்று முன்தினம் ஆயர் இல்லத்தில் சந்தித்த மேல்மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் நல்லிணக்க மாநாட்டுக்கான அழைப்பை கையளித்தார். ஐக்கியம், சமாதானம், புரிந்துணர்வை கட்டியெழுப்பும் நோக்கில் இம்மாநாடு கொழும்பில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அவசரகால விதிகள் நடைமுறையில் இருந்தாலும் சுதந்திரமானது மட்டுப்படுத்தப்படவில்லை

## ஐ.நா.விசேட அறிக்கையாளரிடம் மாரப்பன எடுத்துரைப்பு

(கொழும்பு)

சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத்தை நிலைநிறுத்துதல், மனித உரிமைகளின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பில் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றோம்.

எமது அரசாங்கத்தின் கீழ் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவசரகால விதிகள் நடைமுறையில் காணப்படினும் கூட, அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கு சுதந்திரமானது மட்டுப்படுத்தப்படவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளரிடம் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன எடுத்துரைத்துள்ளார்.

இலங்கைக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை கடந்த 18 - 26 வரை ஆரம்பித்துள்ள சுதந்திரமாக ஒன்றுகூடுவதற்கும் அமைதியாக ஒருங்கு சேர்வதற்குமான உரிமைகளுக்கான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் க்ளெமென்ட் நைலெட் சோசிவோல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பனவை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கடந்த வியாழக்கிழமை சந்தித்தார்.

அதன்போது சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கானதும் மனித உரிமைகளின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு குறித்த ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதுமான புதிய பாதையில் பயணிக்கும் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் ஒன்றுகூடுவதற்கான மற்றும் அமைதியாக ஒருங்குசேர்வதற்கான சுதந்திரம் பொதுமக்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மாரப்பன சுட்டிக்காட்டினார்.

அவசரகால விதிகள் நடைமுறையில் காணப்படினும் கூட, ஒன்றுகூடுவதற்கும் அமைதியாக ஒருங்குசேர்வதற்குமான சுதந்திரமானது மட்டுப்படுத்தப்படவில்லை என்றும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களுக்குப் பின்னர் நாட்டில் பல எதிர்ப்புக்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் ஏப்ரல் மாதம் நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு விசேட அறிக்கையாளர் தனது இரங்கலைத் தெரிவித்ததோடு, சம்பவங்களுக்குப் பின்னர் மீட்சி பெறவும், சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தவும் முழுநிலைமையையிட்டு அவர் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார். (ஐ)

# மறு அறிவித்தல் வரை பேராதனை பல்கலை.மூடல்


(கண்டி)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களும் மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து குறித்த பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களும் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கன்னியா பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற கவனயீர்ப்பில் பங்கேற்றவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்

## தென் கயிலை ஆதீன குருமுதல்வர் ஊடக அறிக்கை



**(திருகோணமலை) —— தென் கயிலை ஆதீனத்தினால் கடந்த 16 ஆம் திகதியன்று கன்னியா பிள்ளையார் கோவிலை மையப்படுத்தி அமைதி வழியில் ஒழுங்கமைக்கப்பட்ட கவனயீர்ப்புக்கும் சமய வழிபாட்டுக்கும் வடக்கு, கிழக்கிலிருந்து பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் பங்கேற்க வந்த ஒவ்வொருவருக்கும் தென் கயிலை ஆதீனம் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என தென் கயிலை ஆதீன குருமுதல்வர் அகத்தியர் அடிகளாரின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கன்னியா பிள்ளையார் கோவிலில் வழிபாடு செய்வதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அக்கவனயீர்ப்பும் சமய வழிபாடும் உப்புவெளி பொலிஸாரால் தடை செய்யப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே.

தடை உத்தரவிற்கான ஆவணம் சிங்கள மொழியிலேயே வழங்கப்பட்டிருந்தது. வடக்கு, கிழக்கின் பாவனை மொழியாக தமிழ் இருக்கின்ற போதும் சிங்கள மொழியில் தடை உத்தரவு வழங்கப்படுவது விசனத்திற்குரியது மட்டுமல்ல சிங்கள பௌத்த காலனித்துவ ஆதிக்கத்தின் நீட்சியாகவே நோக்கப்பட வேண்டியுள்ளது. 1956 ஆம் ஆண்டு "சிங்கள மொழி மூலம்" மட்டும் நடைமுறையில் இருப்பதான தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது.

பழைமைவாய்ந்த பிள்ளையார் கோவில் இருந்த இடத்தில் சைவ சமய முறைப்படி சென்ற பக்தர்களும் துறவிகளும் தடுக்கப்பட்டதை வெறுமனே உதிரியான செயற்பாடாக மட்டும் உற்று நோக்க முடியாது. இச்செயற்பாடு உதிரியாக கன்னியாவில் மட்டும் நடைபெறவில்லை. இது நீராவியடிப் பிள்ளையார் கோவில், முல்லைத்தீவு, கந்தசாமி மலையடி தென்னவன் மரபுஅடி போன்ற பல சைவமதத் தலங்களுக்கு நடந்த, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நடவடிக்கை. சைவக் கோயில் இருந்த இடத்தில் வழிபாடு செய்வதனால் நாட்டின் மதங்களுக்கு இடையேயும் இனங்களுக்கு இடையேயும் அமைதியும் நல்லிணக்கமும் பாதிக்கப்படும் என்ற காரணத்தினால் தமிழர்களுக்குரிய மத உரிமையை (வழிபடுகின்ற) மறுப்பது என்பது இலங்கையின் ஒற்றையாட்சி தன்மையை வலியுறுத்துகின்றது. அதன் பல்லினத் தன்மை கேள்விக்குட்படுத்தப்படுகின்றது அல்லது மறுக்கப்படுகின்றது எனக்கொள்ள இடமுண்டு.

இலங்கையின்-முள்ளிவாய்க்கால் தளத்தில் மொழி, மதம், இனம் சார்ந்து (சிங்கள-பௌத்தம்) பல்லினத்தன்மையை மிக வீரியமாக ஒதுக்கித் தள்ளும் பாங்குடைய அணுகுமுறையை கடினமாகப் பின்பற்றுகின்றது என்பதனை வடக்கு,கிழக்கில் உருவாக்கப்பட்ட சிங்களக்குடியேற்றங்களும் கட்டப்பட்ட பௌத்த விகாரைகளும் சான்றுகளாக அமைகின்றன. இலங்கையின் பிரத்தியேக தேசியம் (Exclusive nationalism) சிங்கள இனம், சிங்கள மொழி, சிங்கள தேரவாத பௌத்தம் இவற்றிற்கு மட்டுமே இலங்கை உரியது என்ற கோரிக்கை ஏனைய இனங்களின் ஒழிப்பிற்கான உள்நோக்கை (intent) தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இன்னொரு மத வழிபாட்டு உரிமையை மறுத்து, அதை சிங்கள மக்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டமாக சித்திரித்து, அதனூடு தமிழ் மக்களதும் ஏனைய சிறுபான்மை மக்களதும் அரசியல் கோரிக்கைகளைச் சிங்கள தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக சோடித்து சிங்கள பௌத்த தேசிய வாதத்தை முன்னிறுத்தும் உத்தி இலங்கை அரசுக்கு புதியது அல்ல. அதே உத்தியைக்கையாண்டு இலங்கையின் பொலிஸ், நீதித்துறையை தன்னகத்தே கொண்டு பெரும்பான்மையினரையும் அவர்களது நலன்களையும் பாதுகாப்பதற்கு பயன்படுத்துவது இது முதல் தடவையுமல்ல.

ஏற்கனவே ஊடக அறிக்கையில் குறிப்பிட்டபடி இலங்கை அரசு தமிழர் வரலாற்றை மகாவம்ச மைய வரலாறாக திரிபுபடுத்த முயற்சிக்கின்றது. இலங்கையில் பௌத்தம் என்றாலே அது சிங்கள தேரவாத பௌத்தம் மட்டுமேயான தோற்றத்தை உருவாக்கி தமிழ் பௌத்தர்களின் வரலாற்று இருப்பினை இருட்டடிப்புச் செய்வதோடு பௌத்தத்திற்கு முன்னரான தமிழர்களின் இருப்பை மறுக்க முயல்கின்றது.

பௌத்த வருகையின் முன்னரான சைவத்தின் இருப்பை கேள்விக்குட்படுத்தி வரலாற்றியலின் உண்மைத் தன்மையில் சந்தேகத்தை உருவாக்கி அதனூடு சிங்கள-பௌத்த மைய வரலாற்றைக் கட்டமைப்பது இலங்கையின் மிக நீண்டகால தந்திரோபாயமாக இருந்து வந்துள்ளது. இதற்கு தொல்லியல் திணைக்களம் மிக முனைப்புடன் இயங்கி இவ்வரசின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு துணை போகின்றது.

இலங்கையின் நீதித்துறையும் பொலிஸ்துறையும் அதன் படைக்கட்டுமானங்களும் பெரும்பான்மைசார்பு நிலைப்பாட்டை வரலாற்று ரீதியாக எடுத்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இப்பெரும்பான்மை இனசார் நிலைப்பாடு பெரும்பான்மையினரின் உயர் மனப்பாங்கிற்கு உயிர் ஊட்டமளித்து பெரும்பான்மையினரை மற்றவர்களிலும் உயர்ந்தவர்களாகக் கருத இடமளிக்கின்றது.

இவ்வாறாக தூய கலப்பற்ற ஆரிய இனமாக சிங்கள இனம் உருவாக்கப்பட்டு, ஏனைய இனங்கள் தரக்குறைவாக உருவகிக்கப்படுகின்றது. இவ்வுத்தி இனப்படுகொலை உள்நோக்கத்தை அணித்திரட்டலாக மாற்றி இன்னொரு இனப்படுகொலைக்கு வழிவகுக்கின்றது.

பெரும்பான்மையின இயங்கு தளத்தை கேள்விக்குட்படுத்தி தமிழர்களின் உரிமைக் கோரிக்கைகளை வரலாற்றில் பதிவு செய்த நாளாக கடந்த 16 ஆம் திகதி காணப்படுகிறது. வன்முறையைத் தூண்டி விட்டு கலவரத்தை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு தமிழர்கள் அஹிம்சையை விரும்புகின்றார்கள் என்பதை வெளி உலகத்திற்கு தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். தமிழர்களின் இருப்பையும் அடையாளத்தையும் தக்க வைக்கின்ற, ஆழப்படுத்துகின்ற வன் முறையற்ற ஆன்மீக மக்கள் மைய கவனயீர்ப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். அவற்றிற்கு நீங்கள் என்றும் துணை நிற்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு என மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாட்டிலுள்ள நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில்
### ஐரோ.ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கிரேஸ் விளக்கம்



(ஜெனிவா)

விடுதலைப் புலிகள் அமைப்பினர் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளித்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைத் தூதுவர் கிரேஸ் ஆசீர்வாதம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்கியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "இலங்கைக்கான நண்பர்கள் குழு" புதுப்பிக்கப்பட்டு மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த மீள் ஸ்தாபன நடவடிக்கைகள் பிரசெல்ஸின் ஸ்டார்ஸ்பேர்க் நகரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.

பிரித்தானியப் பழைமைவாதக் கட்சியைச் சேர்ந்த ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினரான ஜெப்ரி வான் ஓடன் இலங்கைக்கான நண்பர்கள் குழுவின் தலைவராகச் செயற்படும் அதேவேளை, இந்நிகழ்வில் 8 ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 11 பேர் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கான நண்பர்கள் குழுவின் மீள் ஸ்தாபன நிகழ்வில் பங்கேற்ற ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைத் தூதுவர் கிரேஸ் ஆசீர்வாதம், தனது உரையின் போது இலங்கையின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கினார்.

அத்தோடு உயிர்த்த ஞாயிறுதின பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்தும் அதற்குப் பின்னரான நிலைவரங்கள் பற்றியும் பகிர்ந்துகொண்டதுடன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் இலங்கை பேணிவரும் நல்லுறவு தொடர்பிலும் எடுத்துரைத்தார். (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 400 | 400 | 500 |
| தக்காளி | 100 | 80 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 160 | 120 |
| கோவா | 80 | 80 | 80 | 100 |
| கரட் | 160 | 170 | 170 | 200 |
| பூசணி | 80 | 80 | 90 | 80 |
| புடோல் | 60 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100-180 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 160 | 150 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 110 | 90 | 120 |
| பயற்றங்காய் | 30 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 100 | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 70 | 100 |
| கறிமிளகாய் | 80 | 150 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 20 | 140 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | — | 60 |
| கீரை-1பிடி | 30 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 250 | 200 | 220 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 160 |
| வெங்காயப்பூ | 240 | 150 | 170 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 70 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 70 | 60 | 50 |

# மொழிக் கொள்கையின் ஊடாகவே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்

## சபாநாயகர் கரு தெரிவிப்பு



(கொழும்பு)

**நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிக்கு இணையாகப் பிறிதொரு மொழியில் அனைத்து மக்களும் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் மொழிக் கொள்கையின் ஊடாகவே தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டாம் மொழிப் பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசியலுக்கு அப்பாற்பட்ட சேவைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனைத்து அரச திணைக்களங்களிலும் அரச கரும மொழிகளாக தமிழ், சிங்கள மொழிகள் கட்டாயமாக்கப்பட்டு உரிய செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் மும்மொழிகளில் மாத்திரம் தேர்ச்சி பெற்றால் போதாது. மாறிவரும் உலக நடத்தைகளுக்கு ஏற்ப அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டும். அதற்கு பல்லின மொழிகளிலும் தேர்ச்சி பெறுதல் அவசியமாகும்.

வழக்கில் உள்ள மூன்று மொழிகளைக் காட்டிலும் மேலதிகமாக பிறிதொரு அங்கீகரிக்கப்பட்ட மொழியை நடைமுறைப் படுத்துவது காலத்தின் தேவையாகும். இதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இனங்களுக்கிடையில் நல்லுறவையும், பரஸ்பர நிலையையும் மொழிகளின் ஊடாகவே மேம்படுத்த முடியும். தேசிய நல்லிணக்கமே ஒரு நாட்டின் ஒற்றுமைக்கான பிரதான இலட்சியம். தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்த முன்னெடுத்துள்ள திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது அவசியமாகும் என மேலும் தெரிவித்தார். (ஐ)

---

## ஒரே பிரசவத்தில் பிறந்த 4 பிள்ளைகளின் பராமரிப்பிற்காக ஜனாதிபதி நிதியுதவி

(கொழும்பு)

குருக்கெவ, பலல, மஹவ பிரதேசத்தில் வசிக்கும் எச்.எம். இந்திராணி மல்லிகா தனது முதலாவது பிரசவத்தில் நான்கு சிசுக்களை பிரசவித்துள்ளார்.

பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் இராணுவச் சிப்பாயான யூ.கே.சி.எஸ்.ஞானரத்ன மற்றும் எச்.எம்.இந்திராணி மல்லிகா தம்பதியர் ஜனாதிபதியிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கமைய அவர்களது குழந்தைகளின் பராமரிப்பிற்காக 20 இலட்சம் ரூபா நிதி அன்பளிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வியாழக்கிழமை முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வழங்கினார்.

சுமார் ஒரு மாத வயதையுடைய இஷித இந்துவர, இஷினி சதெத்மா, இனிது கவித்மா மற்றும் இனிசி ஒகித்மா ஆகிய தமது நான்கு குழந்தைகளுடன் ஜனாதிபதி செயலகத்திற்கு வருகை தந்த குறித்த தம்பதியர் ஜனாதிபதியிடமிருந்து நிதி அன்பளிப்பைப் பெற்றுக்கொண்டனர். (ஐ)

---

## பயங்கரவாதிகளை தேடி அழிப்பதே எமது பிரதான இலக்காகும்

### தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து பசில்



(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி மற்றும் இளைஞர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல் ஆகிய முக்கிய மூன்று அடிப்படைகளின் கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் அமையவுள்ளதாக முன்னாள் அமைச்சரும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் கடந்த காலத்தில் பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் போது அவர்கள் எமது முகாம்களை வந்து தாக்கும் வரை இருக்காமல், அவர்களது முகாம்களைத் தேடி தாக்குதல் நடத்தியே நாம் யுத்தத்தை வெற்றிபெற்றோம் என பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இந்த நாட்டிலுள்ள இளைஞர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

---

## இலங்கை-இந்தியா இடையே கடலடி மின் இணைப்பு சாத்தியமில்லை

### தமிழ்நாட்டு மின்சக்தி அமைச்சர் தகவல்

(சென்னை)

தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு மேல்நிலை இணைப்புகள் மூலமே. மின்சாரத்தை விநியோகிக்க முடியும் என்றும், கடலுக்கு அடியிலான இணைப்புகளின் மூலம் அதற்குச் சாத்தியம் இல்லை எனவும், தமிழ்நாட்டின் மின்சக்தி அமைச்சர் தங்கமணி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், "கடலுக்கடியிலான இணைப்புகளை அமைப்பது சாத்தியமில்லை என்று இந்தத் திட்டத்தின் தொழில்நுட்பக் குழு கருதுகிறது. ஏனென்றால் அதைச் செய்வதற்கு, இராமேஸ்வரத்தில் ஒரு கேபிள் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும். மேலும் கேபிள்களை கப்பல் வழியாக கடல்களுக்கு குறுக்கே கொண்டு செல்ல வேண்டும். இது சாத்தியமில்லை. எனவே, மேல்நிலை கேபிள்கள் மட்டுமே அமைக்கப்படும்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்கு, கடலுக்கடியில் இணைப்புக் கேபிள்களை அமைப்பது சாத்தியமில்லை என்று, இந்திய மத்திய அரசு அமைத்த தொழில்நுட்பக் குழு தெரிவித்துள்ளது.

இந்தக்குழு மேல்நிலை கேபிள்களை அமைக்கப் பரிந்துரைத்துள்ளது. குழுவின் இந்த அறிக்கை சில நாட்களுக்கு முன்புதான் எமக்குக் கிடைத்தது.

அதைவிட, கடலுக்கடியில் கேபிள்களை அமைத்து, மின்சாரத்தை விநியோகிப்பதற்கான செலவு, கோபுரங்களை அமைத்து மேல்நிலை கேபிள்களை இடுவதற்கும் ஏற்படும் செலவை விட அதிகமாக இருக்கும்" என்றும் அவர் தெரிவித்தார். இந்தத் திட்டம் 2008 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட போதும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தத் திட்டம் தொடர்பாக **Power Grid Corporation of India** தயாரித்த ஆரம்ப கட்ட அறிக்கையில், கடல் படுக்கையில் கேபிள்களை இடுவதற்கு 2.292 கோடி ரூபா (இந்திய ரூபா) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 42 மாதங்களில் இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய முடியும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதன்மூலம் தமிழ் நாட்டின் மதுரையில் இருந்து இலங்கையின் அநுராதபுரத்திற்கு மின்சாரத்தை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 500 மெகாவோட் மின்சாரத்தை இலங்கையும் இந்தியாவும் பரிமாறும் இந்தத் திட்டம் 2008 இல் முன்வைக்கப்பட்டது. தற்போது, இந்தியாவும் பூட்டானும் இதுபோன்று மின்சாரத்தை பரிமாறுகின்றன. பூட்டானுக்கு இந்தியா மின்சாரத்தை வழங்குகிறது.

இலங்கைக்குக் கேபிள்களை இடுவதற்கான சில தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப் படவில்லை. இந்தத் திட்டத்திற்கு இப்போது ரூ.3,000 கோடி செலவாகும் என்று நிறுவனம் மதிப்பிட்டுள்ளது என **Power Grid Corporation** அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். **Power Grid Corporation** மற்றும் இலங்கை மின்சார சபை இடையே தொடர் சந்திப்புகள் நடந்துள்ளன என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

**Power Grid Corporation** ஏற்கனவே ஒரு சாத்திய ஆய்வை நடத்தியது. கூட்டு வழிநடத்தல் குழு தற்போது இந்தத் திட்டத்தை மதிப்பீடு செய்து வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

---

## நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை; தொடர்பு கொள்ள அவசர தொலைபேசி இலக்கங்கள்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து அனர்த்த நிலைமைகளின் போது உதவிக்காக பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்கு அவசரத் தொலைபேசி இலக்கங்கள் இரண்டை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையையடுத்து ஆங்காங்கே மண்சரிவும் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டு வருகின்றது. இதையடுத்து குறித்த அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்கும் மக்கள் பொலிஸாருடன் தொடர்பு கொள்வதற்கு இரு தொலைபேசி இலக்கங்களை வெளியிட்டுள்ளனர்.

அதன்படி 011 245 4576 மற்றும் 011 258 7229 ஆகிய இலக்கங்களுக்கு அனர்த்த நிலைமைகளின் போது பொதுமக்கள் தொடர்பு கொண்டு தகவல் வழங்க முடியுமென பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# கிளிநொச்சியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு;

## பொலிஸார் உடந்தை என பொது அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெற்று வருகின்ற சட்டவிரோதமாக மணல் அகழ்வுகளுக்கு பொலிஸார் முழுமையாக துணை போவதாக கிராம மட்ட அமைப்புக்கள், மாவட்ட பொது அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் இயற்கை வளமான மணல்வளம் அண்மைக்காலமாக வகை தொகையின்றி அழிக்கப்பட்டு வருகின்றன என்றும் இதனை தடுப்பதற்கு இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்ட பொது அமைப்புக்கள் இதனை தடுக்க வேண்டிய அதிகாரிகள் அதற்கு திரைமறைவில் துணை போவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளன.

அதாவது, மணலுக்கான எந்தவிதமான அனுமதிகளும் வழங்கப்படாத வன்னேரிக்குளத்தின் உட்பகுதி கல்லாறு, உமையாள்புரம், தட்டுவன்கொட்டி கிளை ஊரியான், கோரக்கன்கட்டு, அக்கராயன், பன்னங்கண்டி போன்ற பகுதிகளில் தினமும் ஐம்பதிற்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

குறிப்பாக, கண்டாவளைப் பிரதேசத்திற்குட்பட்ட கல்லாறு பெரிய குளம் ஊரியான் போன்ற பகுதிகளில் வயல் நிலங்களிலும் ஆறுகளிலும் அனுமதியற்ற முறையில் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பாக பொலிஸாருக்கும் பொலிஸ் உயரதிகாரிகளுக்கும் பலதடவைகள் எடுத்துக்கூறியும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் கண்டாவளைப் பிரதேச பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த 11ஆம் திகதி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட கனகராயன் ஆற்றுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரம் ஒன்றினையும் அங்கு குவிக்கப்பட்டிருந்த 50 கியூப்பிற்கும் அதிக மணலையும் கிராம உத்தியோகத்தர்கள் கைப்பற்றி விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைத்த போதும் தற்போது அப்பகுதியில் இன்றும் மணல் அகழ்வுகள் தொடர்வதாகவும் இதற்குப் பொலிஸார் முழுமையான ஆதரவு வழங்கி வருவதாகவும் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகங்கள் மேலும் சுட்டிக் காட்டியுள்ளன. (9-315)

## துப்பாக்கி ரவைகள் மீட்பு குடும்பஸ்தர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட ஒதியமலைப்பகுதியில் நேற்று முன்தினம் துப்பாக்கி ரவைகள் மற்றும் கஞ்சாவை மீட்ட விசேட அதிரடிப்படையினர், சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்துள்ளனர்.

ஒதியமலைப்பகுதியில் வசித்து வரும் குடும்பஸ்தர் ஒருவரின் வீட்டுக்குப் பின்னால் உள்ள காட்டுப்பகுதியில் பை ஒன்றினுள் கட்டப்பட்டு போடப்பட்ட ஏ.கே. துப்பாக்கி ரவைகள் 581 ஐ மீட்ட விசேட அதிரடிப்படையினர் அந்த வீட்டின் உரிமையாளரான குடும்பஸ்தரை கைதுசெய்துள்ளார்கள். இதேவேளை அதே பகுதியில் 15 கிராம் கஞ்சாவுடன் ஒருவரையும் கைது செய்துள்ளார்கள்.

இவர்கள் இருவரையும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (9-281)

## மீதிப்பணம் கேட்டவரை தகாத வார்த்தையால் திட்டிய உணவக உரிமையாளர்

(குருமன்காடு)

வவுனியாவில் பிரபல உணவகம் ஒன்றில் உணவருந்திய பின் பணத்தை செலுத்தி மீதிப்பணம் கேட்ட நபரை தகாத வார்த்தைகளால் திட்டி தாக்க முயற்சி செய்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக அமைந்துள்ள பிரபல சைவ உணவகத்தில் உணவருந்திய நபர் ஒருவருக்கு மீதிப்பணத்திற்கு பதிலாக "டொபி" ஒன்றை கடை உரிமையாளர் வழங்கியுள்ளார். குறித்த நபர் "டொபியை" ஏற்க மறுத்து மீதிப்பணத்தை வழங்குமாறு கோரிய நிலையிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர் கருத்து தெரிவிக்கையில்,

குறித்த உணவகத்தில் உணவருந்தியதற்காக 105 ரூபா பில் தரப்பட்டது. அதற்காக 120 ரூபாவை கொடுத்த நிலையில் மீதி 15 ரூபாவிற்கு ஒரு 10 ரூபாவும் ஐந்து ரூபாவிற்கு ஒரு 2.00 ரூபா பெறுமதியான "டொபியும்" வழங்கப்பட்டது.

குறித்த டொபியை ஏற்க மறுத்து ஐந்து ரூபா மீதிப் பணத்தை கேட்டபோது சில்லறை நாங்கள் அச்சடிப்பதில்லை என பேசி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி தாக்க முயற்சித்தனர்.

குறித்த சம்பவத்தின் காரணமாக தான் பெரிதும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும், இவ்வாறாக அப்பாவிகளிடம் ஏமாற்றி நூதன முறையில் கொள்ளையிடும் வர்த்தக நிலையங்கள் மீதும், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பாவனையாளர்கள் அலுவலக அதிகார சபையினர் குறித்த உணவகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், வவுனியாவில் இதுபோன்று சரியான சில்லறை வழங்காது "டொபி, இனிப்புக்களை" வழங்கும் வர்த்தக நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் பல வர்த்தக நிறுவனங்களில் "குபேரன்" சிலையை வைத்து அதற்குள் சில்லறைப் பணத்தை போட்டு பகிரங்கமாகவே பதுக்கி வைக்கும் வர்த்தகர்களால் செயற்கையாக சில்லறைத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார். (9-250)

## வவு.பேருந்து நிலைய சோதனை சாவடியை உடனடியாக அகற்றவும்

### மஸ்தான் எம்.பி



(நெளுக்குளம்)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள படையினரின் சோதனைச் சாவடியால் தினமும் பயணிகள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

தற்போதுள்ள நிலைமைகளில் இச் சோதனைச்சாவடி பேருந்து நிலையப்பகுதியில் தேவையற்றதே. இதனை உடனடியாக அகற்றுமாறு பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் நேற்று சந்தித்த ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து பாதுகாப்புத்தரப்பினருக்கு நாங்கள் கடுமையான அழுத்தம் பிரயோகிக்க முடியாது. ஆனால் தற்போது ஆட்சியாளர்களாக இருக்கின்றவர்கள் இது குறித்து பேசமுடியும்.

இவ்விடயங்களில் சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து ஒரு முயற்சி மேற்கொள்ள வேண்டும். எங்கேயோ குண்டுகள் வெடித்ததற்காக இங்கே பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பொது மக்களுக்கு இடையூறுகளையும் அதிகளவில் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இதனைப்பேசும்போது நாங்கள் பாதுகாப்புத்தரப்பினரை குறைகூறுவதாக அமைந்து விடக்கூடாது. தற்போது நிலைமைகள் சீராகி வருகின்றன. எந்தப்பகுதிகளிலும் இவ்வாறான பாரிய சோதனைகள் காணப்படவில்லை. இதனால் மக்களுக்கு பாரியளவில் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன.

இச் சோதனை சாவடியினை புதிய பேருந்து நிலையப் பகுதியிலிருந்து உடனடியாக அகற்றி பொதுமக்களுக்கு இடையூறுகள் இன்றி தமது பயணங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றேன் என மேலும் தெரிவித்துள்ளார். (9-299)

## நெல் மூடைகளுடன் மறைத்துச்சென்ற 203 கிலோ கஞ்சா மீட்பு-சாரதி கைது



(நெளுக்குளம்)

மன்னாரிலிருந்து கொழும்பிற்கு பாரவூர்தி ஒன்றில் நெல் மூடைகளுடன் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட 203கிலோ கேரளக் கஞ்சாவினை பறயனாலங்குளம் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை மாலை கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

மன்னாரிலிருந்து 194 நெல் மூடைகளை ஏற்றிச்சென்ற பாரவூர்தி ஒன்றினுள் 5 மூடைகளில் பொதி செய்யப்பட்ட கேரளக் கஞ்சா சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட போது பறயனாலங்குளம் சந்தியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 203கிலோ கஞ்சாவினை மீட்டுள்ளனர்.

பாரவூர்தி சாரதியான 63வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (9-299-250)



**வவுனியா தோணிக்கல் ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றது.**



**வவுனியா தோணிக்கல் பகுதியில் வசித்துவரும் விசேட தேவைக்குட்பட்ட குடும்பத்திற்கு தமிழ் விருட்சம் அமைப்பினால் குடிநீர் இணைப்பு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.**

**பிரான்ஸ் நாட்டில் புலம்பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவுகளான ஜோர்ஜ் றெமின்றா தம்பதியர் மற்றும் ஜோய் ஜெனற் குடும்பத்தினர் இணைந்து வழங்கிய நிதி உதவி மூலம் வவுனியா தோணிக்கல் பகுதியிலுள்ள விசேட தேவைக்குட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு குடிதண்ணீர் இணைப்பு நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.**

**(படம்:- நெளுக்குளம் செய்தியாளர்)**

கீழ்த்தரமான சிந்தனைகளை எந்தச் சூழ்நிலையிலும் நினைக்க வேண்டாம்.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அமைச்சர் மனோ கணேசனிடம் ஓர் அன்புக் கோரிக்கை

கௌரவ அமைச்சர் மனோ கணேசன் அவர்களுக்கு அன்பு வணக்கம். திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் அத்துமீறி பௌத்த விகாரையை அமைக்கின்ற நடவடிக்கை தொடர்பில் தாங்கள் எடுத்த நடவடிக்கைக்கு நன்றி கூறிக் கொள்கிறோம்.

இந்து கலாசார அமைச்சர் என்ற பொறுப்பு நிலையில் இருந்து கொண்டு, தாங்கள் மேற்கொண்ட அவசரமான நடவடிக்கைகளால் இந்து மக்கள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளனர்.

கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் அத்துமீறி பௌத்த விகாரை அமைக்கின்ற செயற்பாட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன் இது விடயத்தில் பௌத்த விகாரை அமைப்பதை உடனடியாக இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிடுவதற்கு வழி செய்த தங்களின் ஆளுமை கண்டு வியந்தோம்.

அதேநேரம் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் அத்துமீறி பௌத்த விகாரை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தாங்கள் அழைப்பு விட்டபோது வருவதாக உறுதியளித்த கூட்டமைப்பின் தலைமை, பின்னர் வராமல் விட்டமை பற்றியும் அறிந்தோம்.

இவர்களின் இத்தகைய செயற்பாட்டால் தாங்கள் கவலை கொண்டிருந்தமை தெரிகிறது.

இந்தச் செயலால் கவலை கொண்ட தாங்கள் வடக்கு கிழக்கு விடயங்களில் இனித் தலையிட மாட்டேன் எனத் தெரிவித்து அறிக்கை விட்டிருந்தீர்கள்.

இந்த அறிக்கை உங்களை ஆற்றுப்படுத்துவதற்கானதாக இருக்கலாம்.

ஆனால் நீங்கள் விடுத்த அந்த அறிக்கை வடக்கு கிழக்கு உள்ளிட்ட இந்து மக்களை வேதனைப்படுத்தி விட்டது.

உங்கள் போன்ற ஆளுமைமிக்க தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் வடக்குக் கிழக்கு விடயங்களில் தலையிடாமல் ஒதுங்கிக் கொண்டால், தமிழ் மக்களின் நிலைமை படுமோசமாகி விடும்.

எனவே கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க வரவில்லை என்பதற்காக வடக்கு கிழக்கு மக்களின் விடயங்களில் தலையிடுவதில்லை என்று தாங்கள் எடுத்த தீர்மானத்தை மாற்றி, தமிழ் மக்களின் கோரிக்கைக்கும் விருப்பத்துக்கும் மதிப்பளித்து வடக்கு கிழக்கு மக்களின் விடயங்களில் தாங்கள் தலையிட வேண்டும் என்பது நம் கோரிக்கை.

திருகோணமலை கன்னியா விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியை தாங்கள் சந்தித்தமை கூட்டமைப்புக்குக் கோபத்தை ஏற்படுத்தி; அவர்கள் தங்கள் தொடர்பில் பிரதமரிடம் முறையிட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் நீங்கள் ஆளுமையுள்ள பாராளுமன்ற உறுப்பினர். பணத்துக்கு விலை போகாத தமிழன். ஆகையால் இத்தகையவர்களின் அநீதிக்கும் வஞ்சகத்தனத்துக்கும் அஞ்சாமல் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளியுங்கள் என்பதுதான் நம் கோரிக்கை.

# நாட்டில் பேரினவாத சக்திகளை எதிர்க்க அனைவரும் ஒரு குடையின்கீழ் இணைய வேண்டும்

## அருட்தந்தை சக்திவேல் அழைப்பு

(கொழும்பு)

நுவரெலியா கந்தப்பளை சர்ச்சை, நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரம், கன்னியா வெந்நீரூற்று விவகாரம் உள்ளிட்ட அனைத்திலும் பௌத்த பேரினவாதமே தலைதூக்கியுள்ளது.

மலையகம், வடக்கு, கிழக்கு என்று அனைத்துப் பகுதிகளிலும் தாம் வேரூன்ற வேண்டும் என்றே பேரினவாதிகள் கருதுகின்றனர்.

இத்தகையதொரு சூழ்நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைய வேண்டும் என அருட்தந்தை சக்திவேல் அழைப்பு விடுத்துள்ளார்.

அதேபோன்று முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும் விட்டுக்கொடுப்புடன், ஒரு மனம் திறந்த பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும். அவ்வாறு ஒன்றிணைந்து செயற்படாவிடின், இந்த பேரினவாத சக்திகளை எதிர்க்க முடியாது என்றும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இனப்பிரச்சினை முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு பத்து ஆண்டுகள் பூர்த்தியடைந்திருக்கின்றன.

இன, மதத்தை முன்னிறுத்தி செயற்பட்டவர்களாலேயே அப்போது இனப்பிரச்சினைக்கு தூபமிடப்பட்டது.

தற்போது மீண்டும் அத்தகைய இனவாத செயற்பாடுகள் சிலரால் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் தெரிவித்தார். (ஐ)

# நிறைவேற்றதிகார முறையை ஒழிக்க தனிநபர் பிரேரணை

## மகிந்த அமரவீர தீர்மானம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை நாட்டில் இருக்கும் வரையில், ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் சகோதரர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் கூட, அவர்களால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது.

எனவே நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். அது நாட்டிற்கு எந்த நன்மையும் செய்யவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளாக பதவியேற்ற எவருமே அதனை ஒழிக்கவில்லை. இந்தப் பதவி ஒழிக்கப்படாததன் விளைவாகவே நாட்டில் இப்போது, இரண்டு தலைவர்கள் உள்ளனர்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கப் போவதாக ஊக்கமளித்த ஜே.வி.பியும் இப்போதுஅமைதியாகவுள்ளது.

உண்மையிலேயே ஜே.வி.பி. ஆர்வமாக இருந்திருந்தால், நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பிரேரணையை நிறைவேற்றியிருக்கலாம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க நான் நாடாளுமன்றத்தில் ஒரு தனிநபர்பிரேரணையை முன்வைக்கவுள்ளேன்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# வவுனியா ரயில் விபத்தில் படுகாயமடைந்தவர் உயிரிழப்பு

## சடலம் உரிமை கோராத நிலையில்

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் புகையிரதக் கடவையில் காயமடைந்த முதியவர் ஒருவர் கடந்த 17ஆம் திகதி வைத்தியசாலையின் விபத்துப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா ஈரப்பெரியகுளம் புகையிரதக்கடவையில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 60 தொடக்கம் 65வயது மதிக்கத்தக்க வயோதிபரை இனங்காணுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

எனினும் நேற்று வரையில் குறித்த வயோதிபரின் விபரங்கள் எவையும் கிடைக்கவில்லை. நேற்று இரவு சிகிச்சை பலனின்றி வயோதிபர் உயிரிழந்துள்ளதாகவும் இவர் யார் என்பது குறித்து எவரும் உரிமை கோர முன்வரவில்லை. தற்போது சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-299)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தேசிய நிர்மாண சங்கத்தில் வடமாகாணக் கிளை பதிவுபெற்றுள்ள நடப்பு வருடத்தின் அங்கத்துவத்தைக் கொண்டுள்ள அங்கத்தவர்களின் 2018/2019 ஆம் ஆண்டுக்குரிய மிகச் சிறந்த நிர்மாணத்திற்கு விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கட்டட நிர்மாணம், நீர்வழங்கல் மற்றும் வடிகால்கள், பாலங்கள், மின்சாரம் மற்றும் சக இயந்திர நுட்பங்கள் சார்ந்த வேலைகள் மற்றும் பெருந்தெருக்கள் முதலான பிரிவுகளில் 01.04.2018 இலிருந்து 31.03.2019 ஆம் திகதிக்கு முன்பாக மேற்படி பிரிவுகளில் ஒப்பந்த வேலைகளைப் பூர்த்தி செய்த அனைத்து அங்கத்தவர்களும் இவ் விருதுகளுக்காக விண்ணபிக்க முடியும் என்றும் அனைத்து விண்ணப்பங்களும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் உரிய அனைத்து ஆவணங்களுடனும் ஒரே தடவையில் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என்றும் மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்களுக்கு எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் (தொடர்பு இல: 021 2217567) நிர்வாக உத்தியோகத்தர் ஆ.விமல்ராஜ் அறிவித்துள்ளார். (ஐ)

# யாழில் டெங்கு நோய் தாக்கம் அதிகரிப்பு

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

இவ்வாரம் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 10 பேருக்கு டெங்கு நோய்த் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ். யமுனாநந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இவ்வாரம் யாழ். போதனாவைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் இருபாலை, அச்சுவேலி, சண்டிலிப்பாய், கிளிநொச்சி, கட்டப்பிராய், நல்லூர், வட்டுக்கோட்டை, நாவற்குழி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பத்துப் பேருக்கே டெங்கு நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம. 3,10)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ தூய்மையான உள்ளத்தோடு கடவுளின் பெயரை அறிக்கையிட்டு வழிபடுவோருடன் நீதி, நம்பிக்கை, அன்பு, அமைதி ஆகியவற்றை நாடித் தேடு.

❖ இளைஞர்கள் சோர்வுற்றுக் களைப்படைவர் வாலிபர் நிலைதடுமாறி வீழ்வர். ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் புதிய ஆற்றல் பெறுவர்.

❖ தந்தையைக் கொடுமைப்படுத்தித் தாயைத் துரத்திவிடும் மகன், வெட்கக்கேட்டையும் இழிவையும் வருவித்துக் கொள்கிறான்.

❖ மனக்கவலையை ஒழியுங்கள். உடலுக்கு ஊறு வராதபடி காத்துக் கொள்ளுங்கள், குழந்தைப் பருவமும் இளமையும் மறையக் கூடியதாகும்.

❖ இளைஞரே! நீங்கள் வலிமை வாய்ந்தவர்கள், கடவுளின் வார்த்தை உங்களுக்குள் நிலைத்திருக்கிறது.

❖ நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப் பற்றித் தம்பட்டம் அடித்துக் கொள்ளாதீர்கள்.

❖ உன் சகோதரர்கள் ஏழ்மைப்பட்டு இளைத்துப் போனால், அவர்களுக்கு உதவு. அவர்கள் அந்நியர் போலும் விருந்தினர் போலும் உன்னோடு வாழட்டும்.

❖ ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்கிறவர் கடவுளுக்கு கடன் கொடுப்பவராக மாறுகிறார்.

# மாகாண ரீதியிலான குத்துச்சண்டை போட்டி

# மன்னார் வீர,வீராங்கனைகள் சாதனை





தேசிய ரீதியில் இடம்பெறவுள்ள குத்துச்சண்டைப் போட்டிக்கு மாகாண ரீதியில் வீர,வீராங்கனைகளைத் தெரிவு செய்யும் முகமாக மாகாண ரீதியில் வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களையும் உள்ளடக்கி 2019 ஆம் ஆண்டுக்கான குத்துச்சண்டை சுற்றுப் போட்டியானது கடந்த 16,17,18 ஆம் திகதிகளிலும் இறுதிப் போட்டியானது கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆண்,பெண் இருபாலாருக்கும் இடம்பெற்றது.

குறித்த குத்துச்சண்டை போட்டியில் முதல் முறையாக மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திச் சென்ற இளைஞர், யுவதிகள் 55-60 கிலோ எடை, பெண்கள் பிரிவு 70-91 கிலோவிற்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவு உட்பட பல்வேறு பிரிவுகளிலும் இரண்டு தங்கம் மூன்று ஒரு வெண்கலப் பதக்கங்கங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அத்துடன் பெண்கள் பிரிவில் மாகாண ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

குறித்த போட்டிகளில் வெற்றி பெற்ற இளைஞர், யுவதிகள் வருகின்ற மாதங்களில் இடம்பெறவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# கிரிக்கெட் வேண்டாம் இராணுவத்திற்கு செல்கிறேன்

## கடிதம் எழுதிய டோனி



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர ஆட்டக்காரரான டோனி எப்போது ஓய்வுபெறுவார் என்ற விவாதம் சென்றுகொண்டிருக்கும் நிலையில், அவர் இப்போது பிசிசிஐக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கோப்பை தொடரில் டோனியின் ஆட்டம் பழையது போன்று இல்லை, அவர் வீட்டிற்கு கிளம்பலாம், ஓய்வு எடுக்கலாம் என்று முன்னணி வீரர்கள் பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

அதுமட்டுமின்றி அடுத்து வரவிருக்கும் மேற்கிந்தியத் தீவு அணிக்கெதிரான தொடரில் டோனி இருக்கமாட்டார் என்ற தகவலும் வெளியானது. இதற்கான அறிவிப்பு நாளை வெளியாகவுள்ளது.

இந்நிலையில் டோனி பிசிசிஐக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், துணை இராணுவப் படையில் அடுத்த 2 மாதங்கள் பணியாற்ற உள்ளதால் மேற்கிந்தியத்தீவுகள் செல்லும் இந்திய அணியில் பங்கேற்க முடியாது என்று கூறியுள்ளார். இதனால் அடுத்து இரண்டு மாதங்களுக்கு டோனியின் கிரிக்கெட் விளையாட்டை பார்க்க முடியாது. (க)

# நல்லூர் நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'நகுலன் ஞாபகார்த்த' கிரிக்கெட் சுற்றுப் போட்டி

சுவிஸ் மென்பந்து கிரிக்கெட் சம்மேளனத்தின் அனுசரணையுடன் நல்லூர் நொதேண் விளையாட்டுக் கழகமும் சுவிஸ் நொதேண் விளையாட்டுக் கழகமும் இணைந்து நல்லூர் நொதேண் விளையாட்டுக்கழக மூத்த உறுப்பினரான அமரர் சோமசுந்தரம் நகுலேஸ்வரன் (நகுலன்) ஞாபகார்த்தமாக வருடந்தோறும் நடத்தும் "நகுலன் ஞாபகார்த்த" அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஏழு ஓவர் ஆறு பேர் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் லீக் சுற்றுகள் நேற்று நடைபெற்றதுடன் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சுவிஸ் மென்பந்து கிரிக்கெட் சம்மேளனத்தின் தலைவரும் சுவிஸ் நொதேண் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் நல்லூர் நொதேண் விளையாட்டுக் கழகத்தின் மூத்த உறுப்பினரும் அமரர். சோமசுந்தரம் நகுலேஸ்வரனின் (நகுலன்) மூத்த சகோதரருமான சுவிஸ் வாழ் சோமசுந்தரம் விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று மாலை 4.30 மணியளவில் நடைபெறும்.. (க)

# பங்களாதேஷூடனான ஒருநாள் போட்டி லசித் மலிங்கவுக்கு அணியில் இடம்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒரு நாள் தொடரில் விளையாடவுள்ள நிலையில் இந்த தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் பங்களாதேஷ் அணியானது மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

முதலாவது போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதியும் இரண்டாவது போட்டி 28 ஆம் திகதியும் மூன்றாவது போட்டி 31 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.

இந்த மூன்று ஒருநாள் போட்டிகளிலும் பகலிரவு ஆட்டமாக கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இத் தொடருக்கான 22 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, திமுத் கருணாரத்ன தலைமையிலான அணியில் குசல் ஜனித் பெரேரா, அவிஷ்க பெர்னாண்டோ, குசல் மெண்டீஸ், அஞ்சலோ மத்தியூஸ், லஹிரு திரிமான்ன, சேஹான் ஜெயசூரிய, தனஞ்சய டிசில்வா, நிரோஷன் திக்வெல்ல, தனுஷ்க குணதிலக்க, தசூன் சானக்க, வஹிந்து ஹசரங்க, அகில தனஞ்சய, அமில அபோன்சு, லக்ஷான் சந்தகான், லசித் மலிங்க, நுவான் பிரதீப், கசூன் ராஜித, லஹிரு குமார, திஸர பெரேரா, இசுறு உதான மற்றும் லஹிரு மதுசங்க ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (க)

# கிரிக்கெட்டை விட்டுவிட்டு நாங்கள் எங்கே போவது- சிம்பாவே வீரர் உருக்கம்

லண்டனில் நடந்த ஐசிசி கவுன்சில் கூட்டத்தில், விதிகளை மீறி செயற்பட்ட சிம்பாவே அணியை இடைநீக்கம் செய்வதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தடையானது உடனடியாக அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது. இந்தச் செய்தி சிம்பாவே கிரிக்கெட் வீரர்கள், ரசிகர்கள் என அனைவரையும் கடும் அதிர்ச்சிக்குள்ளாகியது. இந்த விவகாரம் தொடர்பில் பேசிய சிம்பாவே வீரர் சிக்கந்தர் ராசா, ஐசிசி-யின் ஒரு முடிவு எங்களை அந்நியராக்கிவிட்டது. நிறைய மக்களின் வேலை வாய்ப்பை எடுத்துக்கொண்டது.

பல குடும்பங்களைப் பாதித்துள்ளது. பலரின் வாழ்க்கையை கேள்விக் குறியாகியுள்ளது. இப்படியான சூழலில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடைபெற விரும்பவில்லை என உருக்கமாக தெரிவித்துள்ளார்.

மட்டுமின்றி, ஐசிசி-யின் முடிவை கேள்விப்பட்டதும் இதயமே சுக்குநூறாக உடைந்ததுபோல் இருந்தது. உண்மையாக நாங்கள் இன்னமும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. எங்களது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை இப்படி முடிவுக்கு வரும் என நாங்கள் நினைக்கவில்லை.

ஒரு வீரர் அல்ல நாட்டில் உள்ள அத்தனை வீரர்களின் கிரிக்கெட் வாழ்க்கையும் முடிவுக்கு வந்துள்ளது.

நான் நினைப்பதுபோல்தான் மற்ற வீரர்களும் நினைத்துக்கொண்டிருப்பார்கள். நாங்கள் இங்கிருந்து எங்கு செல்வது எனத் தெரியவில்லை என குமுறியுள்ளார்.

ஐசிசி-யின் இந்தக் கடுமையான நடவடிக்கைக்கு பல்வேறு தரப்பில் இருந்து கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

சிம்பாவே கிரிக்கெட் வாரியத்துக்காக ஏராளமான தொகையை ஐசிசி வழங்கி வருகிறது. இந்தத் தொகைகள் அனைத்தும் முழுவதுமாக கிரிக்கெட்டுக்குப் பயன்படுத்தவில்லை.

அரசாங்கம் அந்தப் பணத்தைச் செலவு செய்துள்ளது. தரமான கிரிக்கெட் வீரர்களை உருவாக்கவில்லை என்பதே ஐசிசி-யின் வாதமாக இருக்கிறது.

இதன் காரணமாகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடைக்காலத் தடையை அடுத்து சிம்பாவே அணிக்கு வழங்கி வரும் நிதியையும் ஐசிசி நிறுத்தியுள்ளது.

ஐசிசி ஆய்வுக்குழு விசாரணைக்குப் பின்னரே சிம்பாவே கிரிக்கெட் அணியின் எதிர்காலம் குறித்து தெரியவரும். (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# இந்து சமுத்திரத்தின் முக்கிய நகரமாக கொழும்பை மாற்ற பணிகள் முன்னெடுப்பு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தினால் திட்டமிட்ட வகையில் நகர நவீன மயமாக்கல் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரத்தில் துரித அபிவிருத்திகளை விரைவில் காண முடியும் என்பதுடன், இந்து சமுத்திரத்தில் கொழும்பை ஒரு முக்கிய நகரமாக மாற்றுவதே இந்த திட்டத்தின் நோக்கம் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஹெட்டிபொல பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை வாராந்த சந்தைக் கட்டிடத் தொகுதியொன்று திறந்து வைக்கப்பட்ட நிகழ்வின் பின்னர் உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

கொழும்பு, கண்டி போன்ற பிரதான நகரங்கள் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய அனைத்து நகரங்களிலும் பாரிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவை அபிவிருத்தி நோக்கில் மாத்திரம் முன்னெடுக்கப்படுவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அதேவேளை, வரும் 5 முதல் 10 வருடங்களுக்கு இந்தப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேல்மாகாணத்தில்கொழும்பை அண்டிய பிரதேசங்களில் மாநகரங்களை ஸ்தாபிக்கும் நோக்கிலான வேலைத் திட்டங்களும், இலகு ரயில் சேவைகளும், புதிய வீடமைப்புத் திட்டங்களும் இந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும். கொழும்பு நகரத்தில் துரித அபிவிருத்திகளை விரைவில் காணமுடியும் என்பதுடன். இந்து சமுத்திரத்தில்கொழும்பை ஒரு முக்கிய நகரமாக மாற்றுவதே இந்த திட்டத்தின் நோக்கம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட பின்னர் நாட்டை கட்டியெழுப்புவது கடினம் என்று பலர் கருதினார்கள். எனினும் அந்த சவால்களுக்கு மிகவும் வலுவுடன் முகங்கொடுத்ததன் காரணமாக நாடு தளராமல் திடமாக இருந்தது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று இன்றுடன் மூன்று மாதங்கள் நிறைவடைகின்றன. இந்த தாக்குதல்கள் காரணமாக நாட்டு மக்களிடையே பாரிய அச்சம் ஏற்பட்டது. அந்த அச்சம் நாடு முழுவதும் துரிதமாக பரவியது. தொடர்ச்சியாக குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறும் என்று சிலர் நம்பினார்கள். பொருளாதாரம் சீர்குலைந்து நாடு நெருக்கடியை சந்திக்கும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

எனினும், தாக்குதல்கள் இடம்பெற்று மூன்றே மாதங்களில் நாட்டை மீண்டும் உறுதியான நிலைக்கு கொண்டுவருவதற்கு எங்களால் இயலுமாக இருந்தது. நாட்டை மீண்டும் உறுதியான நிலைக்கு கொண்டு வந்தவுடன் அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்து விட்டதாக நாங்கள் நினைக்கக் கூடாது.

கடந்த அரசாங்கம் மிலேச்சத்தனமாக கடன்களை பெற்றதன் காரணமாக இன்று நாட்டில் பாரிய கடன் சுமை ஏற்பட்டுள்ளது. எதிர் வரும் 5 வருடங்களில் இந்த கடன் தொகையை செலுத்தி முடிக்கும் நோக்கில்ஏற்றுமதியை அதிகப்படுத்தி வருமானத்தை அதிகரிக்க வேண்டும். அதேபோன்று ஏனைய துறைகளிலும்முன்னேற்றம்அவசியம்என பிரதமர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## தமிழ் - முஸ்லிம் உறவின் அவ...

பட்டிருப்பு தொகுதி மண்முனை பிரதேச செயலகத்திற்குட்பட மகிழூர் கண்ணகிபுரம் கிராமத்தில் நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் பங்கேற்று ஆற்றிய உரையிலேயே சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணம் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பிட்டும் தேங்காய் பூவுமாக இரண்டறக் கலந்து வாழ்ந்து வந்தமை கடந்த கால வரலாறாகும்.

இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட நடவடிக்கைகள் காரணமாக இந்த உறவு நிலையில் விரிசல் ஏற்படுத்தப்பட்டது. இதன் பின்னணியில் தமிழர்களை சந்தேக கண்ணோட்டத்தில் அணுகிய முஸ்லிம் மக்களும் தலைவர்களும் சிங்களத் தரப்புடன் நெருக்கமான உறவினை பேணத்தலைப்பட்டார்கள். அந்த வரலாற்றுத் தவறின் விளைவை ஏப்ரல்-21 தாக்குதலின் பின்னர் முஸ்லிம் மக்கள் உணர்ந்துள்ளார்கள். இதன் பின்னர் அவர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

தமிழ் மக்களை பெருமளவில் இனப்படுகொலை செய்து போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போது யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்த முஸ்லீம்கள் வெடி வெடித்துக் கொண்டாடி பால் சோறு உண்டார்கள்.

ஆனால் ஏப்ரல்-21 தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட போது தமிழர்கள் யாரும் அவ்வாறு கொண்டாடி மகிழவில்லை. தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டியதன் அவசியத்தை இனியாவது முஸ்லிம் மக்களும் தலைவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்திருந்தார். (ம-3)

## இந்து அமைப்புகள் ஒன்றாகக்...

மன்னார் திருக்கேதீச்சர வளைவு தள்ளி வீழ்த்தப்பட்டமை தொடர்பில் ஆராய்வதற்காக அனைத்து இந்து அமைப்புகளும் நேற்று மாலை நல்லூரில் அமைந்துள்ள இந்துமாமன்றத்தின் யாழ் பிராந்திய அலுவலக மாநாட்டு மண்டபத்தில் கூடினர்.

சிவபூமி அறக்கட்டளை அமைப்பின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நல்லை ஆதீன குரு முதல்வர், சின்மய மிசன் சுவாமிகள், சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள், மன்னார் இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ குமாரக்குருக்கள், வீணாகான குரு பீடாதிபதி சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள், திருக்கேதீச்சர ஆலய பிரதமகுரு, ஆலய பரிபாலன சபை, யாழ்பல் கலைக்கழக இந்துப் பீடம் உட்பட வட மாகாணத்தில் உள்ள இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

முன்பு ஒருபோதும் இல்லாதவாறு உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்ட இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள்; திருக்கேதீச்சர ஆலய வளைவை தள்ளி வீழ்த்தியமைக்கு கடும் கண்டனம் தெரிவித்ததுடன் குறித்த வளைவை மீள அமைப்பதற்கு அனுமதி வழங்கி விட்டு மன்னார் ஆயரின் அழுத்தத்தினால் அனுமதியை இரத்துச் செய்த பிரதேச சபைத் தவிசாளரின் பக்கச் சார்பான நடவடிக்கைக்கும் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

பாடல் பெற்ற மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தை பாதுகாப்பதில் இந்திய மத்திய அரசு தலையிட வேண்டும் எனக் கோரிக்கை விடுவதென மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதுடன் இது தொடர்பில் யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவருடன் சந் திப்பை ஏற்படுத்தி நிலைமையை விளக்குவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் நுழைவாயில் வளைவை தள்ளிவீழ்த்தி நந்திக்கொடிகளை காலால் மிதித்த செயல் சைவ மக்களைக் கடும் வேதனைப்படுத்தி விட்டது என இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரும் தெரிவித்ததுடன் இத்தகைய ஈனச் செயல்களுக்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவிப்பதாகவும் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (ம-10)

## தமிழ் அர...

வளைவு உடைக்கப்பட்ட போது அதனை மீள அமைக்கவேண்டும் என்ற உணர்வோடு தமிழ் இந்து இளைஞர்களும் பெரியோர்களும் பல்வேறு விதமான நகர்வுகளை மேற்கொண்டனர்.

நீதிமன்றத்தில் கூட குறித்த ஆலய வளைவு தொடர்பான வழக்குகளை மிகவும் சாதுரியமாக வாதாடி பெருமை சேர்த்த எமது சட்டத்தரணிகளையும் பாராட்டுவதோடு வெகு விரைவில் குறித்த ஆலயத்தின் வளைவைப் அதே இடத்தில் அமைத்தே தீருவோம்.

உணர்வு என்பது அடிவாங்கும் போதுதான் ஆழமாக ஏற்படுகிறது. அரசியல்வாதிகள் எம்மை ஆலய விடயத்திலும் சரி உரிமை விடயத்திலும் சரி ஏமாற்றி விட்டார்கள் எனினும் எமது இளைஞர்களும், பிரதேச சபை உறுப்பினர்களும் வலுவாக எம்பக்கம்நிற்கின்றார்கள். வளைவை நிரந்தரமாக அமைத்தே தீருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

## தெளிவற்ற...

காண சில கிராமசேவகர் பிரிவுகளின் எல்லைகளில் நிலவும் தெளிவற்ற தன்மையை தீர்க்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன நேற்று முன் தினம் இரா.சம்பந்தனின் இல்லத்திற்கு சென்று அவரை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு தொடர்பில் வினவியபோதே சம்பந்தன் குறித்த விடயத்தை தெரிவித்தார். (ம-3)

## மானிப்பாயில் இளைஞன் சுட்டுப் படுகொலை...

இச்சம்பவம் நேற்று இரவு 8.40 மணியவில் மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவிக்கையில்,

மானிப்பாய் - இணுவில் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவர் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் மானிப்பாய் இணுவில் வீதியில் ஆவா குழு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்திருந்தது. அதனால் மானிப்பாய், கோப்பாய், சுன்னாகம் மற்றும் கொடிகாமம் ஆகிய பொலிஸ்பிரிவுகள் இணைந்து ஆவா குழுவைக் கைது செய்ய சிறப்பு நடவடிக்கை எடுத்திருந்தது.

சிறப்பு அணி மானிப்பாய் - இணுவில் வீதியில் களமிறக்கப்பட்டிருந்தது. ஆவா குழுவைச் சேர்ந்தோர் வாள்களுடன் மோட்டார் சைக்கிள்களில் வந்தனர். அவர்களை வழிமறித்துக் கைது செய்ய பொலிஸார் முற்பட்டனர். எனினும் தப்பிக்க முற்பட்ட போது ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றவர் படுகாய மடைந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கஜேந்திரா வாள் ஒன்று சம்பவ இடத்தில் மீட்கப்பட்டுள்ளது. மேலும் நால்வர் தப்பித்துள்ளனர். அவர்களைத் தேடி தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சம்பவத்தையடுத்து மானிப்பாய் பொலிஸாருடன் இணைந்து ஏனைய பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸாரும் அழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை உயிரிழந்தவர் மற்றும் படுகாயமடைந்தவரின் விபரங்கள் தெரியவரவில்லை.) (ம-3,9,10,101)


கொவிசெத
திகதி 2019.07.20
சீட்டிழுப்பு இலக்கம் 2184
ஆங்கில எழுத்து B
வெல்லப்பட்ட இலக்கங்கள் 22 33 39 59
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20-07-2019
சீட்டிழுப்பு இலக்கம் 958
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 4 6 1 5 7 7
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 2019/07/20
சீட்டிழுப்பு இலக்கம் 202
ஆங்கில எழுத்து B
வெல்லப்பட்ட இலக்கங்கள் 22 33 39 59
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 20/07/2019
சீட்டிழுப்பு இலக்கம் 1444
எழுத்து 16
வெற்றி இலக்கம் 40 46 52 69 59 44
தேசிய லொத்தர் சபை

## அரியதோர் வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி கம்பனியில் வேலைவாய்ப்புக்கள் உள்ளன. யாழ்ப்பாணத்தில் வெற்றிடங்கள் உள்ளன. அடிப்படை சம்பளம் 18,000 /= - 25,000/= ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கல்வித்தகைமை நீங்கள் grade 10 படித்தவர்களா? or O/L, A/L Diplomala degree படித்தவர்களா? உடனே எம்மை தொடர்புகொள்ளுங்கள். வாய்ப்பை தவற விடாதீர்கள்.

**077 408 3273** (9657)

## வீடு/களஞ்சிய சாலை வாடகைக்கு

கடந்த 10 ஆண்டுகளாக Nestle நிறுவனத்தின் யாழ் களஞ்சிய சாலை ஆகவும் அலுவலகமாகவும் இருந்த வீடுகள் மீண்டும் வாடகைக்கு அலுவலகமாகவும் களஞ்சியமாகவும் கொடுக்கப்படும். இடம்:-யாழ்ப்பட்டினத்திலிருந்து அண்ணளவாக 1.5 km (வங்கி/அரச பணியாளர்கள் விரும்பப்படுவர்) தொடர்பு நேரம்: **5 pm - 10 pm**

**0778459311, 0776599748, 0777892028**

## கடை வாடகைக்கு

A9 வீதி அரியாலையில் சகல தளபாட வசதிகளுடனும் கடை வாடகைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு :**

**077 258 2326 / 076 616 3321** (9642)




## வேலைவாய்ப்பு



the Inner Circle **Design Your Dream Career**

- முகாமையாளர்
- உதவி முகாமையாளர்
- பயிற்றுவிப்பாளர்
- அலுவலக உதவியாளர்
- விநியோகஸ்தர்

மேற்காணப்படும் பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்விற்கு பின்வரும் தகைமையுடையோர் உடன் அழைப்புக்களை மேற்கொண்டு பதிவு செய்க.

தகைமைகள்:- O/L or A/L, வயதெல்லை :-18-30 முன்அனுபவம் அவசியமற்றது. தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் ஆரம்ப வருமானமாக 24500-45000+EPF,ETFவுடன் விசேட கொடுப்பனவுகள், தங்குமிடவசதி, மருத்துவ வசதி செய்து தரப்படும். (9660)

**தொடர்புக்கு :**

**076 770 7759,**

**077 999 4807**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி பிற்போடப்பட்டுள்ளது

### அமரர் இராஜதுரை செல்வராசா (பேபி)



அவர்களின் 22.07.2019 அன்று நடைபெற இருந்த வீட்டுக்கிருத்தியம் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (9556)

**தியேட்டர் லேன், இணுவில் கிழக்கு.**

**தகவல் : குடும்பத்தினர்**

## வங்கியில் வேலை...

கூறி கடந்த பெப்ரவரி மாதம் பெற்றுள்ளார். ஆனால் வங்கியில் வேலை வழங்குவதாக கொழும்புக்கு அனுப்பி ஒரு கடிதத்தையும் வழங்கியுள்ளார்.

ஆனால் வங்கியில் வேலை வாய்ப்பு எதுவும் வழங்கப்படாத விடத்து வேலை வாய்ப்பு வழங்கு வதாக தெரிவித்தவரிடம் பணத்தை அவர்கள் கேட்டுள்ளனர். ஆனால் கொழும்பில் உள்ளவர்தான் பணத்தை பெற்றதாக தெரிவித்ததை அடுத்து பண மோசடி செய்யப்பட்டதாக நேற்று சனிக்கிழமை நெல்லியடி பொலிஸில் முறையிட்டுள்ளனர். (ம-60)

## நுணாவிலில் கத்...

ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அயலவர் ஒருவரே முதியவரை கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இந் நிலையில் முதியவரை குத்தியவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு வந்ததால் சிறிது பரபரப்பு ஏற்பட்டு வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் தலையிட்டு குழப்ப நிலையைத் தவிர்த்தனர்.

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த 75 வயதான கதிர்காமு குமாரசாமி என்ற முதியவரே இவ்வாறு கத்திக் குத்திற்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகிறார். மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS

UK- **550** /=Kg
கனடா-**900** /=Kg
ஜேர்மனி- **700** /=Kg
நெதர்லாந்து-**700** /=Kg

**0768226240** V2 TRAVELS

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

**தொடர்பு: 076 835 1932,**

**021 223 2222 (உரும்பிராய்)** (9647)

## விற்பனைக்கு

சித்தன்கேணி சந்திக்கு அண்மையில் சித்தன்கேணி வட்டுக்கோட்டை பிரதான வீதியில் இருந்து 100 m தொலைவில் 1 3/4 பரப்புக் காணிக்குள் கிணற்றுடன் கூடிய வீடுவிற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு :**

**071 117 7526** (9653)

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

**அண்ணா பொதிகள் சேவை**

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-6988)

**021 221 5656** யாழ்ப்பாணம் **077 888 9388**

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

## வீடு வாடகைக்கு உண்டு

சகல வசதிகளுடன் சுன்னாகம் புத்தூர் வீதியில் ரயில் பாதைக்கு அருகில் 7 அறை, 2 கோல், 2 இணைந்த குளியலறை, கிச்சின் மற்றும் வாகன தரிப்பிட வசதிளுடன் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு :**

**0773686778 / 0777537374** (C-7046)

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது



**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்**
**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி, புத்தூர்

- எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால பயிற்சியுடன் வேலை வாய்ப்புக்கள் உண்டு.
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7'500/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- சம்பளம் -15'000/- (C-7018)

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**0768226243** v2vacancies@gmail.com

## 2019 நாடகம் A/L

(பரீட்சை வழிகாட்டல்)

22, 23.07.2019 (இரு தினங்கள்)

மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்)

காலை 8.30 - 1.00-

இடம் - **DMI** K.மங்களேஷ்

பதிவுகளை மேற்கொள்ளலாம்.


## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில் 3 1/2 பரப்பு காணியுடன் நவீன முறையில் அமைக்கப்பட்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு :**

**077 078 4447** (9619)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 06 - 06 - 1925

மறைவு 21 - 06 - 2019

### அமரர் பொன்னம்பலம் நாகமுத்து

திதி : பஞ்சமி

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை
ஒளிர்மதி செஞ்சடையாளை
வஞ்சகர் நெஞ்சடையாளை தயங்கு நுண்ணூல் இடையாளை
எங்கள் பெம்மானிடையாளை இங்கு என்னை இனிபடையாளை
உங்களையும் படையா வண்ணம் பார்த்திடுமே.

கடந்த 21.06.2019 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி பொன்னம்பலம் நாகமுத்து அவர்களின் துயரச் செய்தி கேட்டு ஓடோடிவந்து ஆறுதல் கூறிய அன்பர்களுக்கும், சகல உதவிகள் செய்தோர்க்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு வெளியிட்டோர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று 21.07.2019 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரது வீட்டில் நடைபெறவிருப்பதால், அத்தருணத்தில் தாங்களும் தங்களது குடும்ப சகிதமும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாதாள வைரவர் கோவிலடி, கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

அருள் நாயகி புத்தக நிலையம்
ஷேத்ரபாலகா புத்தக நிலையம் (கொடிகாமம்)

தகவல்: குடும்பத்தினர் (C-7044)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 226

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 21.07.2019 | தொலைபேசி : 021 222 3378



# அழிபடும் இந்துத் தொல்லியல்




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில். ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் புத்தர் சிலை அமைப்பதைக் கண்டித்து அகிம்சாவழிப் போராட்டம் நடத்திய தென் கயிலை ஆதீன சுவாமிகள் மீது வெந்நீர் ஊற்றிய சிங்கள விசமிகளின் செயலுக்குக் கண்டனம் தெரிவிக்க வேணும் என்று கூறியதும் வாத்தியார் வைத்திலிங்கம் ஆக்ரோசத்துடன் எழுந்தார்.

**வாத்தியார்:** தென் கயிலை ஆதீன சுவாமிகள் மீது வெந்நீர் ஊற்றிய செயல் இந்து சமயத்தை இழிவுபடுத்துகின்ற செயலாகும்.

இந்து சமயத்தின் தொன்மைச் சான்றுகள் இருக்கின்ற இடங்களில் பௌத்த விகாரைகளை அமைப்பதில் பௌத்த தேரர்களும் சிங்களப் பேரினவாதமும் கங்கணம் கட்டி நிற்கின்றன.

**விதானையார்:** இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பின்னணியில இருக்கிறது என்பதுதான் உண்மை.

**சாத்திரியார்:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** தமிழ் மக்களின்ர அரசியல் தலைமை எண்டு வெளிக்கிட்டிருக்கிற கூட்டமைப்பு சைவசமயத்தை அழிக்கவேணும் என்பதில மிகவும் மும்முரமாக இருக்குது.

இவ்வாறு சைவசமயத்தை அழிக்கின்ற வேலையை முன்னெடுப்பதில ஒரு மதவெறிப் பேராசிரியர் தலைமையில ஒரு குழுவும் இயங்குதாம். அந் தக் குழுவில இருக்கிற ஒருத்தர் ஆளுநரின் வட்ட மேசைக்கு வந்து போறதாகக் கேள்வி.

**சிறாப்பர்:** நீங்கள் இதைச் சொல்லுறியள். விடுதலைப்புலிகளை அழிக்கிறதில இந்தக் குழுவுக்கும் பெரும் பங்கு இருந்திருக்குது.

சைவசமயத்தை அழிக்கிற திட்டத்தைத் தயாரிக்கிற குறித்த பேராசிரியர் தலைமையிலான மதவெறிக்கு குழுவுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில இருக்கிற சில விரிவுரையாளர்களும் சப்போட் எண்டு கேள்வி.

**சாத்திரியார்:** இல்லையெண்டால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுழைவாயிலில இருந்த இரண்டு அழகான பெரிய நந்திகளை இடித்துவிட்டு, இப்ப அயடீன் குறைபாடுடைய தோற்றத்தில இருக்கிற- மூக்குடைந்த சிறிய நந்திகளை எலிகள் மாதிரி வைக்கினமோ?

**மூப்பர்:** அப்ப அந்த இரண்டு நந்திகள் தொடர்பில யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துபீடம் ஒன்றும் செய்யவில்லையோ?

**பண்டிதர்:** மூக்குடைந்த நந்திக்கும் அவையள் புதுவிளக்கம் சொல்லுவினம். ஏதோ நடந்து முடியட்டும். எங்கட காலம் முடிஞ்சு போய்ச்சுது. எதிர்காலச் சந்ததிகள்தான் பாவங்கள்.

(பண்டிதர் பெருமூச்சு விட்டபடி தோளில் கிடந்த உத்தரியத்தால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டார்)

**சிறாப்பர்:** அதுசரி, தென்கயிலை ஆதீனத்தின் மீது வெந்நீர் ஊற்றியதை கூட்டமைப்பின்ர தலைமை கண்டிக்கவில்லை எண்டால், கன்னியா வெந்நீரூற்றில புத்தர் சிலை அமைக்கிற விடயம் தொடர்பில அமைச்சர் மனோ கணேசன் ஜனாதிபதியோட சந்திக்கிற கூட்டத்திற்கும் கூட்டமைப்பின்ர எம்.பிக்கள் போகவில்லையாமே.



## பௌத்த ஆக்கிரமிப்பை கண்டிக்காத கூட்டமைப்பு

**வாத்தியார்:** ஜனாதிபதி மைத்திரியைச் சந்திக்கிறதுக்கு கூட்டமைப்பின்ர எம்.பிக்கள் விரும்பமாட்டினம். அவ்வாறு சந்திக்கிறதா இருந்தாலும் அரசாங்கத்திட்ட அனுமதி பெறவேணும்.

**மூப்பர்:** ஏன் வாத்தியார் அரசாங்கத்திட்ட அனுமதி பெறவேணும்.

**வாத்தியார்:** இவையள் அரசுக்கு ஆதரவாகக் கையுயர்த்திற எம்.பிக்கள் தானே. அப்ப அனுமதி எடுக்கவேண்டிய இடத்தில அனுமதி எடுக்காவிட்டால் கஷ்டம் தானே.

**விதானையார்:** நான் அறிந்தமட்டில கூட்டமைப்பின்ர கத்தோலிக்க எம்.பி. ஒருத்தர் கொழும்பில நிண்டவராம். அவரிட்ட ஜனாதிபதியைச் சந்திக்கப் போகவில் லையோ எண்டு கேட்க, கன்னியா விவகாரம் இந்து சமயம் சார்ந்தது. அதற்கு நான் ஏன் போகவேணும் எண்டு சொன்னவராம்.

**மூப்பர்:** என்ர மடு மாதாத்தாயே கன்னியாவில் சைவத்தமிழுக்கு பௌத்த சிங்களப் பேரினவாதம் நாசம் செய்ய, நான் கத்தோலிக்க எம்.பி. ஆகையால அந்தச் சந்திப்புக்குப் போகமாட்டன் எண்டு சொல்லுறது எந்த வகையில நியாயம்?

**சிறாப்பர்:** என்ன இருந்தாலும் அமைச்சர் மனோ கணேசனைப் பாராட்ட வேணும். கன்னியா விடயத்தில உடனடியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

(சிறாப்பர் கனகசபை இவ்வாறு கூறியதும் சாத்திரியார் சதாசிவம் எழுந்து அமைச்சர் மனோ கணேசனுக்கு நன்றி தெரிவித்துப் பிரேரணை நிறைவேற்ற வேணுமென்று கூற, அதனை ஏற்றுக் கொண்ட ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று அமைச்சர் மனோ கணேசனுக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றினர்.

தொடர்ந்து எழுந்த விதானையார், சைவசமய நிந்தனைக்கு கூட்டமைப்பு உடந்தையாக இருப்பதைக் கண்டிக்க வேணும் என்று கூற, மீண்டும் எழுந்த உறுப்பினர்கள் கூட்டமைப்பின் சைவசமய விரோதச் செயலை வன்மையாகக் கண்டிப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றி அமர்ந்தது.

இவ்வாறு அமருகின்ற நேரத்தில கங்காணி கார்த்திகேயன் தீட்டிய வாளுடன் ஆலடிக்கு வேகமாக வந்தார்.

அவரின் வருகையைக் கண்ட உறுப்பினர்கள் பயந்து போயினர். அதில் சாத்திரியார் மட்டும் கங்காணியார் இப்ப நீங்களும் ஆவாக்குழுவில சேர்ந்திட்டியள் போல... என்றார்.

**கங்காணி:** நான் ஒண்டும் ஆவாக்குழுவில சேரல்ல. கவுணாவத்தை வேள்வியில ஆடு வெட்டுவதை நீதிமன்றம் அனுமதித்து தீர்ப்பு வழங்கியிருக்குதல்லோ. அதுதான் ஆடு வெட்டுறதுக்காக இருந்த வாளை தோய்வித்துக் கொண்டு வாறன்.

**விதானையார்:** இந்த வாளை வைத்திருப்பது சட்டத்திற்கு முரணல்லோ.

**கங்காணி:** கவுணாவத்தை வேள்வியில ஆடு வெட்டுறதுக்கு நீதிமன்றம் அனுமதி தந்திருக்குதெண்டால், அப்ப ஆடு வெட்ட வாள் வைத்திருக்கலாம் தானே.

(கங்காணி இப்படிக் கூறியதும் ஆலடி மாநாடு அமைதியாகியது. அந்த அமைதியைக் குலைக்கும் வகையில மூப்பர் குரல் கொடுத்தார்)

**மூப்பர்:** அப்ப ஆடு வெட்டுகிற எல்லாரும் வாள் வைத்திருக்கலாமெண்டு சொல்லுறியள்.

**கங்காணி:** பின்ன... ஆடு வெட்டுறது எண்டால் வாள் தேவைதானே.

இவ்வாறு கங்காணி கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழர்களின் அரசியல் பலத்தை தீர்மானிக்கும் சக்தியாக இந்துமதம் தன்னை ஆக்கவேண்டும்



**2009**ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதிக்குப் பின்னர் தமிழ்மக்கள் தலைமையற்ற இனமாக ஆக்கப்பட்டு விட்டனர்.

தனிநாடு கேட்டுப் போராடிய ஓர் இனம் இன்று தனது இருப்பைக்கூடப் பாதுகாக்க முடியாமல் திண்டாடுகிறது எனும் போது நிலைமை எத்தகையதென்பதை எவரும் எளிதாகப் புரிந்து கொள்வர்.



யுத்தத்தின் பாதிப்புக்கள், உயிரிழப்புக்கள் என்ற விடயங்களைக் கடந்து இப்போது தமிழர் தாயகத்தில் பௌத்த விகாரைகளை அமைப்பதிலும் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதிலும் பௌத்த சிங்களப் பேரினவாதம் விடாப்பிடியாக நிற்கிறது.

இதுமட்டுமல்ல, இலங்கைத் திருநாட்டின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள் என்பதை மறைப்புச் செய்வதில் மிகப்பெரும் சதித்திட்டங்கள் நடக்கின்றன. இதற்குத் தொல்லியல் திணைக்களமும் துணை போகிறது.

இந்நிலையில்தான் திரு கோணமலை கன்னியா வெந்நீருற்றுப் பகுதியில் பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தின் அத்திபாரங்களை அழித்துவிட்டு, அதில் புத்தர் சிலையை அமைப்பதில் பௌத்த சிங்களப் பேரினவாதம் கங்கணம் கட்டி நிற்கிறது.

என்ன செய்வது, ஆயுத பலத்துடன் இருந்த ஓர் இனம் அவற்றையெல்லாம் இழந்து போகும்போது அதன் மீதான ஆக்கிரமிப்புக்களும் அக்கிரமங்களும் மலிந்து போகும் என்பதற்கு இலங்கைத் தமிழினத்தைத் தவிர வேறு எவரும் சிறந்த உதாரணமாக இருக்க முடியாது.

இவை ஒருபுறமிருக்க, கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் பிள்ளையார் ஆலயத்தை அழித்து அவ்விடத்தில் புத்தர் சிலையை அமைக்கின்ற நடவடிக்கைக்கு அஹிம்சை வழியில் எதிர்ப்புத் தெரிவித்த தென்கயிலை ஆதீன முதல்வர் மீது சுடுநீர் ஊற்றிய சம்பவம் இந்து மக்களின் மனங்களை ரணமாக்கியுள்ளது.

பொலிஸார் அருகிருக்க, ஒரு இந்துத் துறவி மீது சுடுநீர் ஊற்றப்படுகிறது என்றால் இந்து மதத்திற்கு இலங்கையில் இருக்கக்கூடிய மதிப்பு நிலை எவ்வாறு உள்ளதென்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

ஆம், இந்து மதகுரு தவிர்ந்த பௌத்த, கத்தோலிக்க, இஸ்லாமிய மதகுரு எவர் மீதும் இப்படியானதொரு சம்பவத்தை யாராலும் செய்ய முடியாது. அவ்வாறு செய்திருந்தால் அதன் விளைவுகள் வேறாக இருந்திருக்கும்.

ஆனால் சுடுநீர் ஊற்றப்பட்டவர் தென்கயிலை ஆதீன முதல்வர், ஓர் இந்து மதத்துறவி. எனவே அவர் மீது சுடுநீர் மட்டுமல்ல எதுவும் ஊற்றலாம் என்பதுதான் நிலைமை.

தவிர, தென்கயிலை ஆதீனக் குருமுதல்வர் மீது சுடுநீர் ஊற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கண்டனம் தெரிவிக்காமல் மௌனமாக இருக்கிறது என்றால், இந்து மதத்தை நிந்தனை செய்யவேண்டும் என்ற மனவக்கிரம் கொண்டவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் இருக்கின்றார் என்பதுதான் உண்மை.

அண்மைக்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பதவிகளை நிரப்புகின்ற செயற்பாடுகளில் இந்து மதம் முழுமையாக ஓரங் கட்டப்படுவதைக் கவனிக்கலாம்-

அதுமட்டுமல்ல வடமாகாண நிர்வாக அலகுகளிலும் இந்து மதத்தவர்கள் ஓரங்கட்டப்பட்டு விட்டனர் என்ற உண்மைகளை



நம்மவர்கள் ஒருபோதும் அறியப் போவதில்லை.

இவை ஒருபுறமிருக்க, இந்து மதத்திற்கு இவ்வாறானதொரு கீழ்நிலை ஏற்படுவதற்கான காரணம் என்ன என்று யாரேனும் கேள்வி கேட்டால், அதற்கான விடையும் பலவாறாக இருக்கும்.

இந்துசமயத்தைப் பொறுத்தவரை அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட தலைமைப்பீடம் இல்லை என்பது ஒரு பெரும் குறைபாடாகும்.

தவிர, இந்துமதத் தலைமைகளாக இருக்கின்றவர்கள், ஆன்மீகத்தின் வழியில் நிற்கின்ற வேளை ஏனைய மதங்கள் அரசியல் பலத்தைத் தம் கையில் வைத்துக்கொண்டு தாம் நினைத்தபடி தத்தம் சமய இருப்பு நிலையையும் அந்தஸ்தையும் உரியவாறு பேணிக் கொள்கின்றனர்.

இந்து மதத்தவர்கள் எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக் கொள்வார் என நம்புகின்றனர்.

இவ்வாறானதொரு நம்பிக்கையின் பின்னால் இயலாமைகளும் தட்டிக்கழிப்புக்களும் தப்பிக்கொள்ளும் தந்திரங்களும் இருக்கின்றன என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

சரி, குறைபாடுகளைக் கூறுவதனால், குறைகள் தீரப்போவதில்லை. சரியானவற்றை அமுலாக்கும்போதுதான் பாதிப்புத் தந்த கவலைகள் தீர்ந்து போகும்.

எனவே, இந்துமதம் தன்னை அதிகாரமுள்ள, அந்தஸ்துள்ள மதமாக ஆக்கிக்கொள்ள வேண்டுமாக இருந்தால், அதற்கான ஒரேவழி தமிழ்மக்களுக்கான அரசியல் பலத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக இந்துமதம் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இது ஒன்றுதான் இந்துக்கள் மீதான ஆக்கிரமிப்புக்களைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரேவழி.

ஆக, இந்து அமைப்புக்கள் ஒன்றுபட்டு தமக்கான தலைமையைத் தீர்மானிப்பதுடன் தனது முழுப்பலத்துடன் தமிழர்களுக்கான அரசியல் பலத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து அரசியலில் ஈடுபடலாகாது என்று கருதினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பல்ல எவரும் இந்துமத நிந்தனைக்கு எதிராகக் குரல் கொடுக்கமாட்டார்கள் என்பதே உண்மை.


**விதுரன்**

# வேள்வியிலும் பெரிது கேள்வி ஞானம்

ஞானம் என்பது பல வகைப்படும். கல்வி ஞானம், கலை ஞானம், அனுபவ ஞானம் போன்றவற்றின் வரிசையில் கேள்வி ஞானம் என்பது கருவில் இருக்கும் போதே தொடங்கக் கூடியது.

மற்ற வகை ஞானங்கள் மண்ணில் பிறந்த பிறகு வளரக்கூடியவை. தாயின் கருவில் இருக்கும் போதே நாராயண மகிமையை கேட்டதால் பிரகலாதன் பிறக்கின்ற போதே பக்தபிரகலாதனாக பிறந்தான் என்பதை புராணங்கள் இயம்புகின்றன. லவன், குசன் தாயின் வயிற்றில் இருக்கும்போதே இராம பாணம் கற்றவர்கள். இத்தகைய முயற்சிகள் இன்றும் நிகழ்வதோடு அவற்றால் பலனும் விளைகின்றன. இதை அறியும் போது கருவுற்ற நிலையில் தினமும் தொலைக்காட்சி தொடர்களைப் பார்க்கும் பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் என்ன விதமான தன்மைகளுடன் தோன்றும் என்பதை எண்ணும் போது கதி கலங்குகின்றது.

வாய் மொழியாக குருவால் சொல்லப்பட்டு சீடனால் சிரத்தையோடு கேட்கப்பட்டு தலைமுறைகளைத்தாண்டி வந்தவை தான் வேதங்கள் என்று காண்கின்றோம். அதற்காக வேதங்களை ஒலிப்பதிவு கருவியில் ஒலிக்கவிட்டு அதை செவிமடுத்து ஒருவர் வேத விற்பன்னர் ஆகிவிட முடியுமா? என்றால் இல்லை. எந்த வித்தையும் குருமுகமாக கற்கும்போது தான் பலிதமாகும். ஏனென்றால் நீண்டகால தவப்பலனும் மந்திர பலனும் கொண்ட குரு மந்திரங்களை உச்சரிக்கும் போது அவருடைய சங்கல்பமும் அருளும் கலந்து சீடனின் செவியில் நுழைந்து அவன் மனதில் அந்த வேதங்கள் நிலை கொள்கின்றன.



இதுபோன்ற சூட்சுமமான உபதேசங்களுக்கு மட்டுமன்றி புறவயமான வாழ்வில் எந்த ஒன்றை கற்றுக் கொள்வதற்கும் கேள்வி ஞானம் மிகச்சிறந்த வழியாகும்.

"கற்றிலன் ஆயினும் கேட்க என்கிறார் திருவள்ளுவர்." இசைத்துறையில் ஒரு குழந்தை ஈடுபட விரும்பினால் குருமுகமாக இசை கேட்பது போலவே பலரின் கச்சேரிகளையும் இடைவிடாமல் கேட்கின்றபோது அதன் விளைவாக கூடுதல் ஞானத்தை பெறமுடியும். சொற்பொழிவு கலையில் கேள்வி ஞானத்தில் பலர் வளர்ந்து இருப்பது கண்கூடு.

கேள்வி ஞானத்தை பொறுத்தவரை கற்றுக்கொள்ள முற்படுபவர்களின் கட்டுக்கு அடங்காத ஆர்வமும் அர்ப்பணிப்பும் மிக முக்கியம். முறைசாரா கல்வி என்பதின் முறையான தொடக்கம் கூட கேள்வி ஞானம் என்று கூறலாம்.

ஒரு வகையில் ஏகலைவன் கற்றுக்கொண்ட வில்வித்தை கூட கேள்வி ஞானம் என்னும் வகையில் அடங்கும். சீடனிடம் கட்டுக்கடங்காத ஆர்வம் இருக்குமேயானால் குரு கற்றுக்கொடுக்க மறுத்தாலும் கூட அவரிடம் இருக்கும் வித்தையை சீடனால் கற்றுக்கொள்ள முடியும் என்பதற்கான பெருமை மிக்க உதாரணம் தான் ஏகலைவன் வாழ்க்கை.

ஒருவன் அறிவாளி என்பதை உணர்த்துவதற்கு அவன் கல்விக் கேள்விகளில் சிறந்தவன் என்று சொல்வதை நாம் வழக்கமாகக் கொண்டிருக்கிறோம். நல்ல கேள்வியறிவு உள்ளவர்கள் தான் பணிவான சொற்களைப் பேசுகிற பக்குவம் வாய்க்கும் என்பது திருக்குறள் தரும் தீர்ப்பு.

"நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய வாயினர் ஆதல் அரிது"

-சிவனடியான்-




## கடி ஜோக்ஸ்


கணவனும் மனைவியும் பல் டாக்டரிடம் சென்றார்கள்.

"டாக்டர், அவசரமாக நான் போக வேண்டியிருப்பதால் மயக்க மருந்தெல்லாம் கொடுத்துப் பல்லைப் பிடுங்க வேண்டிய அவசியமில்லை. எவ்வளவு சீக்கிரம் பிடுங்குகிறீர்களோ, அவ்வளவுக்கு எனக்கு நல்லது" என்றாள் அந்தப் பெண்.

அவள் சொன்னதைக் கேட்டு மிகவும் வியந்த டாக்டர்.

"நீங்க உண்மையிலேயே மிகவும் தைரியசாலி தான். எந்தப் பல்?" என்றார்.

"அன்பே, உங்கப் பல்லைக் காட்டுங்க." என்றாள் அவள், தன் கணவர் பக்கம் திரும்பி.



க.அனுஷா, தரம் 6,
யா/நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.

## அத்திரி பாச்சா கொழுக்கட்டை

ஒரு ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். அவனுக்கு பக்கத்து ஊரில் பெண்ணெடுத்து திருமணம் செய்து வைத்தனர்.

வியாபார விடயமாக அவன் வெளியூர் சென்று விட்டதால் திருமணம் முடிந்து பலநாள் ஆகியும் அவனால் தன்னுடைய மாமியார் வீட்டுக்கு விருந்துக்குப் போக இயலவில்லை.

பின்னர் ஒருமுறை அவன் வியாபாரம் செய்ய சென்ற ஊரிலிருந்து மிக பக்கமாக அவனுடைய மாமியார் வீடு இருந்ததால் மனைவி இல்லாமல் தான் மட்டும் தனியாக அங்கு போயிருந்தான்.

வெகுநாள் கழித்து விருந்துக்கு வந்த மருமகனை மாமியாரும் நன்கு உபசரித்தாள். வேளைக்கு ஒரு பலகாரம் செய்து அசத்தினாள்.

அதில் மருமகனுக்கு மாமியார் செய்து கொடுத்த கொழுக்கட்டையே மிகவும் பிடித்தமானதாக இருந்தது. மேலும் மேலும் வேண்டுமென்று கேட்டு வாங்கிச் சாப்பிட்டவன் இதுவரை தன் மனைவி அதைச் செய்து தந்ததில்லை என்று அதன் பெயரைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.



விருந்துக்குப் பிறகு கிளம்பியவன் மறந்துவிடக்கூடாது என அந்த பலகாரத்தின் பெயரையே மனனம் செய்து உச்சரித்தபடியே நடந்தான்.

வழியில் குறுக்காக ஒரு வாய்க்கால் இருந்தது. அதைத் தாண்டிச் செல்லும் நோக்கில் குதித்தவன் சட்டென்று 'அத்திரி பாச்சா' என்றான்.

மிகப் பிரயத்தனப்பட்டு கடினமான ஒரு வேலையைச் செய்பவர்கள் இப்படி ஏதாவது வார்த்தையைப் பயன்படுத்துவார்கள். அது போல இவன் வாய்க்காலைத் தாண்டும் போது 'அத்திரி பாச்சா' எனக் கூற பிறகு கொழுக்கட்டைப் பேரை மறந்து அத்திரி பாச்சா எனக் கூறிக் கொண்டே வீட்டுக்குச் சென்றான்.

மனைவியிடம் மாமியார் செய்து தந்த பலகாரத்தின் சுவையை சிலாகித்துக் கூறியவன் எனக்கு அதேபோல அத்திரி பாச்சா செய்து கொடு என்றான்.

மனைவி குழம்பிப் போனாள். இதென்ன புதுப் பேராக உள்ளது. இப்படியொரு பலகாரம் எனக்குத் தெரியாதே என்றாள்.

கணவன் திரும்பத் திரும்ப அந்தப் பேரைச் சொல்ல மனைவி தெரியாது என்றே கூற கோபமான அவன் அவள் கன்னத்தில் ஓங்கி அறைய கன்னம் வீங்கிப் போனது.

இதைப் பார்த்த அவன் அம்மா அடப்பாவி இப்படி அடித்து கன்னம் கொழுக்கட்டை போல் வீங்கி விட்டதே என அவன் சந்தோசத்தில் குதித்தபடி அதேதான்... அந்தப் பேர்தான் கொழுக்கட்டை... கொழுக்கட்டை என்று குதித்தான்.

இவ்வளவு நேரமும் கணவன் கொழுக்கட்டை என்பதைத்தான் பேரை மறந்து அத்திரி பாச்சா என்றான் என்பதை புரிந்து கொண்டவள் அவனுக்கு நிறையச் செய்து கொடுத்தாள்...

குட்டீஸ் உங்களுக்கும் "அத்திரி பாச்சா" கொழுக்கட்டை பிடிக்கும் தானே?








**கன்னியா போராட்டம் தமிழ் மக்களைத் தட்டி எழுப்புமா?**

**அழைப்பு விடுக்காமலே விழுந்தடிச்சு ஓடிப் போய் போட்டோவுக்கு போஸ் கொடுப்ப வர்கள் அழைப்பு விடுத்தும் இல்லை என்று மறுக்கிறார்களே?**

**தமிழுக்கு எண் ஒன்றை அழுத்தவும். தொலைபேசிகளில் இதை கேட்கும் பாக்கியம் கிடைக்குமா?**

செழியன் — வேலணை

**நீ உரிமை இழந்தபின் உணர்வையும் இழப்பாய். இந்நிலையில் வாழும் தமிழினத்தின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது?**

இந்த நாட்டில் பேரினவாதம் என்ன சொல்கிறது என்றால் இது பௌத்த சிங்கள நாடு. இங்கு பேரினவாதம் வைத்ததுதான் சட்டம். பௌத்த சிங்கள நாட்டில் தமிழரும் வாழலாம். ஆனால் அவர்கள் உரிமை, உணர்வு என்று எதையும் பேசக்கூடாது.

நாங்கள் பிள்ளையாரை அகற்றிப் புத்தரை வைப்போம்.

கன்னியா வெந்நீரூற்றை சிங்கள தேசம் என்போம்.

நந்திக் கொடியை அறுத்து எறிந்து அட்டகாசம் செய்வோம். தமிழர்கள் அமைதியாக இருக்க வேண்டும். அப்படி இருப்பது தான் எங்களுக்குப் பிடிக்கும். இதைக் கடைப்பிடித்தால் இங்கு இருக்கலாம் இல்லையேல் வேறு நாட்டைப் பாருங்கள். ஓகே புரிஞ்சுதா தமிழ் மக்களே.

சுதன் — குப்பிளான்

**மாவீரர் கல்லறைகளை கிளறி எறிந்தவர்களுக்கு இந்துக் கோவில் பெரிய விடயமா?**

என்ன செய்ய, இப்போது தான் எம்மிடம் எதுவுமே இல்லையே. வரலாறு தெரியாதவர்கள் எல்லாம் எம்மை ஏறி மிதித்து எம் மேல் நின்று புது வரலாறு இயற்றி பேசுகின்றனர்.

எம் அடையாளங்களை பாதுகாக்கச் சென்றவர்களில் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது.

எமது மதத்தலைவர்கள் கீழ்த்தரமாகப் பார்க்கப்படுகிறார்கள். அவர்கள் மீது தேநீர்ச் சாயத்தை ஊற்றி எம்மை இழிவுபடுத்துகிறார். இதில் என்ன வேடிக்கை என்றால், இவ் விடயத்திற்கு எமது தமிழ்த் தலைமை இன்றுவரை வாய்திறக்காது இருக்கிறது ஏனோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அவர்கள் வாக்கு வாங்கும் வரைதானே எம்பக்கம். அதன் பின் அவர் நிற்கும் பக்கம் வேறுதானே.

பிரியதர்சன் — கெருடாவில்

**ஐ.தே.கவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார்?**

கரு ஜெயசூரிய, சஜித் பிரேமதாஸ என்று இன்னும் இரண்டு மூன்று பேரின் பெயர்கள் அடிபடுகிறது.

அண்மையில் ஐ.தே.கவின் பிரமுகர் ஒருவர் கூறும் போது, ஐ.தே.கவில் ஜனாதிபதி வேட்பாளருக்கு பஞ்சம் இல்லை என்று கூறியிருந்தார். அது நூறு வீதம் உண்மை.

திகழன் — யாக்கரு

**கன்னியா போராட்டம் தமிழ் மக்களைத் தட்டி எழுப்புமா?**

தட்டி எழுப்ப வேண்டும். ஆனால் தட்டிக்கேட்க வேண்டியவர்கள் அமைதியாய் இருக்கிறார்களே.

எமது பாரம்பரிய நிலம் மெல்ல மெல்ல சுரண்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. எமது பண்பாடு, கலாசாரங்கள் பேரினத்து அகன்ற வாய்க்குள் சங்கமமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் இப்போதும் எமது தமிழ்த் தலைமை அரசை உறுக்கிக் கேட்க துப்பில்லாமல் அடங்கி இருப்பது ஏன் என்று புரியவில்லையா? என் அறிவார்ந்த தமிழ் இனமே புரிந்து கொள் 'நக்குண்டார் நாவிழந்தார்' என்ற பழமொழியை.

வேகன் — யாழ்ப்பாணம்

**வியாசரே உங்களுக்கு சூடு சுறணை ஏதும் இருக்கா?**

ஒரு காலத்தில் இருந்தது. இப்போது இல்லைதான். வௌவாலுக்கு வாழ்க்கைப் பட்டால் தலைகீழாய்த் தொங்கித்தான் ஆக வேண்டும் என்பது போல நம் தமிழ்த் தலைமையின் கீழ் இருக்கும் வரைக்கும் எமக்குச் சூடு சுறணை ஏதும் வருமா சொல்லுங்கள்.

இருந்தும் இல்லாது போனதுதான் மிச்சம்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

சிவா — கரவெட்டி

**தமிழுக்கு எண் ஒன்றை அழுத்தவும். தொலைபேசிகளில் இதை கேட்கும் பாக்கியம் கிடைக்குமா?**

போகிற போக்கைப் பார்த்தால் தமிழுக்கு எண் மூன்றை அழுத்தவும் என்ற நிலை வரும் போல.

ஏதோ நாங்கள்தான் இந்த உலகின் மூத்த குடி என்று கத்துகின்றோம். ஆனால் ஒரு பிள்ளைக்கு மேல் பெறுவதை நிறுத்திக் கொள்கின்றோம்.

கேட்டால் வீடு, சீதனம், இதர செலவுகள். நிறையப் பிள்ளைகள் பெற்று எப்படிச் சமாளிப்பது என்று.முதலில் எம்மை நாம் வளர்த்துக் கொள்வோம். அதன்பின் தமிழுக்கு எண் ஒன்றை அழுத் துவது பற்றிச் சிந்திப்போம்.

நேதாஜி — வதிரி

**வியாழேந்திரன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விமர்சிக்கிறாரே ?**

என்னைப் பற்றி உங்களுக்கு தெரிவதிலும் பார்க்க எனது நண்பனுக்கு என்னைப் பற்றி அதிகம் தெரியும்.

ஏனென்றால் அவன் என்னுடன் கூட இருப்பவன், இருந்தவன். அதனால் எனது அடி - அந்தலை, பலம் - பலவீனம், நல்லது - கெட்டது, இப்படி எல்லாம் தெரியும்.

கூடாத கூட்டம் கூடி விட்டால் என்பதற்காக அவர் கூறுவதை தவிர்த்துப் பார்க்க முடியாது. ஏனென்றால் அவருக்கு எல்லாம் தெரியும் தெரிந்ததைக் கூறுகிறார்.

சயன் — யாழ்ப்பாணம்

**அழைப்பு விடுக்காமலே விழுந்தடிச்சு ஓடிப் போய் போட்டோவுக்கு போஸ் கொடுப்பவர்கள் அழைப்பு விடுத்தும் இல்லை என்று மறுக்கிறார்களே?**

புதுவருடக் கொண்டாட்டம், பொங்கல், தீபாவளி, எங்கு எது நடந்தாலும் பகை மறந்து ஓடிப்போய் ஒட்டி நின்று போட்டோவுக்கு போஸ் கொடுப்பவர் மக்கள் நலன்சார்ந்த சந்திப்பென்றதும் அழைப்பு வரவில்லை. முறையாக வெற்றிலை, பாக்கு வைத்து அழைக்கவில்லை என்று காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் தான் தமிழ் மக்களின் உரிமைகளைப் போராடித் தந்த விடப் போகிறார்களாம். மடைத் தமிழினம் உணராதவரை இவர்கள் வாழ்நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள். அவ்வளவுதான்.

கலை — மிருசுவில்

**இப்படியே போனால் என்ன ஆகும்?**

ஒரு திரைப்படத்தில் ஒரு வழிப்போக்கன் மற்றவரிடம் வழி கேட்கிறான். தனது கையை நீட்டி காட்டியபடி இப்படியே போனால் எங்கே போகும் என்று கேட்க, அதற்கு அவன் சொல்கிறான் இப்படியே போனால் கைதான் வலிக்கும் கையை கீழே இறக்கி விட்டுப் போ எனச் சொல்வான். இது என்னவோ நகைச்சுவைக்குச் செய்திருந்தாலும் தற்போதைய தமிழனத்தின் நிலை இதுதான்.

இழந்து இழந்து இருந்தது எல்லாம் இழந்து இனி இழக்க எதுவும் இல்லை என்ற நிலைக்கு அப்பால் சென்ற பின்பும் இப்போதும் ஈனர் இழுத்துக் கொண்டே இருக்கிறார்.

இனி எம்மை கடவுள் கூட காப்பாற்ற முடியாது. பிள்ளையாரைத் தூக்கி எறிந்து விட்டு புத்தரை அமர்த்தினால் அது எப்படி சாத்தியமாகும்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**



கவிதைக் கலசம்

## என் ஆசான்

அக்கராயன் அறிவுக்கூடமதில்
அயராது உழைத்திட்ட
ஆசிரியப் பெருந்தகையே!
அன்பும் அரவணைப்பும்
படிப்புடன் பண்பும்
பாரினில் நான் வாழ
பல வழிகள் சொல்லியும்
பக்குவமாய் எனை வளர்த்த
பாசமிகு ஒளி விளக்கே

தேன்மொழியாம் தமிழ்மொழியை
சிறப்பாக ஊட்டி
தெளிவுடனே இலக்கணத்தை
முறையாகக் காட்டி
பல தடவை புரியவைத்து
பாடம்தனைப் புகட்டி
படிக்கவேண்டும் என்ற
மனவெறியை மூட்டினீரே

மணிவிழா நாயகியாய்
விடைபெறும் பொழுது இது
இறைதுணை தினம் இருக்க
புகழ் எங்கும் பரவட்டும்
பல்லாண்டுகாலம் வாழ்க வாழ்கவென
பணிவுடன் வாழ்த்துகின்றேன்

யோ.யனுசன்,ஸ்கந்தபுரம்

## விடியலின் ஓர் கனவு

விடிய விடியப் பேசியவர்கள் விடியவேண்டி
வடிய வடியக் குடிக்கிறார்கள் மடியவேண்டி

படியப் படியத் துடிக்கிறார்கள் மக்களெல்லாம்
பணியப் பணியப் பகுத்தறிவு போச்சுதல்லோ

விடிய வேண்டிக் கனவுடனே வானத்தில்
வெள்ளி பார்க்க உயர்ந்து நின்றதனை

வெள்ளை அடித்துப் பேசிப்பேசி நின்றாயே
வெள்ளி பார்த்து வந்ததன் முடிவேது

நாலு மாட்டையும் நாலுதிசையில்
கட்டிப் போட்ட நரிக்கூட்டம்

கனவுகள் திசைமாற சலுகை தரும் கூட்டம்
துணிவோடு நின்றவரை தூங்கவைத்த ஆட்டம்

விடிய முன்னே கனவு கண்டாயோ
விடிய வேண்டிக் கடமை செய்தாயோ?

கனவுகள் கலைந்த பின்னும் விடிவெள்ளி
பூத்ததினால் பார்த்தவர்க்கு வழிகாட்டி நிற்கும்

மாவையூர் கவி

## இதுவே நமக்கினி விதியாகும்

வணக்கங்கள் வந்தனங்கள்
வரவேற்றிடும் சிரங்குவிப்புகள்...
காலவெளித் தரிசனங்களாய்
வாரிக்கொடுத்து சூரியன்களாய்
உதித்துக் கொண்டிருப்பவர்கள்
தமது புலன்களில் இருந்து
எந்த ஞான ஒளியையும்
நமக்குத் தரவேயில்லை
வெறுமையில் வெப்பத்தையே பரிசாக்கினர்
ஆவியீர்ப்புக்கள் அவ்வப்போது
இடம்பெற்றாலும்
ஈற்றில் கிடைத்தது இரத்த மழையே!
எங்கள் வாழ்க்கை புத்தகக் கோடுகளில்
தீர்வுத் திசைக்கு யுத்தமொன்றே
கல்வெட்டாகி தீர்க்க தரிசன
"தலை" சிந்தனையாய் நிலைபெற்றிட
தீர்வுத் திட்ட முடிச்சுக்களை
அவிழ்க்க முடியாது
சூரியன் தன் குடும்பத்தோடு
தன் ஒழுக்கினில் ஒரு சீர்த்திடலாய்
நிலை பெற்றிடும்
இதுவே நமக்கினியும் விதியாகும்

கொற்றை சிவ.சிவகுமார்

## கவனம் கவனம்

எம் இருப்புக்களை
இல்லாதொழிப்பதற்கு
இழுத்துக் கட்டி நிற்கிறது
பேரினவாத பூதம்

போதிமரத்து போதனைகளை
காற்றில் பறக்கவிட்டு
கதைபேசுகிறது
சிற்றினத்தை விலை பேசுகிறது
வேகமெடுக்கிறது வீரக்கூட்டமொன்று

பாகப்பிரிவினையல்ல
பாகம்பிரித்து எம் நிலத்தை
சூறையாடிச் சுவைத்து
ஏப்பம் விடுகிறது
கொடிய முதலைக்கூட்டம்


உரிமை கேட்டு தொடர்ந்த
எம் அறவழிப் போராட்டங்களை
எச்சில் சுடுநீர் தெளித்து
அசிங்கம் செய்கிறது
ஏனோ எம் ஆவி துடிக்கிறது

எமக்கு வாய்த்த தலைமையோ
மௌனம் மௌனம் இல்லையேல்
உறக்கம் ஆழ்ந்த உறக்கம்
அதுவும் இல்லையேல்...
இணங்கிப் போய் நாசமறுப்பது

இப்படியே போனால்
எமக்கென்ற நிலமின்றி அநாதையாய்
அவர் தெருக்கோடியில் கிடக்க நேரிடும்
கவனம் கவனம்

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 456



### விடை பெறவில்லை!

முட்களும்
பூத்துக் காய்த்து
கனியும் நெஞ்சில்
ஈரமிருந்தால்
முன்வினை முன்னோர்வினை
தன்வினை
விடைபெறவில்லை
செய்வினைகள் அற

இ.ஜெ.பாலன்

### விலங்குப் பதிவு

கையை முள்ளுக்கம்பி
கடிந்து களரி காணுமா?
பையப் பைய எம் மண்ணை
பதுக்கிச் சூறையாடுது
வைத்து மதத்தை மீறி ஆடும்
வழிதெரியா வஞ்சகர்
விழிப்பு நிலைக்கு ஆக்கி அவர்
விலங்குப் பதிவை விளக்கிடும்

வைகதன்
கொக்குவில்

### தாங்குகின்றாயோ?

முட்கம்பியை கையால்
இறுகப் பிடித்திருக்கும் உறவே
உடைத்தெறிந்து வெளிவர
முற்படுகின்றாயோ அல்லது
முள்ளாகக் குத்தும் ரணங்களின்
வலிகளை தாங்கமுடியாமல்
முட்கம்பியைப் பிடித்து
தாங்குகின்றாயோ?

ச.பிரநிதன்
மட்டுவில்

### தவிப்புடன்

அன்றைய யுத்தத்தில்
முட்கம்பி வேலிக்குள்
நாம்பட்ட துயரங்கள்
இன்றும் மறக்கமுடியாமல்
எம் மனதில் வடுக்களாக
எதிர்காலமும் இல்லாமல்
நிகழ்காலமும் புரியாமல்
தவிப்பதை யார் அறிவார்?

இடைக்காடு
க.செல்வமலர்

### எம் கதி இதுதானா?

முட்கம்பி வேலிக்குள்
முடங்கிப் போய்
நீதியின்றி
வலிகளைச் சுமந்து
அவலப்படும்
நம்மவர்கள்
ஒருபுறம்
கொடுங்கோலுக்கு
முண்டு கொடுத்து
அரசியல் செய்து
பிழைப்பு நடத்தும்
அசிங்கம்
மறுபுறமுமாய்
தமிழினத்தின்
தலைவிதியை
திருத்தி
எழுதமாட்டாயா?

நல்லூர்
தேன்நிலா

### தூக்கில் தொங்கி

தூக்கில் தொங்கி சாக்குக்கூறி
தூசாய் காற்றில்
தொலைந்திடும்
வாக்குக் கேட்டு அரச கட்டில்
வழியாக காட்டும் உலகிற்கு
நாக்குத் தொனித்து
நாசம் செய்யும்
நஞ்சுவார்த்தை நம்பிடும்
போக்குக்கெட்ட அரசுக்கிது
புரியவில்லையா இனும்

வை.க.தவமணிதாசன்
கொக்குவில்

## மௌனத்தின் தேடல் -457



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

### துடித்த கரம்

ஊருக்காய்
உழைத்த கை
உரிமைக்காய்
போராடிய கை
துடிக்குமேழை
வடித்த கண்ணீரை
துடைத்த தூயகை
ஊர் வாழ்வுயர
உதவிய கை
விழிநீர் துடைத்து
அரவணைத்து
ஆறுதல் கூறிய கை
இன்று
முள்ளியிலே
விழுந்த கரம்
முடிவின்றி வேதனையில்
துடித்த கரம்

சி.திவ்வியா
யா/ப.மெ.ம.வி.

### கண்ணாம் பூச்சியாயிது?

மதம் பிடித்த
யானையாய்
தமிழ் மண்ணில்
மீளும் அழிவுகள்
வதம் செய்யும்
தமிழ் மண்ணை
வரலாறுகூட
குழியினுள்
காவிக்கதிகாரம் கையில்
கொடுத்து
கண்ணாம்பூச்சியாயிது
பாவி நிலைக்குத்
தள்ளப்பட்டே
பரதேசியாய்தான்
போகுவாய்

கந்ததாசன்
நல்லூர்

# 5ஜி தோசம்




நிரேசை புறோக்கர் ஏற இறங்கப் பார்த்துக்கொண்டிருந்தார். புறோக்கரின் பார்வை நிரேசுக்கு எரிச்சலைத்தந்தது. என்னை ஏன்ராப்பா குறுகுறுவென்று பார்த்துக்கொண்டிருக்கிறாய்? பிள்ளைக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொன்னா, நீ என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றாய்?

அதில்லை அண்ணை, நீ போடுற கண்டிசனைப் பார்த்தா பொண்ணுக்கு மாப்பிளை பார்க்கிற மாதிரி தெரியல. ஏற்கனவே ஒருதரம் செய்து வைத்து இரண்டு வருசத்தில எல்லாம் முடிந்து போய்விட்டது.

இனியாவது கொஞ்சம் இறங்கி வாருங்கோ, முதலில் இடத்தை மாறுங்கோ. நான் பிறகு வருகிறேன் என்றவாறு கிளம்பினார் புறோக்கர். "இரண்டு வருசத்தில" "புறோக்கரின் வார்த்தைகள் நிரேசை மூன்று வருடங்கள் முன்னே 2045 ஆம் ஆண்டுக்கு கொண்டு சென்றது.

## கி.பி. 2045

மகளுக்கு 24 வயது. சம்பந்தம் தானாக வருகின்றது என்று எண்ணி பிரான்ஸ் மாப்பிள்ளைக்கு செய்து வைத்தனர். மாப்பிள்ளையும் யாழ்ப்பாணத்தில் கஸ்தூரியார் ரோட்தான், நிரேஸ் குடும்பம் நாவலர்ரோட். மாப்பிள்ளை அரன் 2019 இல் பிறந்தவன்.

## கி.பி.2019

அரனின் அம்மா, அன்றைய காலத்தில் கலியாணம் செய்தால் வெளிநாட்டு மாப்பிள்ளையைத்தான் செய்வேன் என்று ஒற்றைக்காலில் நின்றவள். அரனின் தாய் வந்தனா. அவள் விரும்பியது போலவே பிரான்ஸ் மாப்பிள்ளை கிடைக்க,திருமணமும் இந்தியாவில் வெகுவிமரிசையாக நடந்து, தேன்நிலவும் இந்தியாவில் கொண்டாடி வந்தனாவின் மாப்பிள்ளை பிரான்ஸ் சென்றார்.

இந்தியாவில் கோயில்கள் எல்லாம் ஏறி இறங்கிய பின் யாழ்ப்பாணம் வந்திறங்கினர் வந்தனா குடும்பத்தினர். வந்தனாவுக்கோ தலைகால் புரியாத மகிழ்ச்சி, பெருமை. வீட்டுக்குவந்தவுடன் ஸ்கைப்பில் குடும்பம் நடத்தத் தொடங்கினாள் வந்தனா.

இந்தியத் தேன்நிலவின் விளைவாக உருவானவன்தான் அரன். இரட்டிப்பு மகிழ்ச்சியில் இருந்தவளுக்கு குழந்தை பிறக்க முதலே பிரான்ஸ் சென்று விட வேண்டும் என்ற உணர்வு எழுந்து கொண்டது. தனது குழந்தை எப்படியும் பிரான்ஸ் மண்ணில் பிறக்க வேண்டும் என்றஎண்ணம், அயலவர் களின் கேள்விகளாலும்,மாமியாரின் தொண தொணப்பாலும் அதிகரித்துக் கொண்டது.

வந்தனாவின் மாப்பிள்ளைக்கோ சரியான வதிவிட உரிமையோ, குடியுரிமையோ பிரான்ஸில் இல்லை. இதில் எப்படி வந்தனாபிரான்ஸ் செல் வது? பிரான்ஸ்சில் குழந்தை பிறப்பது?நாட்கள் செல்லச் செல்ல ஸ்கைப் வைபரானது. வைபர் வட்ஸ்அப் ஆனது. 4ஜி 5ஜி ஆனது. ஆனால் வந்தனாவால் இவற்றில் தான் குடும்பம் நடத்த முடிந்ததே ஒழிய பிரான்சில் இல்லை.

இதில் மாமியார் தன்னுடன் இருக்க வேண்டும் என்று தொல்லை ஒருபுறம். கடைசியில் அரன் யாழ்ப்பாணத்திலேயே பிறந்தான் வளர்ந்தான். அரனின் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் சபதம் எடுத்துக்கொண்டார்கள் அடுத்த பிறந்த நாளை பிரான்சில் கொண்டாடுவதாக. 5ஜி தொழில்நுட்பத்தில் பிறந்த நாள் கொண்டாட்டத்தை தெளிவாகப் பார்த்துக் கொண்டான் பிரான்சில் இருந்து அரனின் அப்பா.

வந்தனாவுக்கும் அரனுக்கும் ஐபோனும், 5ஜி இணைப்பும் குடும்ப உறுப்பினர்களாக ஒன்றியிருந்தன. அவர்கள் இருவருக்கும் அவை இல்லாவிட்டால் வாழ்க்கையே சூனியமாகிப்போனது.

முகநூல்களில் 5ஜிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சமூக ஆர்வலர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டது. இவர்களுக்கு எங்கே விஞ்ஞான வளர்ச்சி விளங்கப் போகின்றது. எப்படியாவது இந்தக் கூட்டத்திடம் இருந்து தப்பி பிரான்ஸ் போய்விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

சரியாக 10 வருடம் கழித்து அரனின் பதினொராவது பிறந்தநாளை ஒரு மாதிரியாக பிரான்ஸில் கொண்டாடினாள் வந்தனா. பிரான்ஸில் அம்மா அப்பாவை சகோதரர்களை இழந்ததை விட 5ஜி இணைப்பை பிரான்ஸில் இழந்ததுதான் அவளது மிகப்பெரிய இழப்பு. அதற்கான காரணத்தை தேடும் போது தான் கணவனின் பதில் அவளைச் சிந்திக்க வைத்தது. இப்போது யாழ்ப்பாணத்திலும் 5ஜி ஐ தடை செய்துவிட்டதாகக் கேள்விப்பட்டாள்.

## கி.பி. 2045

ஏனோ தெரியவில்லை வந்தனாவுக்கு இப்பொழுதெல்லாம் யாழ்ப்பாண வாழ்க்கை முறைபிடித்துக் கொண்டிருந்தது. சிலவருடங்களுக்கொருமுறை யாழ்ப்பாணம் போய்வரும் போதெல்லாம் நினைத்துக்கொள்வாள் யாழ்ப்பாணத்திலேயே இருந்திருக்கலாம் என்று. ஆனால் பிள்ளைகள்? எப்படியும் மகனுக்கொரு யாழ்ப்பாணத்து பெண்ணைக் கட்டி வைக்கவேண்டுமென்று நினைத்து இணையத்தில்,திருமண சேவைகளில் தேடிப்பிடிக்கப்பட்டவள்தான் நிரேசின் மகள் நிரந்தரி.

தன்னைப்போல் இல்லாமல் மகனது மனைவி திருமணம் முடிந்தவுடன் தனது கணவனுடன் பிரான்ஸ் வந்துவிட வேண்டுமென்பதில் உறுதியாகவும் இருந்தாள். ஒரு திருமண மண்டபத்துக்கு பணத்தினை கட்டிவிட அவர்களே திருமணத்தை இனிதே நடத்தி முடித்தார்கள்.

**சரியாக 10 வருடம் கழித்து அரனின் பதினொராவது பிறந்தநாளை ஒரு மாதிரியாக பிரான்ஸில் கொண்டாடினாள் வந்தனா. பிரான்ஸில் அம்மா அப்பாவை சகோதரர்களை இழந்ததை விட 5ஜி இணைப்பை பிரான்ஸில் இழந்ததுதான் அவளது மிகப்பெரிய இழப்பு. அதற்கான காரணத்தை தேடும் போது தான் கணவனின் பதில் அவளைச் சிந்திக்க வைத்தது.**

பிரான்ஸ் வந்து சிலநாட்கள் சந்தோசமாக இருந்த நிரந்திரிக்கும் கணவனுக்கும் இடையில் இடைவெளி தோன்றத் தொடங்கியது. கணவன் அடிப் படையில் ஆர்வமின்றியிருப்பதை அம்மாவிடம் தொலைபேசியில் கூற, அம்மா மாமியாரிடம் கூற, இறுதியில் மருத்துவரிடம் வந்துநின்றனர்.

மருத்துவர்கள் பலபரிசோதனைகள் செய்து, பல பழைய கதைகள் கேட்டு, இறுதியாக அவர்கள் கூறியதைக் கேட்ட வந்தனாவுக்கும் நிரந்தரிக்கும் தூக்கி வாரிப்போட்டது.

அரனுக்கு ஆண்மையே இல்லையென்றும், அவரால் குடும்ப வாழ்வில் ஈடுபட முடியாதென்றும் கூறிய மருத்துவர்கள் அதற்குக் காரணம் தாய் கருவுற்ற காலத்தில்.யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட 5ஜி அலைக் கற்றைகளாக இருக்கலாம் என்றும் கூறினர்.

நிரந்தரியின் வாழ்க்கையில் இடிவிழுந்ததைப்போல் இருந்தது. ஆனாலும் உண்மையை உணர்ந்த அரன் குடும்பத்தினர் நிரந்தரிக்கு நிரந்தர வதிவிடவுரிமையை பெற்றுக் கொடுத்து விவாகரத்தும் கொடுத்திருந்தனர். பிரான்ஸ் வாழ்க்கை மெல்ல மெல்ல கசக்கத் தொடங்கியது நிரந்தரிக்கு.

வந்தனாவுக்கோ மகனின் நிலையை நினைத்து உலகமே இருண்டு போனது. எவ்வளவு முட்டாள்தனமான சமூகமாக இருந்து விட்டோம் அப்போது? வந்தனாவின் தகப்பனார் அன்றுஒரு அரசியல் வாதியாக இருந்து 5ஜி க்கு வக்காளத்து வாங்கியதை நினைக்க அருவருப்பும் எரிச்சலும் வந்தது. எல்லாம் அற்பத்தனமான பணத்துக்காகத்தானே? இன்று வம்சமே இல்லாமல்?

## கி.பி. 2048

2045 இல் இருந்து மூன்று வருடமாக நிரந்தரிக்கு மறுமணம் செய்து வைப்பதில் தீவிரமாக இருந்தார் நிரேஸ். ஆனால் முடியவில்லை. ஒருகாலத்தில் மறுமணம் செய்வதற்கு தயங்கியவர்கள் இன்று இலகுவாக அதனை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் நிரந்தரிக்கு திருமணம் கைகூடுவது என்பது கேள்விக்குறியாக இருந்தது.

ஏனென்றால் யாழ்ப்பாணத்தில் இப்போது கிரகபாவம், செவ்வாய்த் தோசம், காலசர்ப்பதோசம் என்பனவெல்லாம் போய், "5ஜி தோசம்" திருமணங்களில் தாக்கம் செலுத்தத் தொடங்கியிருந்தது.

2019ஆம் ஆண்டு தொடக்கம் 2029 ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்.நகரப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பிறந்தவர்களுக்கு மலட்டுத் தன்மை, புற்றுநோய் இருப்பதாக செய்திகள் பரவ, 5ஜி பலரது திருமண வாழ்க்கையில் விளையாடியது.

இதனை உறுதி செய்வதுபோல் விவாகரத்து வழக்குகள், குழந்தைப் பேறின்மைக்காக, புற்றுநோய்க்காக வைத்தியசாலையை நாடுவோரின் எண்ணிகையும் அதிகரித்திருந்தது.

நிரந்தரிக்கு திருமணம் செய்ய வேண்டுமென்றால், புறோக்கர்சொல்வதுபோல் இடம்மாறவேண்டியதுதான் என்று எண்ணிய நிரேஸ் யாழ். நகரத்தை விட்டு சொந்த ஊரான காரைநகருக்கு போய் இருப்பதுதான் சரி என முடிவு செய்துகொண்டார்.

முடிவு செய்ததோடு மட்டும் நின்றுவிடாமல் காரைநகரில் குடியேறியும் விட்டார். இனிவரும் சம்பந்தங்களில் நாங்க காரைநகர் ஆட்கள்,ஆனால் யாழ்ப்பாணத்தில்தான் கனகாலம் இருக்கின்றோம் எனச் சொல்லத் தேவையில்லை.

"நாங்க கா்ரைநகர், மகள் விவாகரத்தானவர், பிரான்ஸ், மகப்பேற்று மருத்துவரின் சான்றிதழும் உள்ளது, யாரும் சம்பந்தம் இருந்தால் சொல்லுங்க" என்றுசொல்ல வேண்டியதுதான்.

ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணம் செய்யலாம் என்றால்,நான் ஒரேஒரு பொய்தான் சொல்கின்றேன்," பிள்ளை பிறந்து வளர்ந்தது எல்லாம் காரைநகர் தான்".

**மானிப்பாய் சுதன்**




1983ஆம் ஆண்டு, இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் மற்றும் போர் காரணமாக, தமிழர்கள் பலர் உயிரைப் பாதுகாத்திட நினைத்து, கடல் மார்க்கமாக குடும்பத்தோடு இந்தியா வந்தோம். எங்களைச் சிறப்பு முகாம்களில் தங்க வைத்தனர். இங்கு வந்து 36 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், இன்னமும் அகதிகளாகவே உள்ளோம். நாங்கள் அகதிகளாக வாழ்ந்து, அகதிகளாகவே சாக வேண்டுமா?

# அகதிகளாக வாழ்ந்து அகதிகளாகவே சாகவேண்டுமா?

## வேதனையில் வெதும்பும் இலங்கைத் தமிழர்கள்

**'இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நிலையை நினைத்தாலே இதயத்தில் இரத்தம் கசிகிறது' - சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் வேதனை பொங்க தெரிவித்த கருத்து இது.**



திருச்சி, கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் வசித்துவரும் ஜெகதீஸ்வரன், யோகேஸ்வரன் உள்ளிட்ட 65 இலங்கைத் தமிழர்கள், இந்திய குடியுரிமை வழங்கக்கோரி கடந்த 2009ஆம் ஆண்டு வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கில் சில தினங்களுக்கு முன்பு தீர்ப்பு வழங்கிய போதுதான் நீதிபதி இப்படிச் சொன்னார்.

இந்த வழக்கில், '16 வாரங்களுக்குள் மத்திய, மாநில அரசுகள் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமையை வழங்க வேண்டும்' என நீதிமன்றம் உத்தரவிட்டும்கூட, அது தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்காமல் இழுத்தடிப்பதாகக் குற்றம் சாட்டுகிறார்கள் ஈழத்தமிழர்கள்.

திருச்சி, கொட்டப்பட்டு அகதிகள் முகாமுக்குச் சென்றோம். அடையாளத்தை மறைத்துக்கொண்டு நம்மிடம் பேசிய ஈழத்தமிழர் ஒருவர், "ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், தமிழகத்திலிருந்து இலட்சக்கணக்கான தமிழர்களை, தோட்ட வேலைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அப்படிக் குடியேறிய தமிழர்களை, இலங்கை விடுதலை அடைந்த பிறகு திருப்பி அனுப்பிட அந்நாட்டு அரசு முடிவெடுத்தது. 1964இல் இந்திய அரசும் இலங்கையும் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்கள். பாதிப்பேர், திரும்பிவர மனமில்லாமல் அங்கேயே தங்கி விட்டார்கள்.

கடந்த 1983ஆம் ஆண்டு, இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் மற்றும் போர் காரணமாக, தமிழர்கள் பலர் உயிரைப் பாதுகாத்திட நினைத்து, கடல் மார்க்கமாக குடும்பத்தோடு இந்தியா வந்தோம்.

எங்களைச் சிறப்பு முகாம்களில் தங்க வைத்தனர். இங்கு வந்து 36 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், இன்னமும் அகதிகளாகவே உள்ளோம். நாங்கள் அகதிகளாக வாழ்ந்து, அகதிகளாகவே சாக வேண்டுமா?

நாங்களும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள்தான். வயிற்றுப் பிழைப்புக்காக எங்கள் முன்னோர் தோட்ட வேலைக்குச் சென்று அங்கு குடியேறினார்கள். அதைக் கருத்தில் கொண்டு எங்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, கடந்த 10 ஆண்டுகளாக சட்டப் போராட்டம் நடத்தி வருகிறோம்.

இதுவரை வழக்கை இழுத்தடித்த தமிழக அரசு, நாங்கள் சட்ட பூர்வமாக இந்தியா வரவில்லை என்றும், அதனால் எங்களுக்குக் குடியுரிமை பெறத் தகுதியில்லை என்றும் நீதிமன்றத்தில் கூறியது.

இங்கே வந்து 36 ஆண்டுகளாக குடும்பத்தினருடன் வசிக்கும் எங்களை, வாழ்நாள் முழுக்க அகதிகளாகவே வைத்திருக்க நினைக்கிறார்கள்போல.

எங்கள் வலிகளையும் வேதனைகளையும் புரிந்துகொண்ட நீதிபதி, இந்திய குடியுரிமை பெற புதிய விண்ணப்பம் வழங்க வேண்டும் என்றும், அந்த விண்ணப்பங்களை மத்திய அரசுக்கு அனுப்பி, 16 வாரங்களில் நடவடிக்கை எடுத்து குடியுரிமை வழங்கிட வேண்டும் என்றும், திருச்சி மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டார். இதன் பிறகாவது எங்கள் வாழ்க்கையில் வெளிச்சம் வருமா எனக் காத்திருக்கிறோம்" என்றார்.

தாயகம் திரும்பியோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில அமைப்பாளர் சட்டத்தரணி தமிழகன், "தமிழகத்தில் 115 அகதிகள் முகாம்கள் இருக்கின்றன. 1,05,043 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர். முகாம்களில் 73,241 பேரும், வெளியில் 31,802 பேரும் உள்ளனர். தற்போது உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

முகாம்வாசிகளில் உயர்கல்விக்குச் செல்வோர் எண்ணிக்கை மிகக் குறைவு. இவர்களால் வீடோ, நிலமோ வாங்க முடியாது. வெளியூர் சென்று சில நாட்கள் தங்க முடியாது. அந்தளவுக்குக் கண்காணிப்பும் கட்டுப்பாடும் இருக்கிறது.

இந்தியாவில் பிறந்த அகதிகளின் குழந்தைகளுக்கு, பிறப்பின் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை வழங்கப்படவேண்டும் என்பது விதி. ஆனால், இந்திய அரசு அவர்களை இந்தியக் குடிமக்களாக ஏற்கவில்லை. அவர்களையும் அகதிகளாக்குகிறார்கள்.


மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஒரு தமிழர். அவர் வெளியுறவுத்துறையில் பணியாற்றியதால், இலங்கையில் நடந்த விவகாரங்கள் குறித்தும் போரின் துயரங்கள் குறித்தும் முழுமையாக அறிவார். ஆகையால், 36 வருடங்களாகக் குடியுரிமைக் கேட்டுப் போராடும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கிட வழிவகை செய்ய வேண்டும்.

மதுரை உயர்நீதிமன்றக் கிளை உத்தரவுப்படி, அனைத்து அகதிகள் முகாம்களுக்கும் அரசு அதிகாரிகளை அனுப்பி, உரிமை கோரும் விண்ணப்பங்களை அரசு தரவேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இதற்காகச் சிறப்புப் பிரிவு ஏற்படுத்தி, பெறப்படும் விண்ணப்பங்களை விரைவாக மத்திய அரசுக்கு அனுப்பி குடியுரிமை கிடைக்க வழி செய்ய வேண்டும்" என்றார்.

மத்திய அரசு மனது வைக்குமா?

**ஜூனியர் விகடன்**

# பாரம்பரிய உணவு 'கூழ்' கலக்கும் குணசேகரன்



இன்றைய தற்போதைய நவீன உலகில் புதிய வகை உணவுகள் மற்றும் புதிய வகைப் பானங்கள் தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்த சூழலை தான் பல்வேறு சூழலில் அவதானித்திருக்கின்றோம். இருப்பினும் தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளில் ஒன்றாகிய "கூழ்" தற்போதைய நவீன உலகிலும் நிலைத்து இருப்பதையும் அவதானிக்க முடியும். அந்த வகையில் பிரான்பற்று பண்டத்தரிப்பு என்ற இடத்தில் வேலுப்பிள்ளை குணசேகரன் கூழ் வியாபாரம் செய்து வருகின்றார். அவருடன் ஒரு நேர்காணல்.

❖ இன்றைய சூழலில் பாரம்பரிய உணவுகள் மறைந்து வரும் நிலையில் கூழ் உணவகம் அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் உருவான விதம் பற்றி குறிப்பிட முடியுமா?

♦ பிரான்பற்று பண்டத்தரிப்பில் தற்போது கூழ் உணவகம் இருக்கும் இடத்தில் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னரே கூழ் உணவகம் எனது உறவினரால் ஆரம்பிக்கப் பட்டது. இருப்பினும் அது பொருளாதார சிக்கல்களாலும் கூழின் தரத்தினாலும் கைவிடப்பட்டது. அதன் பின்னர் சுமார் ஒரு வருடங்களுக்கு மேலாக தற்போது என்னால் சுவை மிகுந்த கூழ் உணவகமாக என்னால் இயக்கப்பட்டு வருகின்றது.

❖ உங்கள் கூழில் உள்ள தனித்துவம் என்ன?

♦ என்னுடைய கூழில் உடனடியாகக் கிடைக்கும் உள்ளீடுகளையே நான் பயன்படுத்துவேன். அதாவது அதிகாலையில் காரைதீவில் கிடைக்கும் மீன், நண்டு, கணவாய், இறால், கருவாடு போன்றவற்றை "கூறல்" மூலம் வாங்கி எனது கூழில் பயன்படுத்துவேன். இவ்வாறே மரக்கறிகளையும் காலையில் சென்று அதனையே நான் பயன்படுத்துவதால் எனது கூழ் ஏனைய கூழ் உணவகங்களில் இருந்து வேறுபடுவதாக எண்ணுகின்றேன். அத்தோடு என்னால் இரசாயனப் பதார்த்தங்கள் எதுவும் கூழில் சேர்க்கப்படுவதில்லை என்பதும் எனது கூழில் தனித்துவப் பண்பாக அமைகின்றது.

❖ இன்றைய பொருளாதார நெருக்கடியில் விலைவாசி ஏற்றத்தில் கூழுக்கு தேவையான உள்ளீடுகளை எவ்வாறாக பயன்படுத்துகின்றீர்கள்?

♦ மரக்கறிகளும், கடல் உணவுகளும் நாளுக்கு நாள் விலை தொடர்பில் ஏற்ற இறக்கமாகவே காணப்படுகின்றது. இருப்பினும் என்னுடைய விலையில் மாற்றம் இல்லை. முழுக் கோப்பைக் கூழ் 60 அல்லது 70 ஆகவும் அரைக்கோப்பைக் கூழ் 40 ஆகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

❖ யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் மாத்திரம் கூழ் உணவகங்கள் காணப்ப டுகின்றன. இருப்பினும் ஏனையவற்றோடு போட்டி நிலைகள் ஏதாவது காணப்படு கின்றதா?

♦ அவ்வாறு எதுவும் இறைவன் அருளால் ஏற்படவில்லை. இதுவரை காலமும் அவர் அவர் தங்களுடைய கூழ்களை தரமாக்க பல்வேறு விடங்களைச் செய்வர். நானும் என்னுடைய கூழை சிறப்படையச் செய்ய பல்வேறு மரபு நுட்ப முறைகளை பயன்படுத்துகின்றேன். அது தவிர போட்டி நிலைமைகள் என்று அதனை கூறிவிட முடியாது.

❖ உங்கள் கூழ் குடிப்பதற்கு உங்கள் கிராம மக்கள் வருகின்றார்களா?

♦ எங்கள் கிராம மக்கள் உட்பட பல்கலைக்கழக மாணவர்கள், கைதடி இளைஞர்கள் என்று யாழ்ப்பாணத்து பல்வேறு பிரதேசங்களில் இருந்து கூழ் குடிக்க வருகின்றார்கள்.

❖ இன்றைய சூழலில் பலதரப்பட்ட உணவுகளும், குடிபான வகைகளும் எமது கலாசாரத்தில் மேலோங்கிய நிலை கூழ் விற்பனை தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

♦ புதிய நவீன உணவுகளும், குடிபானங்களும் ஆக்கிரமித்த சூழலிலும் கூட எமது மக்கள் அதிக அளவில் கூழில் நாட்டம் கொண்டுள்ளனர். நான் கூழ் விற்பனையில் இருந்து அறிந்து கொண்டுள்ளேன். ஆரம்பத்தில் இரண்டாயிரம் ரூபா மூலதனத்தில் ஒரு நாள் பொருட்கள் வாங்கி அதில் கூழ் காய்ச்சிய எனக்கு தற்போது 7000 ரூபாய் வரை கூழ் காய்ச்சுவதற்கு தேவைப்படுகின்றது. முன்னைய காலங்களை விட தற்போது கூழ் குடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

❖ கூழ் குடிப்பதற்கு அதிகம் வருபவர்களாக நீங்கள் இனங்காணப்படுபவர்கள்?

♦ இளைஞர்களே அதிகம் கூழ் குடிப்பதற்கு வருகின்றனர். அது மாத்திரம் இன்றி கூழை வீட்டாருக்கும், நண்பர்களுக்கும் எடுத்துச் செல்கின்ற நிலையும் அதிகமாகக் காணப்படுகின்றது.

❖ இன்றைய இளைஞர்கள் அதிகம் குடிபானம் அதாவது மதுபானங்களில் சிக்கியிருக்கின்றார்கள் என்று கருத்து வலுப்பெற்று வருகின்றது. ஆனால் நீங்கள் இளைஞர்களே அதிகம் கூழ் குடிக்கின்றார்கள் என்ற கருத்தை கூறுகின்றீர்கள். இது பற்றி உங்கள் கருத்து?

♦ அது அவர் அவரைப் பொறுத்து வேறுபடுகின்றது. இளைஞர்கள் கூழ் குடிப்பதற்கு அதிக எண்ணிக்கையில் வருகை தருகின்றனர். இளைஞர்கள் எதை தெரிவு செய்ய வேண்டும் என்று என்னால் கூற முடியாது. அது அவர்களின் எண்ணங்களைப் பொறுத்தது. இருப்பினும் கூழ் என்பது மரபு மாத்திரம் இன்றி உடலுக்கும் ஆரோக்கியம் என்பதை மட்டும் என்னால் கூற முடியும்.

**முள்ளிவாய்க்கால் சிறி**
**ஊடகக் கற்கைகள்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**

# உதட்டுச் சாயம் உருவான கதை

பணக்கார பெரிய நாட்டு நாகரிகம் என்று பலரும் நம்பிக் கொண்டிருக்கும் லிப்ஸ்டிக்கை கண்டுபிடித்தவர்களும் தயாரித்து உபயோகித்தவர்களும் இந்தியர்கள் தான். இந்திய துணைக் கண்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது சிந்துசமவெளி நாகரிகம். தற்போதைய பாகிஸ்தானின் பெரும்பான்மையான பகுதிகளையும் இந்தியாவின் குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கியது தான் சிந்துசமவெளி நாகரிகம்.

சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன் தற்போதைய பஞ்சாப் பகுதியில் வாழ்ந்த மக்கள் திருமண வைபவத்தின் போது மணப்பெண்களை அலங்கரிக்க சில ஒப்பனைப் பொருட்களை பயன்படுத்தி இருக்கிறார்கள். அவற்றில் ஒன்றுதான் லிப்ஸ்டிக். தேன் கூட்டில் இருந்து தேனை நீக்கிய பின் கிடைக்கும் மா போன்ற தேன் மெழுகு சில தாவரங்களில் இருந்து எடுக்கப்பட்ட நிறமிகள் ஆகியவை கலந்த கூழ் மை தான் இதற்கான மூலப்பொருட்களாக பயன்படுத்தப்பட்டன. இதுதான் இன்றைய நவீன லிப்ஸ்டிக் தயாரிப்பதற்கான முன்னோடி சிந்தனை. சில நூற்றாண்டுகளுக்கு பின் வணிகர்கள் மூலம் மெசபடோமிய பிரதேசத்தை எட்டியது. சிலர் விலை உயர்ந்த நகைகளை பொடிபொடியாக்கி உதட்டில் சாயமாக பூசியிருக்கிறார்கள்.




சிலர் வண்ணத்துப்பூச்சிகளின் உடலில் உள்ள நிறம், மயில் இறகு நிறம் ஆகியவற்றைக் கொண்டும் உதட்டை அலங்கரித்து இருக்கிறார்கள். இஸ்லாமியர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 936- 1258) தேன் மெழுகு, ஆமணக்கு எண்ணெய், வர்ண பசைகள் கொண்டு அபுசல்காசிம் என்ற முஸ்லிம் மேதை, முதன்முதலாக திடவடிவிலான லிப்ஸ்டிக்கை உருவாக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார்.

கி.பி.16 ஆம் நூற்றாண்டு வரை லிப்ஸ்டிக்கை உபயோகிப்பதில் பொதுமக்களுக்கு மிகப் பெரிய தயக்கம் இருந்தது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து ராணி எலிசபெத் (கி.பி. 1533-1603) தான் லிப்ஸ்டிக்கை முதன்முதலில் பயன்படுத்திய மிகப் பெரிய பிரபலம் ஆவார். ஆவரைத் தொடர்ந்து பல நடிகர்- நடிகைகள் பயன்படுத்தினார்கள்.

இதன் மூலம் லிப்ஸ்டிக் பிரபலமாக தொடங்கியது. 1880 ஆம் ஆண்டு வாக்கில்சாரா பென்ஹார்ட் என்ற புகழ்மிக்க நடிகை லிப்ஸ்டிக் அலங்காரத்துடன் பொது நிகழ்வுகளுக்கு வந்தார்.

இதன் பின் பொதுமக்களுக்கும் லிப்ஸ்டிக் பயன்படுத்தும் பழக்கம் ஏற்பட்டது. குர்லைன் என்ற பிரெஞ்சு நிறுவனம் வணிக நோக்கில் மிகப் பெரிய அளவில் லிப்ஸ்டிக்கை தயாரித்து சந்தைப்படுத்தியது. 1912 ஆம் ஆண்டு மாரிஸ்லெவி என்பவர் லிப்ஸ்டிக் அடைக்கப்பட்ட உருளைகளை உலோகத்தில் தயாரித்து அறிமுகப்படுத்தினார்.

1923 இல் திருகினால் லிப்ஸ்டிக் இருக்கும் பகுதி மேலே வரும் வகையிலான உலோக உருளைகளை ஜேம்ஸ்புரூஸ் பேசன் என்பவர் கண்டறிந்தார். இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலத்தில் தான் லிப்ஸ்டிக் உருளைகளில் லிப்ஸ்டிக் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்தன.

1930 ஆம் ஆண்டு எலிசபெத் ஆர்டன் என்ற அழகுக்கலை நிபுணர் பல்வேறு நிறங்களை தரும் நிறமிகளை கண்டறிந்து அறிமுகப்படுத்தினார். அதன் பிறகுதான் பல்வேறு வகையான நிறங்களில் லிப்ஸ்டிக் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்தன. லிப்ஸ்டிக் பயன்படுத்தும் கலாசாரம் மேற்கத்தேய கலாசாரம் அல்ல. இந்தியர்களின் கலாசாரம் தான். அதை உலகம் முழுவதும் பயன்பாட்டுக்கு எடுத்துச் சென்றவர்கள் ஐரோப்பியர்களே.

**தொகுப்பு**
**வி.பிரணவன்**
**யாழ். கலட்டி**

# தென்கயிலை ஆதீனத்தின் மீது ஊற்றப்பட்ட கோப்பிக்கறை
# பேரினத்தின் மீது பட்ட கறுப்புக்கறை



**" இந்த நாடு அதள பாதாளத்தில் இருந்து மீண்டும் கட்டியெழுப்பப் படுவதற்கு ஒரு உன்னதமான சேவைகளை முன்னெடுக்காமல் மீண்டும் மீண்டும் அதே கலவரங்களை உருவாக்கியவர்களின் இயல்புகளை, காடைத்தனங்கள் காட்டுவதென்பது இந்த நாடு மீண்டும் பாதாளத்தில் சென்று கொண்டிருக்கிறது என்பதை உலகத்தின் முன் மேலுயர்த்தி காட்டி நிற்கிறது "**



கன்னியா வெந்நீரூற்று பகுதியில் இடம்பெற்ற வெறுக்கத்தக்க செயலானது மனித வர்க்கத்திற்கு ஒவ்வாத செயல் அரங்கேறியிருப்பது கண்டு தமிழர்களாகிய நாம் மட்டுமல்ல இலங்கையர்கள் என்று சொல்கின்ற அத்தனை பேரும் வெட்கித் தலை குனிய வேண்டிய காலகட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறோம்.

இன்று 2020ஆம் ஆண்டை நெருங்கும் இத்தகைய நவீனத்துவத்திலிருந்து கொண்டு இவ்வாறான கீழ்த்தரமான ஒரு மனிதப் பண்பு இல்லாத செயல்களை இந்த மானிடப்பண்பற்ற பேரினவாதிகள் அங்கு மேற்கொண்டிருக்கிறார்கள் என்றால் இந்த நாடு ஆசியாவின் அதிசயம் ஆகாது. அதற்கு வேறு விதமான அதிசயங்களை நிகழ்த்தக்கூடும் என்பதற்கு ஒரு உதாரணத்தை காண்பித்திருக்கிறது.

கன்னியா வெந்நீரூற்று இருக்கிற விநாயகர் பாரம்பரியமாக பிள்ளையார் இருந்த அந்த இடத்திலிருந்து சைவப் பெருமையை பறைசாற்றுகிறார்.

அத்தகைய சைவசமய விழுமியங்களை வழித்துத் துடைத்து விட்டு ஒரு பேரினவாத ஆக்கிரமிப்பு வலயமாக மாற்றுவதற்கான திட்டமிட்ட சிங்கள பகுதியாக ஆக்கிரமிப்பதை கண்டிக்கிறோம்.

இவ்வாறான வலுக்கட்டாய ஆக்கிரமிப்புக்கெதிராக சைவம் தழைத்தோங்கிய ஒரு மாவட்டம், சைவ விழுமியங்கள் மேம்பட்ட ஒரு பகுதி, ராவணேஸ்வரன் ஆண்ட வரலாற்று சிறப்புமிக்க பகுதி, இதிகாசங்களில் பாடல்கள் பாடப்பெற்ற தலத்தை அமைத்துக் கொண்ட பகுதி.

தேவாரப் பாடல்களில் வந்த "இராவணன் மேலது நீறு" என்ற வகையில் இராவணேசுவரன் ஆண்ட அவனால்தோண்டப்பட்ட வெந்நீரூற்று அமைந்த பகுதி. இதிலே புத்தரை இப்போது பலாத்காரமாக குடியேற்றலாம் என்று பேரினவாதம் எதிர்பார்த்திருக்கிறது.

பாரம்பரியமாக ஒரு இனம் வாழ்ந்து வந்த பிரதேசத்தை ஆக்கிரமித்து மெல்ல மெல்ல புற்றுநோய் போல் அதை ஒரு ஆக்கிரமிப்பு பிரதேசமாக மாற்ற இந்தக் கைங்கரியத்தை கச்சிதமாக மேற்கொள்ள முடிகிறது பேரினவாத் தரப்பினால்.

ஒரு நாட்டினுடைய பெருமை என்பது அதனுடைய வரலாற்று படிமங்களில் இருந்து ஆரம்பிக்கிறது.

நாட்டினுடைய சிறப்பு என்பது அதனுடைய தொன்மையும், பழைமையும், வரலாற்றுச் சிறப்பும் அதனால் அது நிமிர்ந்து நிற்கும்.ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இங்கு பூர்வீகமாக இருந்தவர்கள், ஐயாயிரம்,பத்தாயிரம் வருடங்களுக்கு முன்னர், பாரம்பரியமாக வாழ்ந்தவர்கள் என அத்தகைய பூர்வீக மக்கள் அவர்களது விழுமியங்களை, அடையாளங்களை அழித்து விட்டு, அவர்களது அடையாளங்களை குழி தோண்டி புதைத்துவிட்டு இன்று பேரினவாதம் தனது மதத்தை பிரதிஷ்டை செய்வதற்குத் தயாராகிறது.

அந்தவகையில் கன்னியாவில் இடம்பெற்ற அந்த ஆக்கிரமிப்புக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை வழிமறித்து, எத்தனையோ இடர்பாடுகளை ஏற்படுத்திய போதிலும், அந்த இடத்தை பார்வையிடச் சென்ற தென் கயிலை ஆதீனக் குரு முதல்வர் மீது கோப்பி தண்ணீரினால் ஊற்றி அவமானப்படுத்தியமையானது, தென் கயிலை ஆதீன குருக்கள் மீது பட்ட எச்சி கோப்பி அல்ல! அது இந்து மதத்திலிருந்து துறவறம் மேற்கொண்ட புத்த பகவானின் காவியுடையில் தெளிக்கப்பட்ட கறைபடிந்த நீர் ஆகும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை இன்னமும் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் இருந்து பாடம் படிக்காத சிங்களத் தரப்பாக இன்னமும் இருக்கிறார்கள் என்பதை நினைக்கையில் மிகவும் வேதனையாக இருக்கிறது.

இந்த நாட்டின் கறைபடிந்த பக்கங்களால் எழுதப்பட்ட 1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்துக்குப் பிறகு அந்தக் கலவரத்தை தோற்றுவித்தவர்களின் வாரிசுகள் இன்றும் அதே ஈனச்செயலை செய்வது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயலாக இருக்கிறது.

இவ்வாறான ஈனத்தனமான குரு முதல்வர்கள் மீது விஷமத்தனமாக, காட்டுத்தனமாக நடந்து கொண்டிருப்பது பௌத்த சமயத்திற்கு ஏற்படுத்திக்கொண்ட இழுக்காகும், புத்த பகவான் மீது விசிறப்பட்ட கறையாகும் என்பதை அனைத்து புனிதமிக்க பௌத்தர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த நாடு அதளபாதாளத்தில் இருந்து மீண்டும் கட்டியெழுப்பப்படுவதற்கு ஒரு உன்னதமான சேவைகளை முன்னெடுக்காமல் மீண்டும் மீண்டும் அதே கலவரங்களை உருவாக்கியவர்களின் இயல்புகளை, காடைத்தனங்கள் காட்டுவதென்பது இந்த நாடு மீண்டும் பாதாளத்தில் சென்று கொண்டிருக்கிறது என்பதை உலகத்தின் முன் மேலுயர்த்தி காட்டி நிற்கிறது.

ஒரு பௌத்த பிக்கு மீது ஒரு தமிழன் அல்லது சைவன் இவ்வாறு செயற்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை அனைத்து மக்களும் அறிவார்கள்.

ஆனால் இன்று தென்கயிலை ஆதீன சுவாமி மீது எச்சில் கோப்பி ஊற்றப்பட்ட பின்னரும் அனைத்துத் தரப்பும் அமைதியாக இருக்கிறது என்றால், தமிழர்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள். சைவர்கள் சமாதான போக்கையும், அன்பையும் அவர்களுடைய சைவம் போதிக்கின்ற அந்த அன்பின் நிமித்தம் அவர்கள் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால்அமைதியின்வடிவான, ஒரு சமாதானத்தின் வடிவாக, ஞானத்தின் வடிவாக இருக்கின்ற, விளங்குகின்ற புத்த பகவானை பின்பற்றுகிற அவருடைய போதனைகளை பின்பற்றுகிற இந்தப் பௌத்த புதல்வர்கள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதில் எங்கள் தமிழ்த் தரப்பு மிகவும் ஆழ்ந்த அனுதாபத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

கு. மதுசுதன்




# ஐ.சி.சி.

## தீர்ப்பை மாத்திச்சொல்லு

கிரிக்கெட்டின் பிறப்பிடத்திற்கு முதல் முறையாக உரிமையோடு சென்றிருக் கிறது உலகக்கோப்பை.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் மோதிய இந்த உலகக் கோப்பையின் பைனல் சுப்பர் ஓவர் வரை சென்று, அதிலும் டை ஆகி, கடைசியில் பவுண் டரி கணக்கில் முடிவாகியுள்ளது. சொல் லப்போனால், ஒரு மிகப்பெரிய தொடரின் கடைசி நாள், சில சர்ச்சைகளையும் பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

இறுதிப்போட்டியில் மட்டும் மூன்று முறை நடுவர்களின் தீர்ப்பு, ரிவ்யூ முறையால் மாற்றப்பட்டது. நியூசிலாந்து அணிக்கு ரிவ்யூ இல்லாத போது, ஒரு தவறான முடிவால் ராஸ் டெய்லரின் விக்கெட்டை இழக்கவும் நேரிட்டது. அப்படிப்பட்ட நிலையில், ரிவ்யூவை முன்பே பயன்படுத்திய குப்திலைத்தான் பெரும்பாலானவர்கள் சாடினார்கள். ஆனால், நடுவர்களின் தவறான முடிவு கள் எப்படியான பாதிப்பை ஏற்படுத்துகி ன்றன என்பதைப் பற்றிக் கேள்விகள் கேட்கப்படவில்லை. இந்த முழுத்தொடரி லும், குமார தர்மசேனாவின் முடிவுகள் 4 முறை ரிவ்யூவால் மாற்றப்பட்டுள் ளன. ரிச்சர்ட் கெட்டில்பரோவின் முடிவு கள் 5 முறை மாற்றப்பட்டுள்ளன. இப்படி ஒவ்வொரு முன்னணி நடுவரின் பல முடிவுகளும் ரிவ்யூவுக்குப் பிறகு மாறி யுள்ளன. இப்படி இருக்கையில், நடுவர் கள்மீது ஐ.சி.சி. எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை.

சில வாரங்களுக்கு முன்பு, 'இதுவே கால்பந்து நடுவர்கள் தவறு செய்திரு ந்தால், பிபா அவர்களைத் தூக்கி வீசி யிருக்கும்' என்று சொல்லியிருந்தார் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஜாம்பவான் மைக்கேல் ஹோல்டிங். வர்ணனையில் இருந்தவர் நடுவர்க ளைக் குறைசொல்ல, அவரைத்தான் எச்சரித்தது ஐ.சி.சி. ஆனால், அம்பயர் களை அப்படியே விட்டுவிட்டது. ஐ.பி.எல். தொடருக்குப் பிறகு, உலகக்கோப்பை என்ற மிகப்பெரிய தொடரிலும் தொடர் வது கிரிக்கெட்டுக்கு நல்லதல்ல.

அடுத்து, பவுண்டரிகளின் அடிப்ப டையில் எப்படி வெற்றியாளரை முடிவு செய்யலாம் என்கிறார்கள் பலர். அத னால், இங்கிலாந்து உலகக் கோப் பையை வென்றது சரியில்லை என்கி றார்கள். விதி தவறுதான். ஆனால், அதன் அடிப்படையில்தான் அந்தப் போட்டி ஆடப்பட்டிருக்கிறது எனும்போது அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண் டும்.

உண்மையில், பவுண்டரி விதி என்பதைவிட, சுப்பர் ஓவர் விதியே பிரச்சினையாகத்தான் தெரிகிறது. ஒரு நாள் போட்டிகளும், இருபது-20 போட் டிகளும் ஒன்று கிடையாது. ஒரே அணுகு முறையில் இரண்டையும் விளையாடி விட முடியாது. அப்படியிருக்கையில், இருபது-20 போட்டிகளுக்காக வகுக் கப்பட்ட ஒரு விதியை ஒருநாள் போட் டியில் பயன்படுத்துவது சரியாகுமா, 100 ஓவர்கள் நடந்த ஒரு போட்டியின் முடிவை, 2 ஓவர்கள் தீர்மானிப்பது சரியாகுமா?!

பெரிதாக சர்ச்சையாகாத, ஆனால் விவாதிக்கப்பட வேண்டிய ஒரு முக்கி யமான விடயம் - வில்லியம்சனுக்குக் கொடுக்கப்பட்ட தொடர் நாயகன் விருது. '578 ஓட்டங்கள் அடித்தார், ஜென்டில் மானாக நடந்து கொண்டார், அணியைச் சிறப்பாக வழிநடத்தினார்' என்று சொல்லி அவருக்கு அந்த விருது கொடுக்கப் பட் டுள்ளது. பட்ஸ்மேனாக வில்லி யம் சனின் செயற்பாட்டையும், அவரது கப்டன்ஷிப்பையும் ஏற்றுக் கொள்வோம். ஏன் அதில் ஜென்டில்மன் என்ற விட யத்தைச் சேர்க்க வேண்டும். கிரிக் கெட்டை அமைதியான வீரர்கள் விளை யாடுவதுதான் சரி என்ற ஒரு தவறான புரிதலை இது ஏற்படுத்தும்.

606 ஓட்டங்கள் அடித்ததோடு, 11 விக்கெட்டுகள் வீழ்த்தி, வங்கதேச அணியின் ஒட்டுமொத்தச் செயற்பாட் டையும் தாங்கிய ஷகிப் அல் ஹசன் இந்த விருதுக்குத் தகுதியானவர் இல்லையா? வில்லியம்சன் நியூசிலாந்தை வழிநட த்தினார் என்றால், ஷகிப் ஒரு கத்துக் குட்டி அணியைப் பறக்கவிட்டிருக்கிறார். அதுவும் பெரிய விடயம்தான். சொல்லப் போனால், அதுதான் மிகப்பெரிய விட யம். ஒரு சிறிய அணியின் அடுத்த தலைமுறையை, அந்த விருது எந்த அளவிற்கு ஊக்குவித்திருக்கும்?!

கிரிக்கெட் விதிகளைப் பற்றிய கேள் விகள் அண்மைக்காலமாக அதிகமாகி யிருக்கின்றன.

அதற்கான பதில்களை ஐ.சி.சி. சரியான முறையில் சொல்ல வேண்டும். அந்த அவசியத்தை ஏற்படுத்திய விதத் திலும் இந்த உலகக்கோப்பை சக்சஸ் தான்!

## உலகக்கோப்பை வரலாறு

| | | |
|---|---|---|
| 1975ம் ஆண்டு | கிளைவ்லோயிட் | மேற்கிந்தியத் தீவுகள் |
| 1979ம் ஆண்டு | கிளைவ்லோயிட் | மேற்கிந்தியத் தீவுகள் |
| 1983ம் ஆண்டு | கபில்தேவ் | இந்தியா |
| 1987ம் ஆண்டு | அலன் போர்டர் | அவுஸ்திரேலியா |
| 1992ம் ஆண்டு | இம்ரான்கான் | பாகிஸ்தான் |
| 1996ம் ஆண்டு | ரணதுங்க | இலங்கை |
| 1999ம் ஆண்டு | ஸ்டீவோ | அவுஸ்திரேலியா |
| 2003ம் ஆண்டு | பொண்டிங் | அவுஸ்திரேலியா |
| 2007ம் ஆண்டு | பொண்டிங் | அவுஸ்திரேலியா |
| 2011ம் ஆண்டு | டோனி | இந்தியா |
| 2015ம் ஆண்டு | மைக்கல் கிளார்க் | அவுஸ்திரேலியா |
| 2019ம் ஆண்டு | இயன் மோர்கன் | இங்கிலாந்து |

# இஸ்லாமியர்களுக்கு எதிரான அடக்குமுறை

## இறுகும் சீனாவின் கழுத்து

கடந்த முப்பது ஆண்டுகளாக எவ்வித ஆதரவும் இல்லாமல் சீனாவின் அடக்கு முறையால் அல்லல்படும் உய்குர் இஸ்லாமியர்களுக்கு முதல்முறையாக 22 மேற்கு நாடுகளிடமிருந்து பலமான ஆதரவுக்குரல் எழுந்துள்ளது.

அதில் ஒன்றுகூட இஸ்லாமிய நாடு இல்லை என்பதுதான் அவலம். அதேசமயம் அந்த ஆதரவுக் குரல், சீனாவின் இன அழிப்பு நடவடிக்கைகளை எந்தளவுக்குக் கட்டுப்படுத்தும் என்பதுதான் மிகப் பெரிய கேள்வி.

கடந்த 1949 இல் சீனா, ஜிங்ஜியாங் பிரதேசத்தை ஆக்கிரமித்தது. இதனால், காலங்காலமாக பாகிஸ்தான் - சீன எல்லையான உய்குர் பகுதியில் சுதந்திரமாக வாழ்ந்து வந்த இஸ்லாமிய மக்கள் தங்கள் உரிமைகளை இழந்தனர். கடந்த 2009 இல் ஏற்பட்ட இனக்கலவரத்துக்குப் பின் அவர்கள் நிலைமை மேலும் கூட்டத்தில் 22 மேற்கு நாடுகள் சேர்ந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டன. அதில், முகாம்களில் உய்குர் இஸ்லாமியர்கள் துன்புறுத்தப்படுவதைக் கண்டித்தும் உடனடியாக முகாம்களை மூடக்கோரியும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, கனடா, ஜப்பான், நியூசிலாந்து உட்பட 22 நாடுகள் இந்தக் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன. இந்த நடவடிக்கை உய்குர் இஸ்லாமியர்களுக்கு ஆதரவான ஒரு கூட்டு முயற்சியாக இருந்தாலும் எதிர்பார்த்த தாக்கத்தை அது ஏற்படுத்துமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏனெனில், துருக்கி உட்பட எந்த ஓர் இஸ்லாமிய நாடும் இதில் கையெழுத்திடவில்லை.

இது குறித்துப் பேசும் சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர்கள், "முகாம்களில் அடைக்கப்பட்டிருப்பவர்களுக்கு இணையாக வெளியில் இருப்ப அனுபவிக்கும் உய்குர் இஸ்லாமியர்களுக்கு ஆதரவாக களத்தில் இறங்கி நேரடியாக உதவ யாரும் முன்வரவில்லை. அரசியல், பொருளாதார ரீதியாக சீனா திருப்பித்தாக்கும் என்பதால், பிற நாடுகள் அடக்கிவாசிக்கின்றன. குறிப்பாக மியன்மார், காசா, ஆப்கானிஸ்தானில் வசிக்கும் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு பொங்கி எழுந்த இஸ்லாமிய நாடுகள், உய்குர் விடயத்தில் தொடர்ந்து மௌனம் காக்கின்றன. கடந்த 10 ஆண்டுகளில் ஓர் இஸ்லாமிய நாடு கூட சீனாவை எதிர்த்து அறிக்கை வெளியிடவில்லை.

இஸ்லாமிய நாடுகளின் விசுவாசத்துக்குப் பின்னால் இருப்பது வர்த்தக நலன் மட்டுமே. மத்திய தரைக்கடல் நாடுகளுக்கு சீனாதான் மிகப் பெரிய கச்சாய் எண்ணெய், எரிவாயு இறக்குமதியாளர். தெற்காசிய இஸ்லாமிய நாடுகளின் உற்பத்திப் பொருள்களுக்கு சீனா மிகப்பெரிய சந்தை.



பரிதாபமானது. உய்குர் இஸ்லாமியர்களைப் பிரிவினைவாதிகளாக சித்திரித்த சீனா, அவர்கள் மீது அடக்குமுறைகளைத் தீவிரப்படுத்தியது.

மேலும் சீனாவில் வாழும் இஸ்லாமியர்கள், ஐந்து ஆண்டுகளுக்குள் சீனக் கலாசாரத்துக்கு முழுமையாக மாறிவிட வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டது. ஜிங்ஜியாங் நகரில், இஸ்லாமியப் பெண்கள் பர்தா அணிவது, ஆண்கள் நீளமாகத் தாடி வளர்ப்பது, மத ரீதியான கல்வி கற்பது, நோன்பு இருப்பது ஆகியவை தடை செய்யப்பட்டன.

எதிர்ப்பாளர்கள், சந்தேகத்துக்குரிய நபர்கள் எந்த விசாரணையும் இல்லாமல் தனி முகாம்களில் அடைக்கப்பட்டனர். அப்படி சிறையில் அடைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இருபது இலட்சத்தைத் தாண்டிவிட்டது என்கின்றன மனித உரிமை அமைப்புகள்.

அண்மையில் ஜெனிவாவில் நடந்த மனித உரிமை குழுவின் 41 ஆவது பொதுக் வர்களும் சித்திரவதைகளை அனுபவிக்கிறார்கள். ஜிங்ஜியாங், கஷ்கர் மாகாணங்கள் திறந்தவெளி சிறைச்சாலைகளைப்போல இருக்கின்றன. நூறு அடிக்கு ஒரு கண்காணிப்புக் கமரா, சோதனைச் சாவடிகள், காவலர்கள் என கெடுபிடிகள் ஏராளம். உய்குர் இஸ்லாமியர்கள், தெருக்களில் சகஜமாக நடமாடவோ சுதந்திரமாகப் பேசவோ முடியாது.

பள்ளிக் குழந்தைகளும் கூட விசாரணைக்கு உள்ளாகின்றனர். மசூதிகளில் தொழுகையைக்கூட கண்காணிப்பு கமராக்கள் கண்காணிக்கின்றன.

கொடுமையின் உச்சக்கட்டமாக உய்குர் குடும்பங்களிலிருந்து அவர்களின் குழந்தைகளை தனியாகப் பிரித்து உண்டு உறைவிடப் பள்ளிகளில் தங்க வைத்து, சீனக் கலாசாரம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இதுவரை 400 குழந்தைகள் காணாமல் போயுள்ளனர்" என்கிறார்கள்.

இத்தனை துன்பங்களை இப்படி பல இஸ்லாமிய நாடுகள் சீனாவைச் சார்ந்திருக்கின்றன. பாகிஸ்தானின் நிலைமை இன்னும் பரிதாபம். பில்லியன் கணக்கில் உதவும் சீனாவை அது பகைத்துக்கொள்ள முடியாததால், இந்தக் கொடுமையையெல்லாம் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது.

சீனாவின் மனித உரிமை மீறல்களை ரஷ்யாவும் கண்டுகொள்ளவில்லை. சீனா மீது வர்த்தகப் போர் தொடுத்திருக்கும் அமெரிக்காவும் 22 நாடுகளின் கூட்டறிக்கையில் கையெழுத்திடவில்லை. தங்களது தேசிய, புவி, வர்த்தக, அரசியல் நலன்களுக்கு ஏற்றவாறு உலக நாடுகள் உய்குர் பிரச்சினையை அணுகுவதால், அது சீனாவுக்கு சாதகமாக இருக்கிறது.

சீனாவுக்கு எதிரான 22 நாடுகளின் குரல், எதிர்காலத்தில் வலுப்பெறுமா? என்பது தெரியாது. ஆனால், உய்குர் மக்களுக்காக எழுந்திருக்கும் முதல் ஆதரவுக் குரல் நம்பிக்கையை விதைத்திருக்கிறது!

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : புதிய பூமி
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



சின்னவளை முகம் சிவந்தவளைநான்
சேர்த்துக் கொள்வேன் கரம் தொட்டு
சின்னவளை முகம் சிவந்தவளைநான்
சேர்த்துக் கொள்வேன் கரம் தொட்டு

என்னவளைக் காதல் சொன்னவளை
நான் ஏற்றுக் கொள்வேன் வளையிட்டு
வந்தவளைக் கரம் தந்தவளை
நீ வளைத்துக் கொள்வாய் வளையிட்டு
பூக்குவளை கண்கள் கொண்டவளை புது
பூப் போல் பூப் போல் தொட்டு

தூயவளை நெஞ்சைத் தொடர்ந்தவளை
மெல்லத் தான் தொட்டால் துவளும்
பால் மழலை மொழி படித்தவளை
சுகம் பட்டால் பட்டால் படியும்

கன்னம் மாதுளை கனிந்த சேயிழை
கரைத்தால் கரையாதோ
இரு கண்ணால் சொன்னால் பக்கம்
வந்தால் தந்தால்நெஞ்சில் அணைத்தால் அடங்காதோ

வந்தவளைக் கரம் தந்தவளை
நீ வளைத்துக் கொள்வாய் வளையிட்டு
என்னவளைக் காதல் சொன்னவளை
நான் ஏற்றுக் கொள்வேன் வளையிட்டு

வான மழை போல் ஆனவளை
சுவை எங்கே எங்கே மறப்பாய்
நீ அவளை விட்டுப் போகும் வரை
அது இங்கே இங்கே இருக்கோ

மின்னும் கை வளைமிதக்கும்
பெண்களை அசைத்தால் அசையாதோ
அது இன்னும் கொஞ்சம் என்று
பெண்ணைக் கெஞ்சும் வரை
சுவைத்தால் சுவைக்காதோ

வந்தவளைக் கரம் தந்தவளை
நீ வளைத்துக் கொண்டாய் வளையிட்டு
பூக்குவளை கண்கள் கொண்டவளை
புது பூப் போல் பூப் போல் தொட்டு
சின்னவளை முகம் சிவந்தவளை
நான் சேர்த்துக் கொண்டேன் கரம் தொட்டு
என்னவளைக் காதல் சொன்னவளை
நான் ஏற்றுக் கொண்டேன் வளையிட்டு



விக்ரம் தமிழ் சினிமாவில் ஹேட்டர்ஸ் என்றே இல்லாத நடிகர். ஆனால், அவரே, ஒரு ஹிட் கொடுக்க பல வருடங்கள் போராடி வருகின்றார். அப்படியிருக்க அந்த வெற்றி இதிலாவது கிடைத்ததா? பார்ப்போம்.

விக்ரம் படத்தின் முதல் காட்சியிலேயே அடிபட்டு இரண்டு பேரால் துரத்தப்பட்டு வருகின்றார். அப்படியிருக்க அவரை ஒரு மோட்டார் சைக்கிள் மோத, அந்த இடத்திலேயே மயக்க மடைகின்றார். அங்கிருந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கின்றனர் பொலிஸார்.

அந்த வைத்தியசாலையில் புதிதாக வேலைக்கு சேர்ந்திருப்பவர் தான் அபிஹாசன். தன் மனைவி அக்ஷரா கர்ப்பமாக இருக்க, அவரை தனியே வீட்டில் இருக்க வைத்து விட்டு, நைட் ஷிப்ட் வேலைக்கு செல்கிறார். அப்படி ஒருநாள் வேலை முடித்து வீட்டிற்கு வர, அபியை அடித்து விட்டு அக்ஷராவை ஒருவர் கடத்த, பிறகு விக்ரமை அந்த வைத்தியசாலை விட்டு வெளியே கொண்டு வர வேண்டும், என மிரட்டப்படுகின்றார். அவரும் வேறு வழியில்லாமல் விக்ரமை வெளியே கொண்டு வர, அதன் பின் நடக்கும் அதிரடி திருப்பங்களே இந்த கடாரம் கொண்டான்.

விக்ரம் என்ன கதாபாத்திரம் கொடுங்க நான் ரெடிப்பா என்று மிரட்டிவிடுகின்றார், அப்படித்தான் இந்த கேகே கதாபாத்திரமும், ஏதோ ஹொலிவுட் ஹீரோ போல் இருக்கின்றார். படத்தில் இவர் பேசும் வசனங்களை விரல் விட்டு எண்ணி விடலாம், 10 நிமிடம் பேசினாலே அதிகம்.

ஏனெனில் விக்ரம் வருவதே குறைந்த நேரம் தான், ஆம், விக்ரமை விட ஸ்கிரீனில் நிறைய வருவது அபிஹாசன் தான், ஆனால், அவரும் முதல் படம் என்பது போலவே தெரியாமல் தன் மனைவியை தேடும் கணவனாக முகத்தில் பதற்றமும், வலியையும் நன்கு கொண்டு வந்துள்ளார்.

ஆனாலும், நல்ல எமோஷனல் காட்சியில் இன்னும் கொஞ்சம் பயிற்சி தேவை. அக்ஷரா ஹாசன் வெறுமனே வந்து செல்வார் என்று பார்த்தால், க்ளைமேக்ஸில், அந்த பொலிஸிடம் மோதும் காட்சி, நம்மை பதற்றத்தின் உச்சிக்கே கொண்டு சென்று விடுகின்றது. படத்தின் மிக முக்கியமான ஹைபொயிண்ட் அந்த காட்சியை சொல்லலாம்.

இதை தாண்டி நிறைய புதுமுகங்கள் தான் படத்தில், அதிலும் மலேசியா களம், அதனாலேயே நாம் தமிழ் படம் தான் பார்க்கின்றோமோ என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது, அடுத்தடுத்து என்ன, யார் இதை செய்தது என்ற பதற்றம் பெரியளவில் ஓடியன்ஸிற்கு வரவில்லை. அதுதான் கொஞ்சம் மைனஸ்.




படத்தின் மிகப்பெரிய டுவிஸ்டும் இடைவேளையின் போதே தெரிகின்றது. அதைத் தொடர்ந்து கிளைமாக்ஸில் ஏதோ டுவிஸ்ட் உள்ளது என்று நினைத்தால், ப்ளாட்டாக சென்று படமே முடிந்து விடுகின்றது.

விக்ரம் படம் முழுவதும் செம்ம ஸ்டைலிஷாக வந்தாலும், கூஸ்பம்ஸ் என்று சொல்லும்படி ஒரு காட்சியும் இல்லை என்பது வருத்தம். மேலும், படத்தின் ஒளிப்பதிவு சுப்பர். இவை எல்லாத்தையும் விட படத்தையே தாங்கிப்பிடிப்பது ஜிப்ரானின் பின்னணி இசை தான், மிரட்டல்.

விக்ரம் வழக்கம் போல் தனக் கேயுரிய ஸ்டைலில் ஸ்கோர் செய்துள்ளார்.

அக்ஷரா ஹாசன், லேடி பொலிஸ் மோதிக்கொள்ளும் காட்சி. மேலும் பைக் ஸ்டெண்ட் காட்சிகள் படத்தின் இரண்டாம் பாதி, முதல் பாதியை விட கொஞ்சம் வேகமாக செல்கின்றது. படத்தின் டெக்னிக்கல் விடயங்கள், குறிப்பாக ஜிப்ரானின் இசை.

பெரிய டுவிஸ்ட் சஸ்பென்ஸ் என இல்லாதது. முதல் பாதி மிக மெதுவாக நகரும் காட்சிகள் என்பன படத்தில் வந்த மைனஸ். மொத்தத்தில் பெரிய பரபரப்பு இல்லை என்றாலும், எங்கும் நம்மை போர் அடிக்காமல் கொண்டு சென்றதே இந்த கடராம் கொண்டானின் வெற்றி.

---




கூர்கா என்ற சொல்லை நாம் கேட்காமல் இருந்திருக்க மாட்டோம். காவலாளியாக இரவு நேரத்தில் உலாவந்து கொண்டுருக்கும் கூர்க்கர் இன மக்கள் இன்னும் பாரம்பரியமான அதே தொழிலை தான் செய்து வருகிறார்கள். அவர்களை பற்றிய கதை தான் இது. சரி.. இந்த கூர்கா எப்படிப்பட்டவர் என தெரிந்து கொள்ளலாம்.

கதைப்படி யோகி பாபு கூர்கா வம்சத்தை சேர்ந்தவர். இவருக்கு பொலிஸ் ஆக வேண்டும் ஆசை. இதற்காக என்னென்னவோ செய்கிறார். ஆனால் ஆசை நிறைவேறவில்லை. வேண்டா வெறுப்பாக செக்யூரிட்டியாக வேலை செய்கிறார். எதிர்பாராத விதமாக பெண் அமெரிக்க தூதரை சந்திக்கிறார். அவர் அழகில் மயங்கி அவர் மீது காதல் வயப்படுகிறார். பின்னர் என்ன? ஒரே ட்ரீம்ஸ் தான்.

ஒருநாள் தீவிரவாத செயலில் ஒரு கும்பல் ஈடுபட பெரிய ஷொப்பிங் மாலில் இவர் சிக்கிக்கொள்கிறார். அங்கிருந்த மக்களும் மாட்டிக்கொண்டு தவிக்கிறார்கள். அங்கு வரும் யோகிபாபுவும் இதை அறிந்து கொண்டார்.

தான் உயிராக நினைக்கு அந்த பெண்ணை காப்பாற்ற இவர் களத்தில் இறங்குகிறார். அந்த கும்பல் யார், அவர்களின் நோக்கம் என்ன, அந்தப் பெண் தூதருக்கு என்ன தொடர்பு, மக்கள் காப்பாற்றப்பட்டார்களா, யோகி பாபு என்ன செய்தார் என்பதே இந்த கூர்கா.

இரவில் விசில் சத்தம் கேட்காமல் நாம் இருந்திருக்க மாட்டோம். நாம் நிம்மதியாக உறங்க தங்கள் தூக்கத்தை தொலைக்கும் கூர்கா மக்களை சமூகத்தில் நாம் மனிதராக மதிப்பதில்லை. கூர்க்கர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. ராணுவ வீரர்களுக்கு இணையாக பலம் பெற்றவர்கள்.

நாட்டின் பல பகுதிகளிலும் பிரிந்து வாழ்ந்தாலும் தன் பாரம்பரிய தொழிலை செய்து வருகிறார்கள். தீபாவளி, பொங்கல் டிப்ஸ் வாங்க வரும் சாதாரண மக்கள் என நம்மில் பலரும் நினைக்கிறோம்.

இந்நிலையில் கூர்காவாக வரும் யோகி பாபு ஒரு சீரியஸ் ஆன நபர் போல இல்லாமல் வழக்கமான தன்னுடைய காமெடி, கவுண்டர், பொடி லாங்குவேஜ் என கலந்து அந்த கூர்காவாக மாறியுள்ளார்.

ஒரு சாதாரண கூர்காவாலும் சமூகத்திற்கு நல்ல காவலாளியாக இருக்க முடியும், அவர்கள் மதிக்கப்பட வேண்டும் என அவர் படத்தில் சொல்லியிருக்கிறார். அவரின் மனம் ஈர்த்த இளம் பெண் அமெரிக்க தூதரை யோகி பாபு காதலிக்கும் விதம் எண்டெர்டெயின்மெண்ட் ஆன ஸ்டைல். பிறகு என்ன ஒரே காதல் கனவு தான்.

சினிமாவில் ஒரு நேரத்தில் காமெடியில் முக்கிய நடிகராக இருந்த சார்லியை நீண்ட நாட்கள் கழித்து படத்தில் பார்த்தது மகிழ்ச்சி. யோகிபாபுவுக்கு நண்பராக வரும் இவரும் சேர்ந்துகொண்டு செய்யும் ரகளை மக்களின் கவனம் ஈர்க்கிறது. காதல் காட்சிகள் குறைவு. ஆனாலும் சிரிப்பும் தான். படத்தில் அவர்கள் தவிர ஆடுகளம் நரேன், மனோபாலா, தேவதர்ஷினி என வேறு சிலரும் இதில் நடித்திருக்கிறார்கள்.

இயக்குநர் சாம் ஆண்டன் ஏற்கனவே டார்லிங், எனக்கு இன்னொரு பேரு இருக்கு என கவனம் ஈர்த்த படங்களை இயக்கியவர். யோகிபாபுவை ஒரு வித்தியாசமான ஹீரோவாக காட்டியிருக்கிறார்.



படத்தின் இரண்டாம் பாதியில் மிகவும் விறுவிறுப்பு. தியேட்டரில் படம் பார்க்க வந்தவர்களை சிரிக்கவைத்து விடுகிறது.

அஜித், விஜய், விஷால், சிம்பு, தனுஷ், ரஜினி போன்ற நடிகர்களின் முக்கிய விடயங்களை பெர்போர்மன்ஸில் கொண்டு வந்து அனைத்து ரசிகர்களையும் ஈர்க்கிறார்.

மேலும் அரசியல் சர்ச்சை, பாலியல் சர்ச்சைக்குரிய முக்கிய நபர்கள், டிவி சனல் என பலரையும் உள்ளே இழுத்து விட்டு ஆட்டம் காட்டுகிறார்கள்.

படத்தில் வில்லனாக மாறும் ஒரு இராணுவ வீரரின் பின்னாலும் ஒரு முக்கிய வடயத்தை வைத்திருக்கிறார்கள். இவர்களையும் விட்டுக் கொடுக்கவில்லை.

தர்ம பிரபுவில் விட்டதை கூர்காவில் பிடித்துவிட்டார். காமெடி, கவுண்டர் வசனங்கள் சிரிப்புக்கு காரண்டி.

கூர்கா, ராணுவ மக்கள் பற்றி நல்ல சோசியல் மெசேஜ்.

முதல் பாதி மெதுவாக நகர்வது போல தெரிந்தாலும் இரண்டாம் பாதி வேகமாக நகர்ந்து விடுகிறது.

மொத்தத்தில் கூர்கா படம் மக்களின் மனம் கவரும். கூர்கா காவலாளிகள் மீதான அன்பு பெருகும்.




# இலங்கை நீதித்துறையில் அமெரிக்கா தலையிடாது

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவரின் முகநூல் கலந்துரையாடலில் தெரிவிப்பு



சர்ச்சைகளைக் கிளப்பியுள்ள அமெரிக்க உடன்பாடுகள் தொடர்பாக, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் மேுகநூல் ஊடாக நடத்திய கலந்துரையாடலின் தொகுப்பு.

அமெரிக்க- இலங்கை ஒத்துழைப்பு அல்லது வேறு எந்த விடயம் பற்றி, பரப்புரை செய்யப்படும், தவறான தகவல்கள் மற்றும் தவறான தகவல்களை அடையாளம் காண்பது குறித்தும், எவ்வாறு ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பது குறித்தும் கலந்துரையாட விரும்புகிறேன்.

அமெரிக்கா-இலங்கை இடையிலான மூன்று ஒத்துழைப்பு உடன்பாடுகள் தொடர்பான அண்மைய ஊடக அறிக்கைகளுக்கு பதிலளிப்பதில் இருந்து ஆரம்பிக்கலாம்.

இந்த உடன்பாடுகளில் ஒன்று, வருகைப் படைகள் உடன்பாடு, இது இன்னமும் பேசப்பட்டு வருகிறது. இன்னமும் இறுதி செய்யப்படவில்லை.

இன்னொன்று கையகப்படுத்தல் மற்றும் குறுக்குச்சேவைகள் உடன்பாடு. இது 2007இல் கையெடுத்திடப்பட்டு, 2017 இல், புதுப்பிக்கப்பட்டது. இது இராணுவ ஒத்துழைப்பை குறிப்பாக, கூட்டு பயிற்சிகள், இடர் மீட்பு போன்ற விடயங்களில், வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தைக் கொண்டது.

மூன்றாவது, இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க, மிலேனியம் சவால் நிறுவனத்தின், 480 மில்லியன் டொலர் அபிவிருத்தி உதவி பொதியை உள்ளடக்கியது.

இவை தொடர்பான, சில அடிப்படை உண்மைகளை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இராணுவத்தளத்தை அமைப்பது, அல்லது இலங்கையில் நிரந்தர இராணுவ இருப்பை நிறுவுவது தொடர்பாக அமெரிக்காவுக்கு எந்த நோக்கமும் கிடையாது. அதேபோல, மிலேனியம் சவால் நிறுவனம் மூலம் அமெரிக்கா எந்த நில உரிமையைப் பெறவோ, கட்டுப்பாட்டை பேணவோ முனையவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இலங்கை மக்களுக்கு அமெரிக்கா ஆதரவையும் உதவிகளையும் வழங்கும்.

அமெரிக்க -இலங்கை படைகளுக்கு இடையிலான பொருட்கள் மற்றும் சேவைகளை பரிமாறிக் கொள்ளும் போது, அந்த பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கட்டணம் செலுத்துவதற்கான ஒரு சட்டக் கட்டமைப்பை வழங்குவதற்கே, கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவைகள் உடன்பாடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் தற்காலிகமாக இலங்கையில் பயிற்சிகள் அல்லது அதிகாரப்பூர்வ கடமைக்கு வரும், அமெரிக்க படையினர் மற்றும் பாதுகாப்புத் திணைக்களத்தின் சிவில் பணியாளர்களின் நிலையை வருகைப் படைகள் உடன்பாடு விபரிக்கிறது.

மிலேனியம் சவால் நிறுவன உடன்பாட்டுக்கும், வருகைப் படைகள் உடன்பாடு மற்றும் கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவைகள் உடன்பாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அது ஒரு இராணுவ உடன்பாடும் கிடையாது.

மிலேனியம் சவால் நிதிய கொடை, பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதற்கான ஒரு அபிவிருத்தி உதவி உடன்பாடு ஆகும். இது அமெரிக்க மக்களிடமிருந்து கிடைத்த பரிசே தவிர, கடன் அல்ல.

இந்த உடன்பாடுகளைப் பற்றி அதிகம் பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எனது பார்வையில், தவறான தகவல்கள், குறிப்பாக சமூக ஊடகங்களில் பரவும் தவறான கருத்துகள், எமது ஜனநாயக நாடுகளின் ஒருமைப்பாடு மீதான நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

நாங்கள் பேச்சு நடத்துகின்ற வருகைப் படைகள் உடன்பாட்டில், பயிற்சி, ஒத்திகைகள் மற்றும் இரண்டு நாடுகளுக்கும் நன்மையளிக்கக் கூடிய பரிமாற்றங்களுக்கான பரஸ்பர வசதிகளை அளிக்கிறது. அதன் அர்த்தம், தளங்களை அமைப்பதோ, அமெரிக்க படையினரின் நிரந்தர பிரசன்னமோ அல்ல.

இலங்கை தனது எல்லை மற்றும் பிராந்திய நீர் அல்லது வான் வெளியில் அமெரிக்கப் படையினர், கப்பல்கள் மற்றும் விமானங்களின் நுழைவு அல்லது வெளியேறுவதற்கான ஒப்புதலை அளிப்பதற்கும், மறுப்பதற்குமான அனைத்து இறைமை உரிமைகளையும் கொண்டிருக்கும்.

வருகை படைகள் உடன்பாடு குறித்து இலங்கை அரசாங்கத்துடன் நாங்கள் இன்னமும் பேச்சு நடத்தி வருகிறோம்.

இடர் மீட்பு, கூட்டுப் பயிற்சிகள் போன்ற சூழல்களில், நடைமுறைகளை முன்கூட்டியே உருவாக்கி, வசதிகளை ஏற்படுத்தலாம். வருகைப் படைகள் உடன்பாட்டின் கீழ், எந்தவொரு படையினரும், சரியான ஆவணங்கள் இன்றியோ, முறையான அனுமதியைப் பெறாமலோ, இலங்கைக்குள் நுழைய முடியாது.

பலமான, இறைமை கொண்ட, சுதந்திரமான இலங்கைக்கே அமெரிக்கா ஆதரிக்கிறது. இந்தோ-பசுபிக் பாதுகாப்புக்கு இலங்கையின் பங்களிப்பை நாங்கள் மதிக்கிறோம்.

இலங்கை இந்த விடயத்தில் இன்னும் திறமையாக இருக்க உதவுவதே, வருகை படைகள் உடன்பாடு குறித்து நாங்கள் பேச்சு நடத்துவதில் ஆர்வம் கொண்டுள்ளதற்குக் காரணம் ஆகும்.

சீனாவுக்கும் வருகை படைகள் உடன்பாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இது இலங்கையுடனான நீண்டகால இருதரப்பு கூட்டு பற்றியது.

இலங்கையின் நீதித்துறையில் அமெரிக்கா தலையீடு செய்வதாக அண்மையில் ஊடகங்களில் நிறைய தவறான தகவல்கள் வந்துள்ளன. இலங்கையின் நீதித்துறையில் அமெரிக்கா தலையிடவோ, அல்லது தலையீடு செய்யப் போவதோ அல்லது நேரடியாக ஈடுபடவோ இல்லை.

இலங்கை அரசாங்கத்தின் வேணடுகோளின் பேரில் இலங்கை நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களுக்கு எமது நாடு பயிற்சி அளித்துள்ளது. இந்தப் பயிற்சியில் நிதிமோசடி எதிர்ப்பு மற்றும் பயங்கரவாத நிதியுதவி போன்ற- புதிய வகை குற்றங்கள் குறித்த சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதை உள்ளடக்கியது.

ஒரு வலுவான மற்றும் சுயாதீன நீதித்துறை, ஒரு வலுவான ஜனநாயகத்தின் தூண் ஆகும். அமெரிக்க சட்டவாளர் சங்கத்தின் கிளையை இலங்கையில் அமைக்கும் நோக்கம் ஏதும் கிடையாது.

இலங்கை மக்களே தற்போதைய அரசாங்கத்தை உருவாக்கினார்கள். இன்னும் சில மாதங்களில் புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வார்கள். மக்களின் விருப்பங்களை அமெரிக்கா ஆதரிக்கிறது. எந்த அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவர்களுடன் பணியாற்றத் தயாராக உள்ளது.

இலங்கைக்கு நாங்கள் ஒரு ஆண்டுக்கு 40 மில்லியன் டொலர் அபிவிருத்தி உதவிகளை வழங்குகிறோம், பெரும்பாலும் யுஎஸ் எய்ட் மூலம் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. இது ஒரு அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்தி உதவி வழங்கும் நிறுவனமாகும்.

மிலேனியம் சவால் நிறுவனம் மற்றொரு உதவி வழங்குநராகும்.

எமது திட்டங்கள் அனைத்தும் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையிலானவை. பால் பண்ணைத் தொழிலின் விருத்திக்கு ஆதரவு அளிப்பது தொடக்கம், அமெரிக்கன் கோணர்களில் ஆங்கில வகுப்புகளை நடத்துவது வரை, பல உதவி முயற்சிகளை உள்ளடக்கியது.

அமெரிக்கப் படையினர் இலங்கையில் குற்றமிழைக்கும் போது, இங்கு தண்டனை வழங்கப்பட முடியாது என்ற கரிசனையை எழுப்பியதற்கு நன்றி. கடினமான மற்றும் சோகமான சூழ்நிலைகள் கூட ஏற்படலாம்.

வருகைப் படைகள் அல்லது சோபா போன்ற ஒரு உடன்பாட்டைக் கொண்டிருப்பதற்கு ஒரு காரணம், அவற்றை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து முன்கூட்டியே ஏற்றுக் கொள்வது தான்.

பல நாடுகளில் ஒரு குறிப்பிட்ட சட்டத்தை, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்த வேண்டிய உடன்பாடுகள் உள்ளன.

உதாரணமாக, வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் படையினர் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டபோது, அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டு, இலங்கை சட்டத்தின் கீழ் விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொண்டனர். இத்தகைய நிகழ்வுகள் மிகவும் அரிதானவை.

இலங்கையின் பன்முகத்தன்மையையும், நாட்டின் இறையாண்மையையும் அமெரிக்கா மதிக்கிறது. அந்த மதிப்பு எமது பாதுகாப்பு ஒத்துழைப்பின் இதயத்தில் இருக்கிறது. அமெரிக்காவின் சிறந்த வலுவான இறைமையுள்ள பங்காளராகவே இலங்கை இருக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர், இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய, தாக்குதல்கள் குறித்த விசாரணைக்கு எவ்.பி.ஐ. அமைப்பின் ஆதரவை வழங்கினோம்.

எதிர்காலத்தில் தாக்குதல்களைத் தடுப்பதற்கு இலங்கையின் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களுடன் கூட்டுச் சேருவதற்கு இன்னும் பல வழிகளைத் தேடுவோம்.

எல்லா நாடுகளையும் அச்சுறுத்தும் ஒரு புதிய வகையான பயங்கரவாதம் இலங்கையில் உள்ளது.

நீண்டகால ஒத்துழைப்பு மற்றும் ஜனநாயகத்தைப் பின்பற்றுவதன் ஊடாக, வலுவான ஒத்துழைப்புகள், சட்டத்தின் ஆட்சி, சிவில் சுதந்திரங்களுக்கு தொடர்ந்து மதிப்பளிப்பதன் மூலம் மட்டுமே பயங்கரவாதத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என்பதை நாங்கள் அறிவோம்.

பொருளாதார ரீதியில்,இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாக அமெரிக்கா விளங்குகிறது. ஆண்டுதோறும் இலங்கை ஏற்றுமதி செய்யும் 11.7 பில்லியன் டொலர் பொருட்களில், கிட்டத்தட்ட 3 பில்லியன் டொலர் பொருட்கள் அமெ ரிக்க சந்தைகளுக்கே அனுப்பப்படுகின் றன.

இலங்கையில் இருந்து அமெரிக்கா பெரும்பாலும் ஆடைகளையே இறக்குமதி செய்கிறது. இறப்பர், தொழில்துறை பொருட்கள், இரத்தினக் கற்கள், தேயிலை மற்றும் வாசனைப் பொருட்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இலங்கைக்கான அமெரிக்க ஏற்றுமதியில் விலங்கு தீவனங்கள், மருத்துவ உபகரணங்கள், சோயா பீன்ஸ், பிளாஸ்டிக், பால் பொருட்கள், கோதுமை, துணி மற்றும் ஆடைகள் ஆகியன அடங்கும்.

# facebook

## நாட்டுக்காக நாம் உழைப்போம்

ஹெக்டர் யாபா தலைமையின் கீழ்
கேடில்லாத நாடதனை
கட்டி எழுப்பும் நோக்குடனே -நற்
காரியமாற்ற யாம் எழுந்தோம்

குற்றம் குறைகள் நம்மிடையில் - மனித
குலத்தில் தோன்றுதல் சகஜமன்றோ?-நற்
பற்றுடன் குறை களை பணிகளிலே -இப்
பாரினில் யாம் நடை பயில்கின்றோம்

பக்க சார்புகள் எம்மிலில்லை!
பரஸ்பரம் ரகசியம் பேணிடுவோம்!
திக் கெங்கிலும் எம் பணி உயர- யாம்
திடசங்கல்பம் கொண்டுள்ளோம்

சுற்றம் சூழல் உறவுகளுள் -எழும்
சிறு சிறு தவறு பிணக்குகளை
கற்றுத் தேர்ந்த பயிற்சியுடன்
களைத்(ந்)தவர் இணக்கப் பாடடைய- எமை
முற்று முழுதாய் அர்ப்பணித்து
முழுதாய் நாட்டுக் குழைத்திடுவோம்.

தம்பாட்டியூர் தவபாலன்
மத்தியஸ்தர்,
இல. 257, மத்தியஸ்த குழாம்,
ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்.

21.07.2019 இன்று ஆரம்பமாகும் மத்தியஸ்த விழாவையொட்டி இக்கவிதை பிரசுரமாகிறது.

## மகளின் அருமை



புதுசா கல்யாணம் ஆன கணவன் மனைவி இடையே ஒரு ஒப்பந்தம்.இன்று ஒரு நாள் மட்டும் யார் வந்தாலும் கதவை திறக்க கூடாது என்று முடிவெடுத்தனர்.

அன்றே கணவனுடைய அம்மா அப்பா வந்தனர். இருவரும் அவர்கள் வருவதை ஜன்னல் வழியாக பார்த்துவிட்டனர்.இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.கணவனுக்கு கதவை திறக்க வேண்டும் என்ற ஆசை.ஆனால் ஒப்பந்தம் போட்டு விட்டதால் அதை மீற மனமின்றி கதவை திறக்கவில்லை அவன்.

அவர்கள் வீட்டில் யாரும் இல்லை என்று நினைத்து திரும்பி போய் விட்டனர். கொஞ்ச நேரம் கழித்து மனைவியின் அம்மா அப்பா வந்தனர். கதவை தட்டினார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆனால் மனைவிக்கு கண்கள் கண்ணீரால் குளமானது.

என்னால் கதவை திறக்காமல் இருக்கமுடியாது என்று சொல்லி கதவை திறந்தாள். ஆனால் கணவன் ஒன்றும் சொல்ல வில்லை.வருஷங்கள் உருண்டோடின. இரண்டு ஆண் குழந்தை பிறந்தது.மூன்றாவதாக பெண் குழந்தை பிறந்தது.

கணவன் பெண் குழந்தை பிறந்த சந்தோஷத்தில் பெரிய அளவில் செலவு செய்து. அனைவருக்கும் பார்ட்டி கொடுத்து கொண்டாடினான்.அதற்கு மனைவி!!!

இரண்டு ஆண் குழந்தை பிறந்த போது இவ்வளவு பெரிய அளவில் கொண்டாட வில்லை.பெண் குழந்தை பிறந்தவுடன்இவ்வளவு பெரிய பார்ட்டி கொடுக்கிறீங்களே ஏன் என்று கேட்டாள்.அதற்கு கணவன்.ரொம்ப நிதான மாக சொன்னான் எதிர்காலத்தில் எனக்காக கதவை திறக்கஒரு பெண் பிறந்துவிட்டாள் என்றான் கர்வத்துடன். பெண் பிள்ளையைப் பெற்ற அனைவருக்கும் சமர்ப்பணம்..

## புரிந்துணர்வு

சாமி, என் கணவர் தினமும் குடித்துவிட்டு வந்து என்னை அடிக்கிறார். என்னை சந்தேகப்படுகிறார். வாழ்க்கையே நரகமாகிப் போச்சு. தற்கொலை செய்து கொள்ளக்கூட தோணுது.." ஒன்று ஞானியிடம் அழாக் குறையாக புலம்பி முறையிட்டாள் அவள்.

"மகளே, நான் ஒரு உபாயம் சொல்கிறேன். நீ சென்று ஒரு புலியின் மீசை முடி ஒன்றைக் கொண்டு வா. நான் அதை மந்திரித்துத் தருகிறேன். அவன் திருந்தி விடுவான்.."

அவளும் ஒரு புலியின் குகையைத் தேடிக் கண்டுபிடித்து. குகையருகில் மாமிசம் வைத்துவிட்டு மறைந்திருந்து பார்த்தாள். புலியும் மாமிசத்தை தின்றது. தினமும் தொடர்ந்து அவ்வாறு செய்தாள். ஒருநாள் அவள் மாமிசத்தை வைக்குப்போது, புலி அவளை நன்றியுடன் நோக்கியது. ஒரு முறை, அவள் மாமிசத்தை வைக்கும் போது, புலி அவளருகில் வந்து படுத்துக் கொண்டது.

அந்தப் பெண், அதனிடம் அனுமதி பெற்று ஒரு மீசை முடியை பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் ஞானியிடம் சென்றாள்.

"மகளே..! அந்த புலியிடம் காட்டிய பரிவில் நூற்றில் ஒரு பங்கு உன் கணவனிடம் காட்டு. அவன் பூனை கால்களை சுற்றிவருவான்..!" என்றார்.



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1783

### உமேஷ்



மனநிறைவு என்பது நம்மிடம் இயல்பாகவே உள்ள செல்வம்... ஆடம்பரம், அமைதி இன்மை என்பது நாமே தேடிக் கொள்ளும் வறுமை

### யாழன்

ஆயிரம் பேரை நண்பர்களாக வைத்திருப்பது உனக்குப் பெருமையல்ல.... ஆயிரம் பேர் எதிர்க்கும் போது உனக்காக அவர்களை எதிர்க்கக்கூடிய நண்பன் ஒருவனை வைத்திருப்பதே உனக்குப் பெருமையாகும்



### வினோதினி

உலகத்தின் குறைகளை எல்லாம் கண்டுபிடிக்கும் சிலருக்கு தன் குறைகளை மட்டும் தெரியாமல் போவதற்குப் பெயர்தான் சுயநலம்



### ராகவன்

நண்பனை நம்பு, துரோகியைக்கூட நம்பு... ஆனால் சொந்தங்களை நம்பாதே



### தமிழினி

நேரம் கிடைக்கும் போது
பேசுவது அன்பு
பேசுவதற்காகவே நேரம்
ஒதுக்கிப் பேசுவது
உண்மையான அன்பு
அன்பு அனைவருக்கும்
கிடைக்கும்.ஆனால்
உண்மையான அன்பு
அதிர்ஷ்டம் உள்ளவர்க்கே
கிடைக்கும்

### சியானா

நிறம் பார்க்கும் உலகமிது... இங்கே நிஜங்களை யாரும் ரசிப்பதுமில்லை, ஏற்பதுமில்லை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 190

## பசுப்பாலா? ஆடை நீக்கிய பால்மாவா?



அதிகரித்த கொலஸ்ரோல் நிலை உள்ளவர்களுக்கு பொதுவாக ஆடை நீக்கிய பால் மாவகை (Non fat) சிபார்சு செய்யப்பட்டு வருகின்றது. இந்த வகை பால்மாவிலே பசுப்பாலுடன் ஒப்பிடுகையில் கொழுப்பின் அளவு குறைவு என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இந்த வகையான பால்மா உற்பத்தியின் பொழுது பாலுக்கு பலவகையான் செயற்கையான மாற்றங்கள் செய்யப்படுகின்றன. அத்துடன் பல்வேறு வகையான இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.

இதனால் பாலின் இயற்கையான சுவையும் குன்றிப் போகின்றது. அத்துடன் இதன் விலையும் ஒப்பீட்டளவில் அதிகமாகும்.

ஆடைநீக்கிய பால்மா வகைகளுடன் ஒப்பிடும் பொழுது பசுப்பால் இயற்கையானது. இரசாயனங்கள் எதுவும் சேர்க்கப்படாதது. சுவையானது. மலிவானது. அனைத்து வகையான இயற்கையான ஊட்டச்சத்துக்களை கொண்டது. பசுப்பாலிலே கொழுப்பு வீதம் சற்று அதிகமாக இருந்தாலும் அது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கப் போவதில்லை. காரணம் மனிதன் உண்ணும் உணவின் கலோரி பெறுமானத்தில் 30% கொழுப்பு இருக்க வேண்டும். அந்தக் கொழுப்பு பால்மூலம் எமக்கு கிடைப்பது தீங்கு எதனையும் செய்து விடாது.

எனவே இயற்கையான உடன் பசுப்பால் ஆடை நீங்கிய பால்மா வகைகளிலும் பார்க்க சிறந்தது. அதிகரித்த கொலஸ்ரோல் நிலை உள்ளவர்களும் பசுப்பாலை பாதுகாப்பாக அருந்த முடியும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது மருத்துவ நிபுணர்

### கேள்வி பதில்

கேள்வி: கடந்த ஒரு வருட காலத்தில் 3 தடவைகள் எனது சலத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டது. 3 தடவையும் நான் வைத்திய சாலையிலிருந்து சிகிச்சை பெற்று வந்தேன். இது ஏன் ஏற்படுகிறது? இவ்வாறு சலத்தில் கிருமித்தொற்று ஏற்படுவதைத் தடுக்க நான் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** உங்களுக்கு ஏற்பட்டது சலத் தில் அடிக்கடி ஏற்படும் கிருமித்தொற் றாகும். (Recurrent urinary tract infection) இது பொதுவாகப் பக்றீரி யாவால் ஏற்படுகிறது. உங்களுக்குப் பொதுவாக ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு விதமான பக்றீரியாவால் கிருமித்தொற்று ஏற்பட்டிருக்கும்.

இரு தடவைகளுக்கு மேல் சலத்தில் கிருமித்தொற்று ஏற்பட்டால் 80% ஆன பெண்களில் மீண்டும் இவ்வாறு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு அதிகம். எனவே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கு சலத்தில் கிருமித்தொற்று ஏற்படுவதற் குரிய சாத்தியக்கூறு அதிகம். அத்துடன் கர்ப்பிணிப் பெண்கள், சலரோக நோயா ளிகள், சிறுநீரகக் கற்களால் பாதிக்கப்பட் டோர், சிறுநீரக வழியில் ஏற்படும் சுருக்கம், சிறுநீரகத் தொகுதியில் ஏற்ப டும் பாதிப்பு (Anatomical abnormalities) புற்று நோய்கள், HIV நோயாளி கள் ஆகியோரின் சலத்தில் கிருமித்தொ ற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு அதிகம்.

உங்களுக்கு அடிக்கடி சலத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டபடியால் வைத்தியர்கள் பெரும்பாலும் எல்லாப் பரிசோதனைகளையும் செய்திருப்பார்கள். எனவே நீங்கள் எந்தக் காரணத்தால் உங்களுக்கு அடிக்கடி சலத்தில் கிருமித்தொற்று ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு மீண்டும் சலத்தில் கிருமித் தொற்று ஏற்படுவதைத் தடுக்க நீங்கள் செய்ய வேண்டியவைகளாவன:

1.போதுமானளவு நீர் அருந்த வேண் டும். (2-3L/Day).


2.சலத்தைக் கட்டுப்படுத்தக்கூடாது. சலம் கழிக்க வேண்டுமென்ற உணர்வு ஏற்படும் போது சலம் கழிக்க வேண்டும்.

3.மலம் கழித்தபின் முன்பக்கமிரு ந்து பின்பக்கமாகக் கழுவவேண்டும். (Front to back washing the gentalia)

4.Sexual intercourse இற்கு முன் பெண்ணுறுப்பைக் கழுவி சுத்தம் பேண வேண்டும்.

உங்களுக்கு மீண்டும் சலத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டால் சிலவேளை களில் நீங்கள் தொடர்ச்சியாக சில காலங்களுக்கு கிருமிகொல்லி மாத்திரைகள் (low dose antibiotics)பாவிக்க வேண்டியிருக்கும்.






கேள்வி: 62 வயது நிரம்பிய எனக்கு 10 வருடங்களாக இடையிடையே நாரி யின் கீழ்ப்பகுதியில் நோ ஏற்படுகின்றது. ஆனால் வைத்தியர்கள் சொல்கிறார் கள் எல்லாப்பரிசோதனையும் எனக்கு நோமல் என்று. இதற்கு நான் என்ன செய்யலாம்?

**பதில்:** உங்களுக்கு ஏற்பட்டுள்ளது Low back pain எனப்படும் நாரியில் ஏற்படக்கூடிய ஒரு வலியாகும். இந்த நாரி நோவானது கூடுதலாக நாரிப்பகுதியிலுள்ள தசைகள், என்புகள், நரம்புகள், நாரிமுள்ளந்தண்டு, மூட்டுக்களிலிருந்து ஏற்படுகின்றது. தசைகளில் தசைநார் இறுக்கப்படுவதால்/ முறுக்கப்படுவதால் ஏற்படலாம்.

நாரி நோவுக்குரிய வேறு காரணங்களாவன, முள்ளந்தண்டென்புக் கால்வாய் சுருங்குதல், இரத்தத்தில் கல்சி யத்தின் அளவு குறைவடைதல், முள்ளந்தண்டென்பு மூட்டுவிலகுதல், தேய் வடைதல், சிறுநீரகத்தில் ஏற்படும் சிறுநீரகக் கற்கள், சிறுநீரில் ஏற்படும் கிருமித்தாக்கம் மற்றும் புற்றுநோய் (multiple myeloma) ஆகியனவாகும்.

இதில் உங்களுக்கு வைத்தியர்கள் எல்லாப் பரிசோதனையும் நோமல் (Normal) என்று கூறியபடியால் 2 ஆம் பந்தியில் கூறப்பட்ட காரணங்களுக்குரிய சாத்தியக்கூறு மிகக்குறைவு. உங்களு க்கு பெரும்பாலும் முதலாம் பந்தியில் கூறப்பட்ட காரணங்களே மிகப் பொருத் தமானது. இதற்கு நீங்கள் சிலவகை யான உடற்பயிற்சிகள் செய்வதன் மூலமோ, உடற் பருமன் அதிகமாயின் உடல் நிறையைக் குறைப்பதன் மூலமோ சில வகையான வலி நிவார ணிகளைப் பாவிப்பதன் மூலமோ குறை த்துக் கொள்ளலாம்.

இவ்வாறெல்லாம் செய்தும் உங்க ளுக்கு நாரிநோ குணமாகாவிடில் நீங் கள் வைத்திய ஆலோசனையைப் பெறு வது மிகவும் பொருத்தமானது. ஏனெனில் வேறும் சில பரிசோதனைகள் செய்ய வேண்டியிருக்கும்.

Dr.ஜே.தர்சிகா

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்